September 2018

# தமிழ்

9ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு






VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡളി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

அய் தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

September 2018 சுவடி — 8
ஓலை — 7

**வணக்கம் பல**

மனிதனுக்கு இன்பம் வரும்போது இருக்கும் மனநிலையை விடவும், துன்பம் வரும்போது இருக்கும் மனநிலைதான் காலத்துக்கும் அவன் சுமக்கும் நினைவாகிப் போகிறது. அதனால்தானோ என்னவோ உலகப் பெரும் இலக்கியங்கள் எல்லாம் சோக ரசம் படிந்ததாகவும், அதன்மூலம் கிடைக்கும் படிப்பினையைச் சொல்வதாகவுமே அமைந்திருக்கிறது.

கடந்த மாதத்தின் துவக்கத்தில் தமிழகமே உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்தது. ஒரு மனிதர் காலமானால், அது வீட்டைத் தாண்டி நாட்டைத் தாண்டி தமிழ்மொழி பேசும் சமூகத்தையே கலக்கம் கொள்ள வைக்கிறது என்றால், அத்தகைய இழப்பு பேரிழப்பு மட்டுமல்ல, நாட்டுக்கு மட்டுமல்ல, மொழிக்குமான இழப்பு என்பதை உணர்ந்ததாலோ என்னவோ, தமிழின்பால் ஆழ்ந்த பிடிப்புள்ள உலகத் தமிழர்கள் ஒரு நொடியேனும், கண்ணீர்த் துளிர்ப்பதைக் கட்டுக்குள் வைத்திடச் சிரமப்பட்டிருப்பார்கள். கலைஞர் காலமான செய்தி தந்த சோக அதிர்வில் இருந்து மீள்வதற்கு தமிழகத்துக்கு இன்னமும் அவகாசம் தேவைப்படுகிறது. அவர் முன்னெடுத்த மொழிப் போரும், இந்தி எதிர்ப்பும், சமூக நீதிச் சிந்தனைகளும் தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளைத் தாண்டியும் பெரும் பயன்தரும். மொழி உணர்வு தரும். காலத்தைக் கடந்து நிற்கும் அவரது தொண்டு காலந்தோறும் நினைக்கப்படும்!


ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குடவோலை முறையைப் பயன்படுத்தி நேர்மையாக தேர்தலை நடத்திக் காட்டிய இனம் தமிழினம். தற்போது ஆளும் நடுவண் அரசு எப்படியும் தேர்தல் வெற்றியைத் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளும் சதி, கணினி வழியே இருப்பதனால், நடுநிலையாளர்கள் இம்முறையைத் எதிர்த்து தங்கள் கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள்.

இந்தியாவில் நடந்து வரும் இனவொழிப்புச் சதியைக் களைந்திட மீண்டும் பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற ஆளுமைகள் பிறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மீண்டும் அவர்கள் வெவ்வேறு உருவில் ஆளுமை செலுத்தும் காலம் விரைவில் வரும்! தமிழுக்குத் தொண்டு செய்த அந்நிய நாட்டுத் தமிழறிஞர் பற்றிய மிகச் சிறந்த கட்டுரை, கவிதைகளோடு, ஆகச் சிறந்த படைப்புக்களோடு வாசமலரென வலம் வரும் இம்மாத 'அய் தமிழ்' இதழை வாசியுங்கள்! வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...



ஞாயிறு போற்றுதும்!!!
காவிய தலைவன்
கலைஞர் ஒரு பார்வை
அறிவோம் தமிழர் பெருமை
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
சிவகாமியின் சபதம்
நீரில்லா உலகு பாழ்!
மருத்துவ தமிழ்
முதிர்ந்தும் அறியா முதுமை

**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya


**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# ஞாயிறு

தமிழகத்தின் மகத்தான தலைவர்களில் ஒருவரும், மாபெரும் அரசியல் ராஜதந்திரியுமான கலைஞர் மு.கருணாநிதி மறைந்தார் என்ற செய்தி இந்தியா முழுதும் பரவியபோது, இனி தமிழகத்தில் அரசியல் நிலை என்னவாகும் என்ற கேள்வி, நாடு முழுதுமான அரசியல் மட்டத்தில் நிலவிய அதிர்வலைகள் எழுந்தது.



இந்திய அரசியலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாது, மத்தியில் யார் பிரதமராக வரவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கியவர் கலைஞர் கருணாநிதி!

கருணாநிதிக்கு மாநில உரிமைப் போராளி, சமூக நீதிக் காவலர், தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் என எத்தனையோ சிறப்புப் பெயர்கள் உண்டு. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டுக்காகப் பாடுபட்டவர் என்ற விதத்தில் சமூக நீதிக் காவலர் என அவரைப் போற்றுவார்கள்.

திருவள்ளுவரைச் சாதாரண மக்களுக்கும் கொண்டுசேர்த்தார் கருணாநிதி. திருக்குறளுக்குப் புதிய உரை எழுதியது மட்டுமின்றி, வள்ளுவத்தின் உயிர் நாடியாக இருப்பது சமத்துவம்தான் என்பதைக் கண்டறிந்து அதை முன்வைத்தார். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவனின் வாய்மொழி அவரால் புதிய அரசியல் பரிமாணம் பெற்றது.

கருணாநிதியின் கவிதைகள், கட்டுரைகள், உரைகள் என்று எதுவும் அவரது பகுத்தறிவுப் பார்வையையே பிரதிபலித்தன. அந்த வகையில் சாதிக்கு அடிப்படையான சாத்திரங்களை விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டும் எனும் அம்பேத்கரின் கோட்பாட்டை நடைமுறைப்படுத்திக் காட்டியவரும் கருணாநிதிதான்.

'பந்தை நாம்தான் உதைத்து விளையாட வேண்டும்; யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலாயிருந்தால் அவர்கள் நம்மையும் சேர்த்து உதைப்பார்கள்' என்று கவனப்படுத்தியவர். பந்தையும் மைதானத்தையும் பார்வையாளர்களையும் கூடப் பக்குவப்படுத்திக் களத்தில் ஆடிக் கொண்டிருந்தவர். புதிது புதிதாக


# போற்றுதும்!!!

வருகிறவர்களோடும் போராடத் தயங்காதவர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதல்வர்களுக்கு விடுதலை நாளில் கோட்டையில் தேசியக் கொடியேற்றும் உரிமையைப் பெற்று தந்தவர்; அவரின் மறைவுக்கு இந்தியா முழுதும் தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் திராவிட நாடு கேட்ட கலைஞர் கருணாநிதியின் மறைவுக்கு இப்போது இந்தியாவே துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியப் பிரதமரும் இந்திய அரசியல் தலைவர்களும் அஞ்சலி செலுத்தி இருக்கிறார்கள். தேசத்துக்காகத் தி.மு.க. திராவிட நாடு பிரிவினையை கைவிட்டதற்குத் தேசம் மரியாதை செய்திருக்கிறது.

கல்லக்குடி போராட்டத்தில் தண்டவாளத்தில் தலைவைத்து, தமிழுணர்வை வளர்த்தவர். தமிழின் தகுதிக்குரிய பெருமைக்காகப் பரிதிமாற் கலைஞர் தொடங்கிவைத்த போராட்டத்தை முடித்துவைத்துத் தமிழுக்குச் செம்மொழி அறிந்தேற்பினை இந்திய அரசிடம் பெற்றுத் தந்தவர். வடமொழி முதலாக மற்ற இந்திய மொழிகளில்





சிலவும் செம்மொழி அறிந்தேற்புப் பெற வழி அமைத்தவர்.

சமஸ்கிருதம் முதலாக உலகச் செம்மொழிகள் அனைத்துக்குமான உலகச் செம்மொழிகள் உயராய்வு மையத்தைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொடங்கி வைத்தவர்.

சென்னையில் வள்ளுவர் கோட்டம், பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம், குமரியில் திருவள்ளுவர் சிலை என்று இலக்கிய நினைவுக்கான ஊற்றுக் கண்களைத் திறந்து வைத்தவர்.

அறிவியல் தமிழுக்குத் தமிழ் இணைய மாநாடுகளை நடத்திக் கணினித் தமிழின் இன்றைய வளர்ச்சிக்கு அடியெடுத்து வைத்தவர். ஆட்சித் தமிழுக்குத் தனி அமைச்சகத்தை உருவாக்கியவர். வழிபாட்டு மொழியாகத் தமிழைக் கோயிலுக்குள் கொண்டு சேர்த்தவர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடமொழியாகவும் பயிற்று மொழியாகவும் தமிழை அழைத்துச் சென்றவர்.

நீதிமன்ற மொழியாகத் தமிழைச் சேர்க்க முயன்றவர். இந்தியாவின் ஆட்சிமொழிகளில் ஒன்றாகத் தமிழையும் சேர்க்க இறுதிவரை போராடியவர். தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை ஆகியோர் அச்சில் கொண்டுவந்த தமிழ்க் கருவூலங்களை மேடையில் மட்டுமன்றி, நாடக, திரைப்பட உரையாடல்களின் வழியும் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

தமிழ் படிக்கிறவர்களும் தமிழாசிரியர்களும் மட்டும் போற்றி வந்த மரபுச் செல்வங்களான தொல்காப்பியப் பூங்கா', சங்கத் தமிழ்', குறளோவியம்', திருக்குறள் உரை' என்றெல்லாம் எழுதித் தம் வாழ் நாளைச் சேமித்து வைத்தவர்.

அவர், கடந்த கால இலக்கியங்களை நிகழ்காலம் பேசவைத்தவர். சமுதாய அமைப்பு, விழுமியங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகளில் மாற்றம் என்று நவீன அறிவியல் தொழில்நுட்ப அதிரடி விளைச்சலில் வாழும் சமகாலத் தலைமுறையோடு கூட உரையாட இயலாத காலத்தில் ஒரே காலத்தில் பல தலைமுறைகளோடும் உடன்பிறப்பே..' என அழைத்து உரையாடல் நடத்தியவர்.

கடந்த கால இலக்கியங்களின் பெயர்களையும் இலக்கிய மாந்தர்களின் பெயர்களையும் பிறந்த குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தவர்; அப்படி, காலங்களையும் தலைமுறைகளையும் இணைத்தவர். அந்த இணைப்புகளிலிருந்து புதுமையும் நம்பிக்கையும் பிறக்க விரும்பியவர். விளைவுகளைக் குறி வைத்து வினையாற்றியவர்.

1957 —லிருந்து சட்டமன்ற உறுப்பினர்; 50 ஆண்டுகளாகத் தி.மு.க. தலைவர். ஐந்துமுறை முதலமைச்சர் — இவை அரசியல்.

ஆனால், அரசியல் கொள்கை முழக்கம் என்பதற்காகவும் அவரது கலை இலக்கியப் பங்களிப்பைக் காலம் வாழ்த்தும். பாராட்டும்

பழியும் கலந்த பதவிகளால் மட்டும் கலைஞர் கருணாநிதி பாராட்டப்படவில்லை. களத்தில் நின்று மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும் இருந்திருக்கிறார்.



கருணாநிதியின் நெஞ்சில் நிரந்தர இடத்தைப் பிடித்தது பெரியாரும் அண்ணாவும்தான். பள்ளிப் பாடங்களைவிட பெரியாரின் 'குடி அரசு' பதிப்பக வெளியீடுகளே கருணாநிதியை வசப்படுத்தின. பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சால் ஈர்க்கப்பட்டார் 14 வயது கருணாநிதி. தனது தோழர்களோடு நாள்தோறும் மாலைப் பொழுதுகளில் "வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்! வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டித் திருப்பிடுவோம்" என்று முழக்கமிட்டு, ஊர்வலத்துக்குத் தலைமையேற்று நடத்துவது வழக்கம். இந்தி எதிர்ப்புத் துண்டறிக்கையை இந்தி ஆசிரியரிடத்திலேயே கொண்டுசென்று கொடுக்கும் துடுக்கும், "இந்தி வீழ்க! தமிழ் வாழ்க!" என முழங்கும் துணிச்சலும் கருணாநிதிக்கே உரியவை.

## அண்ணாவின் அறிமுகம்

அண்ணாவின் 'திராவிட நாடு' இதழில் 1942—ல் கருணாநிதி எழுதிய 'இளமைப்பலி' கட்டுரை வெளியானபோது அவருக்கு வயது 18. திருவாரூர் வந்த அண்ணா, கட்டுரையாளர் என்ற பெயரில் எதிரே இப்படி ஒரு மாணவப் பிராயத்தனை எதிர்பார்க்கவில்லை. கட்டுரைகள் எழுதுவதை விட்டுவிட்டு, படிப்பில் கவனம் செலுத்தச் சொன்னார் அண்ணா. ஆனால், கலை, இலக்கியம், அரசியல் என்று பொது வாழ்க்கையிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டார் கருணாநிதி. இதற்கிடையே காதல் வந்தது; ஆனால் கைகூடவில்லை. 'சுயமரியாதைக்காரனுக்குப் பெண் இல்லை' என்றனர் காதலியின் பெற்றோர்.

சீர்திருத்தத் திருமணத்துக்கு வீட்டில் பார்த்த பெண் இல்லத்தார் ஒப்புக்கொண்டதையடுத்து, 1944—ல் கருணாநிதி — பத்மா திருமணம் நடந்தது. அடுத்த வாரமே 10 நாள் சொற்பொழிவாற்றப் புறப்பட்டுவிட்டார் கருணாநிதி. பத்மாவதி முத்துவைப் பெற்றுவிட்டு 1948—ல் மறைந்துவிட, செப் 15, 1948—ல் தயாளுவைத் திருமணம் செய்துகொண்டார் கருணாநிதி. இவர்களின் பிள்ளைகளே அழகிரி, ஸ்டாலின், செல்வி, தமிழரசு (துணைவி ராஜாத்தியின் மகள் கனிமொழி). 1948—ல் நடந்த திராவிடர் கழக மாநாட்டின் முதல் நாள் கலவரத்தில் முடிந்தது. அதற்குப் பின்னர் நடந்த தாக்குதலில் சுயநினைவு இழந்து, சாக்கடையோரத்தில் வீசப்பட்ட கருணாநிதியை ஒரு மூதாட்டி காப்பாற்றியிருந்தார். பெரியாரே அடிபட்ட இடங்களில் மருந்து தடவியது அவர் நெஞ்சை நெகிழ்த்தியது.

பெரியாரிடத்தில் 'குடி அரசு' துணையாசிரியராய் ஓராண்டு பயின்று முடிந்த நேரத்தில் 'ராஜகுமாரி' படத்துக்கு எழுத அழைப்பு வந்தது. படத்தின் நாயகன் எம்ஜிஆர். கருணாநிதி— எம்ஜிஆர் என்ற இரு ஆளுமைகளும் திராவிட இயக்கத்தை சினிமா மூலம் பட்டிதொட்டிகளிலெல்லாம் கொண்டுசென்றனர். ஆனால், கருணாநிதி எழுதி வெளிவந்த 'அபிமன்யு' (1948) படத்தின் டைட்டில் கார்டில் அவர் பெயர் இடம்பெறவில்லை.

இதையடுத்து, திருவாரூருக்குத் திரும்பிவிட்டார் கருணாநிதி. அதுவும் நல்லதாகவே போயிற்று. முன்னதாக துண்டுத் தாளில் வந்துகொண்டிருந்த 'முரசொலி' வார இதழாய் உருவெடுத்தது. இதற்கிடையில்தான் மனைவி பத்மா மு.க.முத்துவைப் பெற்றுத் தந்துவிட்டு மறைந்துவிட்டார். வீட்டில் இரண்டாவது திருமணத்துக்கு ஏற்பாடு செய்தனர். திருமண நாள் செப்டம்பர் 15, 1948. அண்ணாவின் பிறந்த நாள். தலைமைச் சொற்பொழிவாளராகவும் அண்ணாவின் பெயரே அழைப்பிதழில்



இடம்பெற்றிருந்தது. திருமணமான கையோடு புது மணப்பெண் தயாளுவை விட்டுவிட்டு, இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டார் கருணாநிதி.

## 'கலைஞர்' கருணாநிதி

தலைவர் பெரியாரோடான பிணக்குக்குப் பிறகு திகவிலிருந்து பிரிந்து, 1949—ல் பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்று திமுகவை அண்ணா உருவாக்கியபோது கருணாநிதி உற்ற துணையாகியிருந்தார். வெள்ளையனை வெளியேற்றிய காங்கிரஸை எதிர்ப்பதென்பது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானதாய் இருந்த காலம். இப்போது காங்கிரஸோடு பெரியாரும், திமுகவைக் கடுமையாக எதிர்த்தார். 25 வயது கருணாநிதியை கட்சியின் பிரச்சாரக் குழு உறுப்பினராக்கியிருந்தார் அண்ணா.

இன்னொருபுறத்தில் கருணாநிதி — எம்ஜிஆர் இணையில் வெளியான 'ராஜகுமாரி', 'மந்திரிகுமாரி', 'மருதநாட்டு இளவரசி' படங்கள் பெரும் வெற்றி பெற்றன. 'பராசக்தி' படத்தில் சமூக அநீதிகளை எதிர்த்து நெருப்பைக் கக்கிய கருணாநிதியின் வசனங்கள் அவரைப் புகழின் உச்சத்துக்குக் கொண்டுபோனது. அப்போதைய காங்கிரஸ் அரசு நெளிந்தது. "அம்பாள் எந்தக் காலத்திலடா பேசினாள், அறிவு கெட்டவனே!" என்ற பகுத்தறிவுப் பிரச்சாரம், தெய்வ நம்பிக்கை கொண்டவர்களையும் வசீகரித்தது. இசைத்தட்டுக்கள் ஒலித்த இடங்களில் 'பராசக்தி'யின் வசன ஒலித்தட்டுக்கள் ஒலிக்கத் தொடங்கின. கருணாநிதியையும் 'பராசக்தி'யையும் எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் காங்கிரஸார்.

அண்ணாவைப் போலவே பேச்சால் தன்வயப்படுத்தும் வித்தையையும் கருணாநிதி கற்றிருந்தார். அமைப்புரீதியான ஆற்றலும் கொண்டவர் என்பதால், கட்சியில் குழு மனப்பான்மை, கட்சி வளர்ச்சியின்மை போன்ற



பிரச்சினைகள் ஏற்பட்டால் சரிசெய்ய அவரையே அனுப்பினார் அண்ணா.

## கல்லக்குடி போராட்டம்


*1953*—ல் மும்முனைப் போராட்டத்தில், ஒரு முனைக்கு கருணாநிதியைத் தலைவராக அமர்த்தியிருந்தார் அண்ணா. டால்மியாபுரம் ரயில் நிலையப் பெயர்ப் பலகையின் மீது தமிழில் கல்லக்குடி என்ற பெயர் தாங்கிய சுவரொட்டியை ஒட்டுவதே போராட்டத் திட்டம். நான்கு பேருடன் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்தார் கருணாநிதி. ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது என்றாலும், கட்சிக்குள்ளும் வெளியிலும் கருணாநிதியின் துணிச்சலைப் பற்றி எல்லோரிடமும் பேச்சு எழுந்தது.

எம்ஜிஆர் கருணாநிதி இருவரும் இணைந்து உருவாக்கிய 'மலைக்கள்ளன்' (1954) அவர்களின் கூட்டுறவைப் பறைசாற்றியது. 'உலகத்தில் எல்லாவற்றுக்குமே இலக்கணம் உள்ளது. பிறப்பைப் பொறுத்து அல்ல; சிறப்பைப் பொறுத்து' எனும் வசனம் புகழ்பெற்றது. அவ்வாண்டு ஒரு நாடக நிகழ்ச்சியில் 'புரட்சி நடிகர்' என்று எம்ஜிஆருக்குப் பட்டம் சூட்டினார் கருணாநிதி.

## முதல் தேர்தல் வெற்றி

*1957* தேர்தலில் திமுக போட்டியிட்டது. கருணாநிதி குளித்தலையில் நின்று வென்றார். அப்போது தொடங்கிய வெற்றி 13—வது முறையாக 2016—ல் திருவாரூர் வரை தொடர்ந்துவருகிறது. சட்ட மன்றக் கன்னிப் பேச்சில் நங்கவரம் பண்ணை விவசாயிகளுக்காகக் குரல்கொடுத்தார். 1957 ஆகஸ்ட் 23—ல் தொடங்கி 1957 செப்டம்பர் 9 வரை சுமார் 20 நாட்கள் போராட்டம் நடத்தி அவர்களின் உரிமைகளை மீட்டுத் தந்தார்.

*1959*—ல் சென்னை மாநகராட்சி திமுக வசமானது. அண்ணாவிடம் பிடிவாதமாய் 100—ல் 90 இடங்களில் கழக வேட்பாளர்களை நிறுத்தி 45 இடங்களில் வென்று பரிசாய், அவர் கையாலேயே 'கணையாழி' பெற்றுக்கொண்டார் கருணாநிதி. முந்தைய ஆண்டு 'நாடோடி மன்னன்' எம்ஜிஆரைப் புதிய உச்சத்துக்குக் கொண்டுசென்றிருந்தது. 1960—ல் உட்கட்சிப் பூசல்கள் இடையே அண்ணாவே பொதுச்செயலாளர் ஆனார். ஈ.வெ.கி.சம்பத் அவைத் தலைவர். கருணாநிதி பொருளாளர். சம்பத்தின் குடும்பப் பின்னணி இல்லாமலும், நாவலரின் உயர் கல்வி இல்லாமலும் தனது ஆற்றலால், உழைப்பால் பத்தே ஆண்டுகளில் கட்சியின் மூன்றாவது இடத்துக்கு வந்திருந்தார் கருணாநிதி. அடுத்த ஆண்டு சம்பத் கட்சியிலிருந்து வெளியேறினார். கட்சியில் திரைத் துறையினரின் ஆதிக்கம் அதிகரித்துவருவதையும் வெளியேற்றத்துக்கு அவர் ஒரு காரணமாய்ச் சொன்னார்.



## தேர்தல் நிதி 11 லட்சம்

1962—ல் 50 சட்ட மன்ற இடங்களை திமுக பிடிக்க, 'திராவிட நாடு' முழக்கம் மேலும் அதிகரித்தது. அடுத்த ஆண்டு பிரிவினை பேசும் கட்சிகளுக்குத் தடை போடும் அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தது நேரு அரசு. கட்சி முடக்கப்படுவதைத் தடுக்க அண்ணா 'திராவிட நாடு' கோரிக்கையைக் கைவிட்டார். ஆனால், அதற்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன என்றார். தமிழகத்தின் நலன்களுக்காக இப்போது மாநில சுயாட்சி முழக்கத்தை அவர் கையில் எடுத்தார். 1965—ல் இந்தி ஆட்சி மொழியாக இருந்த பேராபத்தைத் தடுக்கவும், 1967 தேர்தலைச் சந்திக்கவும் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டது திமுக.

1963—லிருந்து இந்தி எதிர்ப்புப் போர், கழகத்தைப் பம்பரமாய்ச் சுழல வைத்தது. 1965 ஜனவரி 26—ஐத் துக்க நாளாகக் கொண்டாட முடிவெடுத்தது திமுக. மாணவர்களைத் தூண்டிவிடுவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, 1965 பிப்ரவரி 16 அன்று தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார் கருணாநிதி. 1965 மார்ச் 25—ல் சிறையில் கருணாநிதியைப் பார்த்துவிட்டு பின் அன்று மாலை நெல்லையில் சொன்னார் அண்ணா: "என் தம்பி கருணாநிதி தனிமைச் சிறையில் கிடக்கும் இந்த இடம்தான், யாத்திரை செய்ய வேண்டிய புண்ணிய பூமி".

## முதல்வர் கருணாநிதி !

1966 டிசம்பர் 29—ல் விருகம்பாக்கம் திமுக தேர்தல் சிறப்பு மாநாட்டில் ரூ.11 லட்சத்தைப் பெற்றுக்கொண்ட அண்ணா சொன்னார்: "உன் தாயார் உனக்கு நிதி என்று பெயரிட்டார்களே, உன்னை நாட்டு மக்கள் நிதியாகப் பயன்படுத்திக்கொள்ளட்டும் என்றுதான்". வேட்பாளர்களை அறிவிக்கும்போது சைதாப்பேட்டை என்று நிறுத்தி "11 லட்சம்" என்றார் அண்ணா. பெரும் ஆரவாரம்! பரங்கிமலை தொகுதிக்கு எம்ஜிஆர் நிறுத்தப்பட்டிருந்தார். அந்தத் தேர்தலில் திமுக வென்று முதல் முறையாக ஆட்சியைப் பிடித்தது. அண்ணா முதல்வரானார்.

1967—ல் நாவலருக்கு அடுத்து அண்ணா அமைச்சரவையில் மூன்றாவது இடத்தில் பொதுப்பணித்துறை அமைச்சராய்ப் பொறுப்பேற்ற கருணாநிதி, பேருந்துகளை அரசுடைமையாக்கும் திட்டத்தைக் கொண்டுவந்ததும் வீராணம் திட்டத்துக்கு வித்திட்டதும் முக்கியமான செயல்பாடுகளாகப் பேசப்பட்டன.

1969—ல் அண்ணா மறைவுக்குப் பிறகு, "அண்ணாவுக்குப் பிறகு யார்?" என்ற கேள்வி



எழுந்தபோது, கருணாநிதியே முன்னால் நின்றார். எம்ஜிஆரின் உதவியும் சேர்ந்துகொள்ள 45 வயதிலேயே முதல்வரானார் கருணாநிதி.

இன்றைய ஊடகங்களும் நவீன கலை இலக்கியங்களுக்கும் பயணம் செய்யச் சாலை போட்டவர். திரைப்படத் தமிழுக்குத் திசை காட்டியவர்; பராசக்தி வழி திரைப்பட வரலாற்றைத் திருப்பி விட்டவர்.

இலக்கு இல்லாமல் திறமை காட்டிப் பயனில்லை. வெற்றியும் தோல்வியும் இயற்கைதான் எனினும், விடா முயற்சியும் கொள்கை உறுதியும் ஓயா உழைப்பும் தேவை' என்று சொல்வதற்கான தகுதியை வளர்த்துக் கொண்டவர்.

சலிப்பறியாத உழைப்புக்கும் எழுதுவதற்கும் படிப்பதற்கும் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கும் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக இருந்தவர். 'நடை தள்ளாடலாம், தடைப்படலாம் — ஆனால் நான் பெற்றுள்ள தமிழ் உணர்வுக்குத் தள்ளாட்டமில்லை' என்று சொன்னார். அவர் இப்போது இல்லை . இனி அவர் பெயரே தமிழுணர்வின் தள்ளாட்டத்தைப் போக்க வேண்டும்.

அவர் பன்முகப் படைப் பாளுமையோடு அரசியல் தலைமைப்பண்பும் கொண்ட தலைவர். அவர் ஆற்றிய பணிகளில் அவர் ஆயுட்காலத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார். அடுத்துவரும் தலைமுறைகளின் மனத்திலும் அவர் சாதனைகளால் வாழ்வார்; நினைக்கப்படுவார்.









Timescontent.com
© BCCL




karunanidhi.com
mwallpapers.com





AMBULANCE









# காவிய

### ஒரு நூற்றாண்டின் வரலாறு

கனத்த செய்தியைச் சுமந்து வந்த அந்த மாலை நேரத்துச் செய்தி கவிழும் இருளை முன்னமே உரைப்பது போலிருந்தது.

‘காலமானார் கருணாநிதி!’

மறையும் சூரியன் மறுநாள் உதிக்கும் என்ற உண்மையை அன்றையப் பொழுதின் மாலையில் தமிழக மக்கள் கேள்விக்கு உட்படுத்தும் விதமாக உணரத் தலைப்பட்டார்கள்.



சுமார் அறை நூற்றாண்டு காலம் தமிழகத்தில் அவர் பெயர் அடிபடாத நாளேடுகள் இல்லை!

அவர் பெயரைத் தவிர்த்துவிட்டு தமிழக விடியலை நினைத்துப் பார்க்க முடியாது என்னும் அளவுக்கு அரைநூற்றாண்டுக்கும் மேலாக ஓயாத உழைத்த சூரியன் ஒய்வெடுத்துக் கொண்ட ஆகஸ்ட் 7 ஆம் நாள்...

சமகாலத் தமிழகத்தின், சமத்துவம் பேணத் துடிக்கும் தமிழகத்தின் மீது கவிழ்ந்த இருள் என்பது மறுப்பதற்கில்லை!

5 முறை தமிழகத்தின் முதல்வராக அரியணை ஏறியவர்!

50 ஆண்டு காலமாக ஒரு கட்சியின் தலைவராக கோலோச்சியவர்!

60 ஆண்டு காலமாக தமிழக சட்டமன்றத்தில் தன் இருக்கையை உறுதி செய்து அரும் சாதனை புரிந்தவர்!

80 ஆண்டு காலம் பொதுவாழ்வில்



# தலைவன்

தொய்வில்லாமல் தொடர்ந்த மக்கள் தொண்டர்!

94 ஆண்டு காலம் நீண்ட நெடிய பயணத்தில் எவரும் எளிதில் கற்பனை செய்திட இயலாத சாதனைப் பெருவாழ்வு வாழ்ந்தவர்!

அபாரமான ஆற்றல் பல நிறைந்த ஒருவரைத்தான் 'கலைஞர்' என்ற ஒற்றை வார்த்தையில்அன்போடு அழைத்து பார்த்தது தமிழகம்!

குரல்நாவும் விரல்நாவும் ஒருங்கே பெற்றுத் தமிழ்நாட்டை ஒரு புலவன் ஆண்டான் என்றால், அந்தப் பெருமையைத் தன்வசமாக்கி கொண்ட பெருமை கருணாநிதியையே சாரும்!

அறிஞர் அண்ணா அவர் தொடங்கிய கழகத்தைத் தனதாக்கிக்கொண்ட கருணாநிதியின் சாமர்த்தியம் சாணக்கியத்தனம் நிறைந்தது!

கழகத்தின் தொடக்கக் காலத்தில் ஐம்பெரும் தலைவர்களாக விளங்கியவர்கள், பேரறிஞர் அண்ணா, மதியழகன், ஈ.வி.கே.சம்பத், என்.வி.நடராசன் ஆகியோர் மட்டுமே!

அந்த வரிசையில் தன் இருப்பை உறுதி செய்ய முடியாதவராக இருந்த கருணாநிதி, அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, எப்படி முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற விந்தையான ஒரு புள்ளியில்தான் துவங்குகிறது அவரது சாணக்கியத்தனம்!

உண்மையில் அந்தப் புள்ளியில் இருந்துதான் கருணாநிதி என்ற ஆளுமையின் வாழ்வு இரண்டாகப் பிரிகிறது.


## கொற்றவன்

பொதுநலத்தில் துவங்கிய ஒருவரின் வாழ்வு சுயநலம் காரணமாக மாறிப்போனது.

கருணாநிதி வளர்த்த வெறுப்பரசியல் அடுத்து வருவோர்க்குத் தவறான வழிகாட்டுதலை வழங்கத் தொடங்கியது.



அண்ணாவின் காலத்தில் மொழிப் பிரச்சினைக்காக பிரதமர் நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டிய கண்ணியம், கருணாநிதியின் காலத்தில் இந்திரா காந்தியின் மீது வெறியாட்டம் நிகழ்த்தத் தூண்டிய வன்முறை அரசியலாக மாறியது.



இந்திராவுக்கு நேர்ந்த ரத்த காயத்தை 'அது பெண்களுக்கு இயற்கையாகவே மாதந்தோறும் வரும் ரத்தப்போக்காக இருக்கலாம்!' என அறிக்கை விடும் அளவுக்கு கருணாநிதி கீழிறங்கினார்.

சட்டமன்றத்தில் நகைச்சுவை என்ற பெயரில் அவர் தந்த விளக்கங்கள் பல, அவலத்தின் அறைகூவல்கள்!

அவர் முன்னிலையில் செல்வி ஜெயலலிதாவின் சேலை அவிழ்ப்பு அரங்கேற்றங்கள் அநாகரிகத்தின் கறை படிந்த கருப்பு நாட்கள்!

இப்படியாக எத்தனையோ கசடுகள், கறைகள் கருணாநிதியின் அழிக்க முடியா தடங்களாய் இருக்கையில், அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட அச்சு மற்றும் காட்சி ஊடகக் குடும்ப ஊதுகுழல்கள் காட்டும் கலைஞரின் முகமோ, 'தமிழகத்து தேவதூதன்' போன்ற மாயதோற்றமாக இருக்கிறது!

இதனை அடிக்கோடிடாமல், கருணாநிதிக்கான அஞ்சலியைத் தமிழகம் எழுதுகிறது என்பதிலேயே தமிழக ஊடக நடுநிலைமை எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாகிறது!

திராவிட முற்போக்குக் கழகத்தை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்களில் முக்கியமானவராக அறிஞர் அண்ணாவால் அடையாளப்படுத்தப்பட்டவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்!

'அருமருந்தன்ன தம்பி எம்.ஜி.ராமச்சந்திரன் கழகத்தைத் துறப்பதோ, கழகம் அவரைத் துறப்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று!' என்றார் அறிஞர் அண்ணா.

முதன்முறையாக தி.மு.கழகம் 1967— ல் ஆட்சிக் கட்டில் ஏறியபோது முதல்வர் அண்ணாவை மாலையிட்டு சிறப்பிக்க வந்த பிரமுகர்கள் முன்னிலையில், 'இந்த மாலைக்கு உரியவர் மருத்துவமனையில் இருக்கும் தம்பி ராமச்சந்திரன்!' என்று தி.மு.க.வைத் தொடங்கிய அறிஞர் அண்ணாவால் பரிந்துரைக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் உதவியால் முதல்வர் நாற்காலிக்கு வந்தவர்தான் கருணாநிதி!

கலைஞர், தான் ஆட்சியில் அமர்ந்த இரண்டே ஆண்டுகளில் ஏற்றி வைத்த ஏணியான எம்.ஜி.ஆரை தூக்கி எறிந்தார்.

கொடுமை என்னவெனில், 'எம்.ஜி.ஆர், கட்சிக்குத் துரோகம் செய்கிறார்' எனும் குற்றச்சாட்டினைச் சுமத்தி அரசியல் நாகரிகத்தை அரங்கேற்றினார் கருணாநிதி.

அரசியலில் கருணாநிதியின் இருப்பை இவ்விதமாகத்தான் தொடங்கி, முடிக்க முடியும் என்றாலும், தன்னுடைய பொதுவாழ்வின் நெடும்பயணத்தில் அவர் பதித்துச் சென்று இருக்கும் அழுத்தமான, ஆக்கப்பூர்வமான தடங்களைத் தவிர்த்து விட்டுப் போவது என்பது தமிழகத்து



வரலாற்றில் அரை நூற்றாண்டை இருட்டடிப்புச் செய்துவிட்டுச் செல்வதற்கு ஒப்பானது!

தமிழக மக்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏதோ ஒரு தொடர்பு கண்டிப்பாக கலைஞருக்கு உண்டு!

‘கலைஞரின் வசனத்தைப் பேசியதால்தான் ஒரே நாளில் நான் கோபுர உச்சியின் புகழுக்கு போனேன்!’ என நடிகர் திலகம் சிவாஜி கணேசன் புகழ்கிறார்.

அவரது ‘பராசக்தி’, ‘மனோகரா’ வசனங்களைக் கேட்டபின் தான் இது போல் எழுத வேண்டும், நடிக்க வேண்டும் என்று திரைத்துறையின் இயக்குனர்களும் நடிகர்களும் வானளாவப் புகழ்கிறார்கள்.

கலைஞரின் எழுத்தைப் படித்ததனால்தான், எங்களுக்குள் எழுத்துக்கள் வேர் விட்டன என்று கவிஞர்களும், படைப்பாளிகளும் புகழஞ்சலி செய்கிறார்கள்.

அரசியல் வாழ்வென்று எடுத்துக் கொண்டாலோ பெரும்பெரும் தலைவர்களை உருவாக்கி, இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய மதச்சார்பற்ற கூட்டணியை உருவாக்கி, சிறந்த தலைவர்களை அடையாளம் காட்டியிருக்கிறார் கருணாநிதி.

எப்படி இவரால் எல்லாமும் சாத்தியமாகிறது?

உழைப்பு... உழைப்பு... உழைப்பு! அவ்வளவும் கலைஞரின் உழைப்பு!

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின், அவரது பேச்சு வன்மையையும், எழுத்து வன்மையையும் போலவே தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி காட்டிய கலைஞர், அண்ணா மறைந்த போது,

‘....அண்ணா! நீ
இருக்குமிடந்தேடி யான்வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான்வரும் போது கையோடு கொணர்ந்து அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...’ என்று இரங்கல் கவிதை எழுதினார்.

அண்ணாவைப் போலவே எதையும் தாங்கும் இதயம் கொண்டு தன் இறுதி நாள் வரை இயங்கினார். தன் இயக்கம் முடிந்தபோது, அண்ணா சதுக்கத்தில் தன் அண்ணனுக்கு அருகிலேயே இதயத்தை இறக்கி வைத்தபோது, அவரது வாழ்வு சரித்திர வாழ்வாக, கொடுத்த வாக்கை நிறைவேற்றிய வாழ்வாக அமைந்ததைக் காண நேரிட்ட போது, இத்தகைய வாழ்வு அமைவது என்பதன் அடித்தளத்தில் அயராத உழைப்பும், அரும்பெரும் திறமைகளும், அசாத்திய மனோதிடமும், அர்ப்பணிப்பு திறனும் அடங்கியிருக்கிறது என்பது கண்கூடானது!

அத்தகைய வாழ்வுக்குச் சொந்தக்காரரான கலைஞர் கருணாநிதியை வெறும் கடவுள் மறுப்பாளர் என்றோ, குடும்ப அரசியலை முன்னெடுத்தவர் என்றோ முத்திரை குத்தி கடந்து விடுவோமானால், அது, அத்தகைய பார்வை கொண்டோரின் இழிவேயன்றி, அது கலைஞரின் இழிவாகாது!

முரண்பாடுகளின் உருவம்தான் மனிதன்!

கருணாநிதியின் முரண்பாட்டைப் பார்த்தோமானால், ஒரு மனிதனுக்குள் இத்தனை சிறப்பம்சங்கள் இருக்கிறதா என்ற வியப்பில், மலைப்பில் அந்த முரண்பாடுகள் யாவும் முனை மழுங்கிப் போகும் போய்விடும்!

பன்முகத் திறமைகள் பளிச்சிட்ட பகுத்தறிவுப் பகலவன்தான் கலைஞர் கருணாநிதி!

பழந்தமிழர் வாழ்வின் பெருமைகளைப் பேசும் ஒரு இலக்கியவாதியாக மட்டுமே நில்லாமல், ஆட்சிக்கு வந்த பின் தமிழரின் பெருமைகளைக் காலத்துக்கும் பறைசாற்றும்படி பலப்பல அடையாளங்களை நிறுவினார் கலைஞர்.

பூம்புகார் கலைக்கூடம், வான்புகழ் வள்ளுவரின் பெருஞ்சிலை, தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனும் குறள் வழி நின்று சமத்துவப்புரங்களை நாடெங்கும் நிறுவிய சமத்துவம், சிறுபான்மையினரின் இட ஒதுக்கீட்டினை உயர்த்தி உத்தரவிட்டது போன்ற முத்தாய்ப்பான திட்டங்களுடன், மக்கள் நலத்திட்டங்கள் எண்ணிலடங்கா வகையில் தொடர்ந்து தமிழுக்கும் தமிழருக்கும் செய்த அவரது தொண்டு, எந்த அளவுகளிலும் அளத்தற்கு அப்பாற்பட்டது!

1957—இல் குளித்தலையில் பெற்ற சட்டமன்ற வெற்றியைத் தொடர்ந்து தோல்வியே இல்லாமல் 61 ஆண்டுகள் சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கும் கலைஞரின் சாதனையானது, இனி ஒருவரும் நெருங்க முடியாதது! நினைத்துப் பார்க்கவும் முடியாதது!

எவரும் எளிதில் அணுக முடிகிற தலைவராகத் தன்னுடைய வாழ்க்கையை அவர் அமைத்துக் கொண்ட விதம் தனித்துவமானது!

அரசியல் ஆளுமையாக கருணாநிதி எடுத்த பேருருவுக்கு அடித்தளமே அவரது எழுத்தாற்றலும் பேச்சாற்றலும்தான் என்றாலும், அந்த அடித்தளத்தின் மீது கம்பீரமாக அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதற்கும் மென்மேலும் வளர்ந்ததற்கும் காரணங்களைத் தேடினோமானால்...

இடையறாத உழைப்பு... கலங்காத இதயம்... எதிரிகளையும் வசீகரிக்கும் அரவணைப்பு... போன்ற வலுவான காரணங்கள் கிடைக்கும்.

1990—களின் துவக்கத்தில், திருவாரூருக்கு வெளியே சேந்தமங்கலம் செல்லும் வழியில் கலைஞர் பேசத் தொடங்குகிறார்.

நடைபாதைவாசியாக நான் ஒரு வீட்டை கடக்கையில் அந்த வீட்டின் முதியவர் ஒருவர் 'கலைஞர் பேசத் தொடங்கிட்டார். நான் போய்க் கேட்டுட்டு வாரேன்' என்று விழுந்தடித்துக் கொண்டு அங்கே ஓடுகிறார்.

பொதுக்கூட்ட மேடையை நான் கடக்கும்போது கலைஞர் முழங்கிக் கொண்டிருக்கிறார். கூட்டம் தேனுண்ட வண்டாகச் சொக்கிப் போய் கரவொலி எழுப்புகிறது.

கலைஞரின் உரை கேட்பவரைக் கட்டிப்போடுவதைக் கண்கூடாக உணர்ந்த அனுபவங்கள் பலவுண்டு.

ராமாவரம் தோட்டத்தில் ஜானகி அம்மாள் படத்திறப்பு விழாவுக்கு வருகிறார் கலைஞர். அவரோடு உள்நுழைபவர்களில் நானும் இருக்கிறேன்.

'மருத நாட்டு இளவரசி' படத்தில் தன் நண்பர் எம்.ஜி.ஆருக்கு பிடித்த வசனமாகக் குறிப்பிடுகிறார். 'காட்டிலே புலி மானை வேட்டையாடுகிறது! நாட்டிலே மான் புலியை வேட்டையாடுகிறது!' கையில் எவ்விதக் குறிப்பும் இல்லாமல் அப்படத்தின் வசனங்களையும் நண்பருக்காக அவர் எழுதிய வசனங்களையும் மேற்கோள் காட்டிப் பேசுகிறார். தன் நண்பர் எம்.ஜி.ஆரின் தாயார் கையால் உணவுண்டு மகிழ்ந்த நாட்களைப் பசுமை மாறாமல் குறிப்பிடுகிறார்.

'தொல்காப்பியப் பூங்கா' எழுதியமைக்காக அவரைப் பாராட்டி கவிதை வழங்க நண்பர்களோடு செல்கிறேன். என் கவிதையை வாசித்து மகிழ்ந்தவர், 'எந்த ஊர்?' என்கிறார். 'காரைக்கால்' என்கிறேன். 'தன்சை மண்! காவிரி தண்ணீர்! அதான் உனக்கும் எனக்கும் கவிதை தருது!' என்று கூறி என்னையும் தன்னையும் ஒரே நேர்க்கோட்டில் வைத்து சமத்துவம் காட்டுகிறார்!

கட்சிக்குள் எவ்வளவுதான் பிரிவுகளும் குழப்பங்களும் இருந்தாலும், தனியாளாக நின்று ஒவ்வொரு தேர்தல் களத்திலும் ஆட்சியை மாறி மாறிப் பிடிக்கிறார்.

சக்கர நாற்காலியில் அமர்ந்தபின்பும், மக்கள் பணியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள மறுத்து தீவிரமாய் இயங்கியபடி இருந்தார்.

வெறும் எழுத்தாளன் என்றோற அரசியல்வாதி என்றோ அவரை அடைத்து விடமுடியாமல் அவதாரங்கள் பல எடுத்தவர் கலைஞர்!

எழுத்தின் பல தளங்களிலும் கதை, கவிதை, கடிதம், நாடகம், திரைக்கதை, வசனம், பாடல் என்று தன் முத்திரையை அழுத்தமாகப் பதித்திருக்கிறார்.



பத்திரிகையாசிரியர், நாடக ஆசிரியர், தயாரிப்பாளர், நடிகர் என்று பல நிலைகளில் நிலைத்திருக்கிறார்.

ஐமட்டத் தொண்டன், பிரசார பீரங்கி, கட்சித்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர், முதலமைச்சர் என்று அரசியல் நிலைபல கண்டவர். களங்களில் வென்றவர்!

சங்க காலத்திற்குப் பின் தமிழ் மொழியில் புலமைபெற்று புலவன் ஒருவன் நாடாண்ட வரலாறு அறிஞர் அண்ணாவுக்குப் பிறகு பெற்றவர் கலைஞர் கருணாநிதி மட்டுமே!

மாற்றுக் கட்சியினருக்கும், மதவாத கூட்டத்தினருக்கும் கருணாநிதியின் அரசியல் பிடிக்காமல் போகலாம். அதற்கு வலுவான காரணங்களும் அவர்களுக்குண்டு!

ஆனால், அவரது ஆளுமைமிக்க தமிழ், தமிழகம் தாண்டி இலட்சக்கணக்கானோரை வசீகரித்து கொண்டிருந்ததை, கொண்டிருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது!

கருணாநிதி போன்ற அற்புதமான தலைவர்களை வழங்குவதென்பது கால தேவதை நிகழ்த்தும் அற்புத வித்தைகளில் ஒன்று!

அந்த வித்தையில் விளைந்த விருட்சமான கலைஞர் கருணாநிதியின் காலம், மாபெரும் உணர்ச்சி மிகுந்த காலம்! தமிழரின் எழுச்சி மிகுந்த காலம்!

கலைஞர் தன் வாழ்வைத் திறந்த புத்தகமாக்கி, தமிழ் வசமும், தமிழர் வசமும் ஒப்படைத்து சென்றிருக்கிறார்!

விமர்சனங்களும் வாழ்த்துக்களும் நிறையவே இருப்பினும், அந்தப் புத்தகத்தினை விட்டுவிட்டு தமிழக வரலாற்றினை எவரும் எழுதிவிட முடியாது என்பது திண்ணம்!

'கலைஞர்' என்ற வார்த்தையில் ஒற்றை வார்த்தையில் ஒரு நூற்றாண்டின் வரலாறே உறைந்து கிடக்கிறது!

அந்த நூற்றாண்டில்தான் தமிழகத்து எதிர்காலத்தின் தலைவர்களுக்கான, தனித்துவமிக்கவர்களுக்கான தலை சிறந்த பாடங்களும், பயிற்சிப் பட்டறைகளும் நிறைந்திருக்கின்றன!

'பூம்புகார்' படத்தில் கலைஞர் எழுதிய பாடல் ஒன்று...

'வாழ்க்கை எனும் ஓடம்... வழங்குகின்ற பாடம்!

மானிடரின் மனதினிலே மறக்கவொண்ணா வேதம்!...'

ஆம்! வந்தோருக்கும் இனி வருவோருக்கும் சிறந்த பாடம்!

கலைஞர்... அவர் என்றென்றும் காவியத் தமிழ் மாடம்!

# கலைஞர்

## கருணாநிதி சகாப்தம்

உலகின் நீண்ட கடற்கரைகளில் ஒன்றான மெரினாவில் தனக்கென ஆறடி நிலத்தை வாங்கிக்கொண்டு கருணாநிதி மண்ணுக்குள் உள்ளடங்கியபோது, சிறு நண்டுக் கூட்டம் ஒன்று ராணுவ மரியாதை செலுத்த நின்றிருந்த சிப்பாய்களின் பூட்ஸ் கால்கள் இடையே சுற்றுவதும் மணல் வலைக்குள் போய்ப் பதுங்கி வெளியே ஓடி வருவதுமாக இருந்தது.




மக்கள் வெள்ளம் சூழ, ராணுவ வாகனத்தில் கருணாநிதியின் உடலை ஏற்றி இறக்கி, டாப்ஸ் ஊதி, அஞ்சலிக்காக 21 துப்பாக்கிக் குண்டுகளை வெடிக்கச் செய்து, அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தியபோது, முப்படை வீரர்களின் மனநிலை என்னவாக இருந்திருக்கும்? இலங்கை சென்ற இந்தியப் படையினரால் அங்குள்ள தமிழர்கள் பாதிக்கப்பட்டபோது, அவர்கள் நாடு திரும்ப இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்ததோடு, நாடு திரும்பிய படையினரை வரவேற்கவும் மறுத்த முதல்வராக இருந்தவர் அவர்.

ஒரு பிரிட்டன், ஒரு பிரான்ஸைக் காட்டிலும் அதிகமான, ஜெர்மனிக்கு இணையான மக்களைக் கொண்ட தமிழ்நாட்டின் நீண்ட கால முதலமைச்சர் கருணாநிதி; நீண்ட கால எதிர்க்கட்சித் தலைவரும் அவர். ஐம்பதாண்டு காலம் திமுக எனும் பெரும் கட்சியின் அசைக்க முடியாத தலைவராக அவர் இருந்தார். அவர் கட்சி வென்றாலும் தோற்றாலும் அவருக்குத் தோல்வி தராமல் அறுபதாண்டு காலம் சட்ட மன்ற உறுப்பினராக மக்கள் திரும்பத் திரும்ப அவரைத் தேர்ந்தெடுத்தனர். எண்பதாண்டு காலப் பொது வாழ்க்கை. என்றாலும் ஆறடி நிலத்துக்கு, ஆளுங்கட்சியுடன் மரணத்துக்குப் பிறகும் அவர் போராட வேண்டியிருந்தது. காவிரி நதிப் படுகையில் பிறந்த கருணாநிதி, கூவம் நதிக்கரையின் கழிமுகத்தை வந்தடைந்த 95 ஆண்டு பயணத்தில் தூக்கிச் சுமந்த பாரம் மிக்க கனவு தமிழ்ச் சமூகத்தோடு பின்னிப் பிணைந்திருந்தது.

குளங்களும் மரங்களும் வறுமையும் நிறைந்த, வேறு வசதிகள் ஏதுமற்ற குக்கிராமம் திருக்குவளை. அங்கிருந்துதான் அவ்வளவு பெரிய கனவையும் தன்னுடைய தனிமையில் சுமந்தபடி தூக்கிக்கொண்டு ஓடிவந்தான் அந்தச் சிறுவன். திருக்குவளையிலிருந்து நாகப்பட்டினத்துக்கு, திருவாரூருக்கு, தஞ்சாவூருக்கு, சேலத்துக்கு, ஈரோட்டுக்கு, காஞ்சிபுரத்துக்கு, சென்னைக்கு. ஒரே துணையாக இழிவு இருந்தது. சாதி இழிவு, செல்வ இழிவு, ஞான இழிவு. பள்ளிக்கூடத்தில் இடம் மறுக்கப்பட்டபோது குளத்தில் குதித்து உயிரை மாய்த்துக்கொள்வேன் என்று தலைமையாசிரியரை அந்தச் சிறுவன் மிரட்ட வேண்டியிருந்தது. ஐந்து முறை முதல்வரான பின்னரும், சாதி இழிவு என்னைத் துரத்துகிறது என்று அந்த முதியவன் ஒரு

# ஒரு பார்வை


பேட்டியில் கண்ணீர் விட்டு அழ வேண்டியிருந்தது.

கருணாநிதியின் வாழ்க்கை மகாத்மாவினுடையது இல்லை; அதனாலேயே அது முக்கியமானதாகிறது. ஒரு சாமானியன் சறுக்கக் கூடிய எல்லா பலவீனங்களிலும் பலமான கருணாநிதி சறுக்கி விழுந்திருந்தார். எல்லா மேன்மைகளுக்கும் இடையே கீழ்மைகளும் அவர் வாழ்வில் இருந்தன. சுயநலம், சூது, ஊழல், குற்றம், குடும்ப வாரிசு அரசியல் என எல்லாச் சேறுகளும் அவர் மீது அப்பியிருந்தன. புனிதம் என்று எதுவும் அங்கில்லை.

சமஸ்

உயர் சாதி அல்லது உயர் வர்க்கத்தில் அந்த ஆளுமை பிறக்க வேண்டும். வெள்ளை நிறத் தோல் அல்லது நுனி நாக்கு ஆங்கிலம் வேண்டும். உயர்கல்வி நிறுவனங்கள் அல்லது வெளிநாட்டு மேதைகளின் அங்கீகாரம் வேண்டும். மூன்றும் இல்லாவிடில் துறவிக்கோலம் பூண வேண்டும். அப்போதுதான் இந்திய மனதின் கண் திறக்கும்.






சடாரென்று நம்மை நோக்கித் திரும்பி, ‘ஏன் இவ்வளவு வேட்டையாடிகள் நிறைந்த, இவ்வளவு வலிகள் மிகுந்த, இவ்வளவு இழிவுகள் சுமத்தப்பட்ட வாழ்க்கை எனக்குத் தரப்பட வேண்டும்?’ என்று அவர் கேட்டால், பதில் சொல்ல நமக்கும் ஒரு வார்த்தையும் கிடைக்கப்போவதில்லை.

பேராளுமை ஒருவரைக் கண்டடைய இந்திய மனத்துக்கு மூன்று கண்ணாடிகள் வேண்டும். முன்னோடிகள் பெரியார், அண்ணாவுக்குக் குறைந்தபட்சம் மூன்றில் ஒன்று இருந்தது. உயர் வர்க்கத்தில் பிறந்தவர் பெரியார். ஆங்கிலத்தில் கரை கண்டவர் அண்ணா. மூன்றுமே இல்லாத கருணாநிதியை ஒரு சராசரி இந்திய மனதால் அடையாளம் காணவோ, அங்கீகரிக்கவோ முடியவில்லை. கருணாநிதி தன் பேராளுமையை நிரூபிக்கக் கடைசி வரை போராடினார் — இந்திய மனமோ கடைசி வரை அவருடைய இழிவுகளின்

வழி அவரை அடையாளம் காண முற்பட்டுக் கொண்டிருந்தது.

இழிவு துரத்தியது. திரையுலகில் ஒரு காலகட்டத்தையே கட்டியாண்ட கருணாநிதி, அரசியல் பதவிகளுக்கெல்லாம் வருவதற்கு முன்பே சென்னை கோபாலபுரத்தில் சொந்த வீடும் காரும் வாங்கி செல்வந்தர் ஆகியிருந்தார் என்றாலும், திருட்டு ரயில் ஏறி சென்னைக்கு வந்து அரசியல் வழியாகவே கருணாநிதி சம்பாதித்தார் என்றே கதை பேசினார்கள். முதியவர் நேருவின் காதல்களை ப்ளே பாய் சாகசங்களாகப் பேசி மகிழ்ந்தவர்கள் கருணாநிதியின் திருமண உறவுகளைக் கொச்சைப்படுத்தினார்கள். வரலாற்றில் கருணாநிதி தன் எல்லாப் பங்களிப்புகளையும் வரிசைப்படுத்தினாலும், ஒரு மூட்டை தூக்கும் தொழிலாளியின் வாழ்க்கையை வரையறுப்பதுபோல 'கடினமான உழைப்பாளி என்று கருணாநிதியைச் சொல்லலாம்' என்று முடித்துக்கொள்ள முற்பட்டார்கள்.

வரலாற்றில் கருணாநிதிக்கு உரிய இடத்தை அளிப்பது என்கிற தார்மிகத்தை ஒரு விமர்சகன் அடைவதும் இந்தியாவில் சுலபம் இல்லை. அதற்கு ஒரு விமர்சகன் எங்கோ தன்னை அறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சுயஅறுப்பு. சாதிய, மேட்டிமைய, தூய்மைய அகங்காரத்திலிருந்து வெளியேறாத ஒரு மனதால் கருணாநிதியை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. ஒரு தீண்டாமை மனம் நிராகரிப்புக்கான




**அதிருப்தியாளர்கள் வளரவளர அவர்களின் மத்தியிலே அவர்களை நடத்திச் செல்லும் தலைவன் ஒருவன் தோன்றிவிடுவான்.**

காரணங்களை உற்பத்திசெய்துகொண்டே இருக்கும். என்னைப் பொறுத்தளவில் அரசியலில் கருணாநிதி ஒரு தலித். அதனால்தான் தன்னளவில் அழுத்தத்தை உணர்ந்தவர்கள் — அவர்கள் எந்தக் கருத்தியல் நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக இருந்தாலும் — கருணாநிதியை ஓர் உந்துசக்தியாகக் கண்டார்கள். அதிகாலையில் எழுந்தால், அடுக்குமொழியில் பேசினால், கவித்துவமாக எழுதினால் தங்களாலும் தடைகளை உடைத்துக்கொண்டு அரசியல் களத்தில் மேலே வர முடியும் என்று நம்பினார்கள்.

கருணாநிதி மறைந்த அன்று இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தள்ளிவைக்கப்பட்டு, தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினராக அல்லாத ஒரு தலைவரின் மறைவுக்கு இந்திய அரசு இப்படியான மரியாதையை அளித்தது கருணாநிதிக்கே முதல் முறை. வாய்ப்பிருந்தும் ஏனைய பல மாநிலத் தலைவர்களைப் போல தன்னை டெல்லி அரசியலில் கரைத்துக்கொண்டவரில்லை கருணாநிதி. சென்னையில் அமர்ந்தபடியே டெல்லி தர்பாரைத் தீர்மானிப்பதில் மாநிலத் தலைவர்களுக்கான பங்குச் சூழலை உருவாக்கினார். ஏழு பிரதமர்களின் ஆட்சியோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் அவருக்குப் பங்கிருந்தது.

பிரிட்டிஷ் காலனியாதிக்க இந்தியாவில் திராவிட நாடு வேட்கையோடு அரசியல் களம் புகுந்த பெரியார், அண்ணா வழிவந்தவர் கருணாநிதி. இந்திய சுதந்திரத்தோடு தனி நாடு கனவு இற்றுப்போனபோது தமிழ் மக்களை ரத்தக்களறியில் திருப்பிவிடாமல் இந்திய ஒன்றியம் எனும் அமைப்புக்குள் சாத்வீக வழியில் தேசிய இனங்கள் தம் உரிமைகள், அதிகாரங்களை வென்றெடுக்கும் வழிமுறையைக் கண்டதும், தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை விரிவாகப் பயிற்றுவித்ததும் திராவிட இயக்கத்தின் முக்கியமான சாதனை. அவர்கள் உருவாக்கிய 'மத்தியில் கூட்டாட்சி — மாநிலத்தில் சுயாட்சி' முழக்கமானது இந்தியா என்கிற சிந்தனையையும் விஸ்தரிப்பதானது. நாட்டின் பாதுகாப்பு நீங்கலாக எல்லா அதிகாரங்களையும் மாநிலங்கள் சிந்திப்போம் என்ற அண்ணாவின் கனவு பல விஷயங்களில் பிற்பாடு உருவான ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒப்பிடத்தக்கது.

அண்ணா வழியில், மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருணாநிதி, நாட்டிலேயே முதல் முறையாக மாநில சுயாட்சியை வலியுறுத்தி சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். மாநிலங்களுக்கு என்று கொடி கேட்டவர், தமிழ்நாட்டுக்கு என்று ஒரு தனிக் கொடியையும் முன்மொழிந்தார். கூட்டாட்சிக்கான பாதைபோல கூட்டணிகளைக் கையாண்டவர் இந்தியாவின் கூட்டணி யுகத்துக்கு வித்திட்டவர்களில்



ஒருவரானார்.

நவீன தமிழ்நாட்டின் சாலைகள், பாலங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், தொழிற்பேட்டைகள், அணைகள், சமத்துவபுரங்கள், நூலகங்கள் என்று கட்டுமானங்கள் நெடுகிலும் தன்னையும் நிறைத்துக்கொண்டார் கருணாநிதி. அவர் முன்னெடுத்த சமூகநீதி ஆட்சிக் கொள்கை அதுவரை அரசுப் பணியைப் பார்த்திராத ஒரு பெரும் கூட்டத்தை அரசு அலுவலகங்களுக்குள் நிறைத்தது. வேளாண் துறையை ஊக்குவித்தபடி அவர் உருவாக்கிய நவீன தொழில் கொள்கையானது, மாநிலத்தின் வளர்ச்சியில் எல்லா சமூகங்களுக்கும் இடம்கொடுத்தது. அரசிடமிருந்து அடித்தட்டு மக்கள் அந்நியமாகிவிடாமல் இருக்க அவர் அறிமுகப்படுத்திய சமூகநலத் திட்டங்கள் உதவின. சாதி, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட தமிழ்க் கனவுக்கான குறியீடாக கவி வள்ளுவரை அவர் கட்டமைத்தார்.

சட்ட மன்றத்தில் பேசியதைத் தொகுத்தால் மட்டுமே ஒன்றரை லட்சம் பக்கங்கள் வரக்கூடிய அளவுக்கு உரையாற்றியவர், பல்லாயிரக்கணக்கான பக்கங்களை எழுதிக் குவித்தவர் கருணாநிதி. கவிஞர், கதாசிரியர், பத்திரிகையாளர், திரைக்கலைஞர் என்று ஏராளமான அறிவடையாளங்களால் தன்னை நிறைத்துக்கொண்ட கருணாநிதி, தன்னுடைய கட்சியின் தளபதிகளாக வைத்திருந்தவர்கள் பெரும்பாலும் அடித்தளத்திலிருந்து வந்தவர்கள் — அவர்களில் பலர் அடாவடிகளுக்குப் பெயர் போனவர்கள். தலைநகர் சென்னையில் ஒரு கபாலி இருந்தார். பின்னாளில் கபாலியின் மகன் மருத்துவர் ஆனார். வேறு பல கபாலிகளின் பிள்ளைகள் அரசின் ஒப்பந்ததாரர்கள் ஆனார்கள். குற்றச் சாயல் கொண்ட செல்வந்தர்கள் ஆனார்கள். அவர்களின் பிள்ளைகளும் படித்தார்கள். எப்படியும் குடும்பங்களின் தோற்றம் அடுத்தடுத்த தலைமுறைகளில் மாறியது. சமூகத்தின் ஒப்பனை மதிப்பீடுகளுக்காக கபாலிகளை கபாலிகளாகவே ஒதுக்கிவைத்து, அவர்கள் பிள்ளைகளையும் கபாலிகளாகத் தொடரவிடுவதா அல்லது கபாலிகளை அரசியலதிகாரத்துக்குள் அணைத்து, கபாலிகளின் சந்ததி அடையாளம் உருமாற வழிவகுப்பதா என்ற கேள்வியை உன்னத அரசியல் பேசியோர் முன் தூக்கி வீசினார் கருணாநிதி. கருணாநிதியின் முக்கியமான அரசியல் இது.

அராஜகரான கருணாநிதிக்கு ஜனநாயகத்தின் மீது அபாரமான பிடிமானம் இருந்தது. சட்ட மன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலும் விவாதிப்பதிலும் பெரிய ஆர்வத்தை வெளிப்படுத்தியவர் மாற்றுக் கருத்துகளுக்கு இடமளித்தார். சுதந்திர இந்தியாவின் கருப்புக் காலகட்டமான நெருக்கடிநிலை நாட்களில் தன் ஆட்சியைப் பறிகொடுத்து, அடக்குமுறைக்கு எதிராக நின்றார். கட்சியையே கலைக்கும் நிர்ப்பந்தமும் அந்நாட்களில் அவருக்கு வந்தது. உயிரே போனாலும் கப்பல் தலைவன் கப்பலைச் செலுத்தியபடியே மடிவான் என்றார்.

திமுகவுக்குள் கருணாநிதியின் ஜனநாயகம் முரண்பாடுகளில் நிறைந்திருந்தது. உட்கட்சித் தேர்தல்களைத் தொடர்ந்து நடத்தினார். விளிம்புநிலைச் சமூகத்தினருக்கு கட்சிப் பதவிகளில் இடஒதுக்கீட்டைக் கொண்டுவந்தார். எந்த ஒரு சமூகமும் பெரிதாகத் தலை தூக்கிவிடாதபடியும் அதேசமயம் எல்லாச் சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படியும் செய்தார். எனினும், அண்ணா காலத்தில் கட்சிக்குள் விரிந்து பரவியிருந்த ஜனநாயகத்தின் எல்லை கருணாநிதிக்கு

உட்பட்டதாகச் சுருங்கியது. சித்தாந்த தளத்தில் கட்சியால் முன்னகர முடியவில்லை. அறிவார்த்த தளத்தில் கட்சி மேலும் சரிந்தது. இரண்டாம், மூன்றாம், நான்காம் வரிசைத் தலைவர்கள் அணிவரிசையில் பெரிய பள்ளம் விழுந்தது.

**உண்மையை மறைக்க முனைவது விதையைப் பூமிக்குள் மறைப்பதுபோலத்தான்.**

எந்தக் குடும்பம் கருணாநிதி எல்லா உயரங்களையும் அடைய கட்சிக்குத் துணை நின்றதோ அதே குடும்பம் அவருடைய எல்லா புகழும் கீழே சரியவும் கட்சி சீரழியவும் காரணமாக இருந்தது. அவருடைய கடைசி ஆட்சிக் காலகட்டத்தில் நடந்த அவர் புகழ் பாடும் விழாக்களும் தஞ்சை பெரிய கோயிலின் ஆயிரமாண்டு விழாவில் அவர் உட்கார்ந்திருந்த தோரணையும் தன்னை அவர் ஒரு ராஜராஜ சோழனாகப் உருமாற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டாரோ என்ற கேள்வியை உண்டாக்கியது. கட்சியைத் தோல்விகள் முற்றுகையிட்டன. புதிதாக வந்திருந்த வரலாறு தெரியாத ஒரு தலைமுறைக்கு அவர் வெறும் காட்சிப்பொருளாகவும் கேலிப்பொருளாகவும்கூட மாறியிருந்தார்.

இவை எல்லாவற்றையும் கடந்து ஒரு தந்தைமை ஸ்தானத்தை மானசீகமாக தமிழ்ச் சமூகம் கருணாநிதிக்குக் கொடுத்திருந்தது. திமுக தலைவர் ஆகி அரை நூற்றாண்டை அவர் தொட்ட நள்ளிரவு. பேச்சுமூச்சிழந்த நிலையில் அவரை வீட்டிலிருந்து தூக்கிப்போட்டுக்கொண்டு ஓடிவருகிறார்கள். அவருடைய வீடிருக்கிற கோபாலபுரம் பகுதியே பதற்றத்தில் நிற்கிறது. பெரும் கூட்டம். வாயைச் சேலைத் தலைப்பால் பொத்தியபடி நிற்கும் பெண்கள், குழந்தைகளைத் தோளின் மீது தூக்கி உட்காரவைத்துக் கொண்டபடி எக்கி நிற்கும் ஆண்கள், கண்கள் இடுங்கிய வயசாளிகள், பெரிய இளைஞர் கூட்டம், பர்தா அணிந்த இளம் பெண்கள் — எல்லோர் முகங்களிலும் பதைபதைப்பு. பேச்சுமூச்சின்றி வெளியே கொண்டுவரப்படும் அவரைப் பார்க்கிறார்கள். அந்தக் கணம் வரை உச்ச அழுத்தத்திலிருந்த அன்பு நெஞ்சுக்கூட்டை உடைத்துக்கொண்டுவரும் அழுகையாகப் பீறிடுகிறது: “ஐயோ என் தலைவா...”

கருணாநிதி மறைந்த அன்று தமிழ்நாடு உறைந்தது. ஒவ்வொருவருக்கும் அவரைப் பற்றிப் பேச ஒரு கதை இருந்தது. நல்லதோ, கெட்டதோ அவருடைய வாழ்க்கை, அவருடைய அரசியல் நுழையாத வீடு என்று ஒன்று தமிழ்நாட்டில் அவர் காலத்தில் இல்லை.

காவிய வாழ்க்கை. நண்பர்களிடம் காசு வசூலித்து கையெழுத்துப் பத்திரிகை நடத்தினார். தெருக்களில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தார். ஊர் ஊராக அலைந்து நாடகம் போட்டார். ‘அம்பாள் என்றைக்கடா பேசினாள்?’ என்று அதிரவைக்கும்படி கேள்வி கேட்டார். காதலித்தார். சுயமரியாதைக்காரனுக்குப் பெண் கிடையாது என்றார்கள் பெண் வீட்டார். பெற்றோர் தேர்ந்தெடுத்த வேறொரு பெண்ணை மணந்தார். திருமணம் முடித்த அடுத்த வாரமே கூட்டங்கள் பேச வெளியூர் போனார். நான்கே வருடங்களில் மனைவியைப் பறிகொடுத்தார். அடுத்தது இன்னொரு கல்யாணம். போராட்டங்கள். சிறை. அப்புறம் இன்னொரு காதல். கல்யாணம். நடுநடுவே சினிமா. ஆட்சியதிகாரம். இடையில் தலைவனைப் பறிகொடுத்து நண்பனின் உதவியோடு தலைவரானார். அடுத்து அதே நண்பனை முரண்பாட்டில் கட்சியிலிருந்து நீக்கினார். நண்பன் அரசியல் போட்டியாளரானார்; மரணம் வரை கருணாநிதியால் வெல்ல முடியாதவரானார். நண்பனின் மரணத்துக்குப் பின்னும் யுத்தம் தொடர்கிறது, நண்பனின் அரசியல் வாரிசுடன். இம்முறை மாறி மாறி வெல்கிறார்கள், தோற்கிறார்கள். சண்டமாருதம் செய்துகொண்டிருந்த அந்தப் பெண் யாரும் எதிர்பாராத ஒரு நாளில் காலமாகிறார். கருணாநிதி அதே காலகட்டத்தில் மௌனமாகிறார். காலமெல்லாம் பேசிக்கொண்டிருந்தவரால் அதற்குப் பிறகு சாகும் வரை பேச முடியவே இல்லை.


காவிய வாழ்க்கை. கருணாநிதிக்கு மட்டும் இல்லை; அவரோடு சேர்த்து மெரினாவில் உடல் அடங்கியிருக்கும் அந்த நால்வரின் வாழ்க்கையுமே அப்படித்தான் இருந்தது. ஒரு நாடகாசிரியன், ஒரு வசனகர்த்தா, ஒரு நடிகன், ஒரு நடிகை. நான்கு பேரும் மாபெரும் நாடகங்களை நடத்தியவர்கள். அந்த நாடகங்களுக்குள்ளேயே அவர்களுடைய வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டவர்கள். பல சமயங்களில் அவர்களுடைய வாழ்க்கையே நாடகமாக விரிந்தது. பார்வையாளர்களாக இருந்த மக்களால் இரண்டையும் பிரித்துப் பார்க்க முடியவில்லை. பார்வையாளர்களும் நாடகத்தின் பாத்திரங்களாக மாறினார்கள். தமிழ் எல்லோரையும் இணைத்திருந்தது. கருணாநிதியோடு சேர்த்து ஒரு காலகட்டம் மெரினாவில் உறைந்துகொண்டது. ஒரு சகாப்தம் மண்ணுக்குள் தன்னை மூடிக்கொண்டது!


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# தமிழே

## கால்டுவெல்: திராவிட முகவரி

ஓர் அதிசயம் 1814—ல் நேர்ந்தது. தமிழ்நாட்டுக்கான சூரியோதயம் அன்று மேற்கில் நிகழ்ந்தது. அது கிழக்கு நோக்கிப் பயணப்பட்டு, தன் பேரொளியை இந்தியாவில் பரப்பிவிட்டு, தமிழ்நாட்டின் தென்கோடியில் மண்ணுக்குள் தன்னை மறைத்துக்கொண்டது. ஆனால், அதன் கற்றைகள் மட்டும் உலகின் விளிம்புகள்தோறும் இன்னும் வெளிச்சம் வீசிக்கொண்டிருக்கின்றன.




அந்த வெளிச்சத்தின் பௌதிகப் பெயர் கால்டுவெல்.

அவர் 77 வயதில் மறைந்தபோது, அவர் அடக்கம் செய்யப்பட்ட இடையன்குடி கல்லறை மீது இங்கிலாந்திலிருந்து ஒரு பூ விழுந்தது. 1891 அக்டோபர் 19 நாளிட்ட 'தி லண்டன் டைம்ஸ்' இவ்வண்ணம் எழுதியது: "1856—ல் முதன்முதலில் வெளியிடப்பட்ட அவரது திராவிடக் குழுமங்களின் ஒப்பிலக்கணம், மேற்கத்திய மொழி அறிஞர்களுக்கு ஒரு தேவ ரகசியக் கண் திறப்பாகவும், எதிர்ப்பாரற்ற — எவராலும் பின்தொடர முடியாத தனித்தன்மை மிக்கதாகவும் திகழ்ந்தது. அவரது 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' காலத்தால் அழியாத நினைவுச் சின்னமாய் என்றென்றும் நிலைத்திருக்கும்."

கால்டுவெல் இந்தியாவுக்கு நற்செய்தி சொல்ல வந்தவர்தாம்; இறைப் பணிக் கழகத்தின் தூதுவர்தாம்; சமயம் பரப்பும் நோக்கத்தைத் தலை மேல் சுமந்தவர்தாம். ஆனால், தேன் குடிக்கவந்த வண்டு மகரந்தச் சேர்க்கை செய்து, மலர்க்காட்டைக் கனிக்காடாய் மாற்றுவதுபோல், சமயத்தை ஏற்றிப்பிடிக்கப் போந்து திராவிடம் என்ற இனவியல் தத்துவத்தை இமயத்தில் ஏற்றிவைத்த கதைதான் கால்டுவெல் கதை.

வசீகரமானது அவரது வாழ்வு; ஆனால் வலிகளால் நிறைந்தது.


கால்டுவெல் கடந்து வந்த பாதை

அயர்லாந்தில் பிறந்து, தாய்நாடாகிய ஸ்காட்லாந்துக்கு 10 வயதில் இடம்பெயர்ந்து, 16 வயது வரை ஆங்கில இலக்கண இலக்கியக் கல்வி பெற்று, கவின் கலைக் கல்லூரியில் ஓவியம் பயின்று, பின்னர் மெய்யுணர்வு நாட்டம் பெற்று, சமயப் பணியே தம் பணி என்று இறுதியாக உறுதியுற்று, லண்டன் சமயத் தொண்டர் சங்கத்தில் 20 வயதில்

# தமிழே

## வைரமுத்து

இணைந்து, கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் ஐரோப்பியத் தொன்மொழிகளின் நீதி நூல்களையும் சமய நூல்களையும் தேர்ந்து கற்றுத் தெளிவு பெற்று, டேனியல் சேண்ட்ஃபோர்டு என்ற மொழிநூல் மேதையிடம் கிரேக்க மொழியை உயர்தனிச் செம்மொழிகளோடு ஒப்பாய்வு செய்து, சமயத் தொண்டர் சங்கம் ஆற்றுப்படுத்த, தென்தமிழ்நாட்டின் திருப்பணிக்காக 24 வயதில் கப்பலேறி, நான்கு மாதக் கப்பல் பயணத்தில் ஆந்திரம் — ஆரியம் இரண்டும் கற்று, 1838—ல் சென்னையில் இறங்கி 'ட்ரூ' என்னும் ஆங்கில அறிஞரோடு மூன்றாண்டு வாசம் புரிந்து, தமிழையும் தமிழ்நாட்டையும் தமிழர் பண்பாட்டையும் உயிருக்குள் உள்வாங்கி, 400 மைல் தூரத்தையும் நடந்தே கடப்பதென்று பாண்டி நாட்டுக்குப் பயணப்பட்டு, சோழ நாடடைந்து, காவிரியோடு நடந்து, சிதம்பரம் — மயிலாடுதுறை வழியே தரங்கம்பாடி சென்று தங்கி, குடந்தை அடைந்து, நிலவளம் — நீர்வளம் — மொழிவளம் — பண்பாட்டு வளத்தை உற்றறிந்து, திருவரங்கம் புகுந்து நீலகிரி அடைந்து கோவை வழியே மதுரை அடைந்து, பொருநை வழியே பாளையங்கோட்டை கடந்து நாசரேத் சென்று தன் இறுதி எல்லையான இடையன்குடியை ஓர் இரவிலே அடைந்து, அங்கேயே தங்கி, தன் தேகம் வருத்தித் தெருக்கள் திருத்தி, தெருப் பணியோடு திருப்பணி தொடங்கி, 29 வயதில் நாஞ்சில் நாட்டில் வளர்ந்த நங்கை எலீசா என்னும் கிறித்துவத் திருமகளை மணம்புரிந்து, சமயப் பணியும் சமுதாயப் பணியும் ஆற்றிமுடித்து, 33 ஆண்டுகள் முயன்று கிறித்துவக் கோயில் கட்டியெழுப்பி, தமது 77—ம் வயதில் இயற்கை கொழிக்கும் கொடைக்கானலில் இயற்கை எய்தி, இடையன்குடியில் தான் கட்டிய கோயிலில்



அடக்கஞ்செய்யப்பட்டதுதான் கால்டுவெல்லின் ஒருவரிச் சரிதை.

கால்டுவெல்லின் வாழ்க்கை இத்தோடு கழிந்திருந்தால் காலப் பெருவெள்ளத்தில் மற்றுமொரு குமிழியாய் ஓசையின்றி உடைந்திருப்பார். ஆனால் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற பேராய்வுதான் அவருக்குக் கால முகவரி தந்தது; திராவிடம் என்ற இனத்துக்கு மூல முகவரி தந்தது.

18—19—ம் நூற்றாண்டுகளில் தமிழ் இனத்தின் மீது ஒரு கெட்டி இருட்டு கொட்டிக் கிடந்தது. சூரியக் கதிர்களும் துளைக்க முடியாமல் இறுகிக் கிடந்தது அந்த இருட்டு. அந்த வெளியேறாத இருட்டை வெட்டியெடுத்த ஐரோப்பியக் கோடரி கால்டுவெல்.

சம்ஸ்கிருதம்தான் இந்தியாவின் மொழிகளுக்கெல்லாம் தாய் என்ற கருதுகோள் ஐரோப்பிய வெளியெங்கும் ஆணித்தரமாக நம்பப்பட்டது. மாக்ஸ் முல்லர் போன்றவர்கள் வடமொழி இலக்கியம் — பண்பாடு — கலை என்பதைத் தாண்டித் தெற்கு நோக்கித் திரும்பவே இல்லை. திராவிட மொழிகளை வடநாட்டார் 'பைசாச பாகதம்' அதாவது 'பேய்களின் மொழி' என்றே பேசிவந்தனர். கோல் புரூக் — காரி வில்கின்ஸ் போன்ற ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களும் வடமொழியே திராவிட மொழிக் குடும்பத்தின் மூலம் என்ற மூளைச் சலவைக்கு ஆளாகிக் கிடந்தனர். இதற்குப் பின்னால் ஒரு 'மொழிஅரசியல்' இருந்தது. அதை உடைத்து தமிழ்மொழி என்றொன்று உண்டென்றும் ஞானக் கருவூலங்கள் கொட்டிக்கிடக்கும் ஆதிமொழி அதுவென்றும் எழுத்துருவில் ஐரோப்பாவிற்கு அறிவித்தவர்கள் பைந்தமிழ் பயின்ற பாதிரிமார்களே.

கால்டுவெல் என்ற யுக சம்பவம் நிகழ்வதற்குக் கால்கோள் செய்தவர்களைக் காலம் மறக்காது. 1606—ல் இத்தாலியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து மார்பில் பூணூல் தரித்து, கிறித்துவ மதம் பரப்பிய தத்துவ போதக சுவாமி என்ற ராபர்ட் டி நொபிலி, 1700—ல் இத்தாலியிலிருந்து வருகைதந்து தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கண்ட வீரமாமுனிவர் என்ற கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி, 1709—ல் ஜெர்மனியிலிருந்து வந்து தரையில் கால் மடக்கி அமர்ந்து மணலில் விரல் செலுத்தி எழுதித் தமிழ் கற்றுத் தொண்டாற்றிய சீகன் பால்கு, 1796—ல் இங்கிலாந்திலிருந்து வந்திறங்கி திருக்குறளின் முதல் 13 அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதிய எல்லிஸ் துரை, 1814—ல் ஜெர்மனியிலிருந்து வந்து திருநெல்வேலியில் 'சாந்தபுரம் —

சந்தோஷபுரம்' முதலிய பன்னிரண்டு கிராமங்களை உண்டாக்கிய இரேனியுஸ் அடிகள், 1838—ல் இங்கிலாந்திலிருந்து வந்து திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் ஆகிய பெருமக்கள் செய்த பெருந்தொண்டு தமிழையும் ஒரு மொழியென்று முன்னிறுத்தியது மேற்குலகில்.

ஆனால், தமிழ் என்பது திராவிடம் என்ற ஒரு மொழிக் குடும்பத்தின் தாய் என்றும், சம்ஸ்கிருதத்தின் வேரிலிருந்து அது முற்றிலும் வேறுபட்டதென்றும், சம்ஸ்கிருதத்தின் உறவின்றியே அது தனித்தியங்கும் வல்லமை கொண்டதென்றும் ஐரோப்பிய அறிவுலகம் அறிந்து மதித்தது கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' 1856—ல் இங்கிலாந்தில் வெளிடப்பெற்ற பிறகுதான். அதுவரை இந்திய மொழிகளின் மூலம் குறித்து ஐரோப்பாவில் நம்ப வைக்கப்பட்ட பிம்பம் கண்ணாடி நிழல் மீது கற்பாறை விழுந்ததுபோல் உடைந்து சிதறியது. திராவிடம் என்பது மொழிப்பரப்பு மட்டுமன்று; அது ஒரு நிலப்பரப்பு மற்றும் பண்பாட்டுப்பரப்பு என்றும் பின்பு ஐரோப்பா அறிந்தது.

தொல்காப்பியம் முதல் நேமிநாதம், வீரசோழியம், நன்னூல் வரையிலான நூல்களெல்லாம் தமிழின் அமைப்பிலக்கணம் கூறுவன. ஆனால், கால்டுவெல்லின் ஆராய்ச்சிதான் முதன்முதலில் தமிழின் ஒப்பிலக்கணம் கூறியது. ஒப்பிலக்கணம் என்பது மொழிப்புலத்தின் புத்தறிவியல். தீயும் சக்கரமும் கண்டறியப்பட்ட பிறகு மனித குலப் பயணம் புதுப்பாய்ச்சல் கொண்டதுபோல, ஒப்பிலக்கணம் என்ற மொழிஅறிவியல் தோன்றிய பிறகுதான் மொழிக் குடும்பங்கள் புத்தொளி பெற்றன.


கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம், சம்ஸ்கிருதம்தான் தமிழுக்குத் தாய் என்ற கருத்தை முதலில் கருக்கலைப்புச் செய்தது. மனிதர்களுக்கு மரபணுக்கள் மாதிரி மொழிகளுக்கு வேர்ச்சொற்கள் என்று கண்டறிந்து திராவிட மொழிகளின் வேர்ச்சொற்களை ஒப்பிட்டு உறழ்ந்து, தமிழே திராவிட மொழிகளின் தாய் என்பதை உலகமே ஒப்புக்கொள்ள ஓங்கி உரைத்தது. திராவிடம் என்பது, ஓர் ஆதி இனத் தொகுதியின் அடையாளக் குறி — இந்த மண்ணும் மண் சார்ந்ததுமான உரிமை உயில் என்பதை உறுதி செய்தது.

திராவிடம் எனும் ஆதிச் சொல்

திராவிடம் என்ற சொற்சுட்டு கால்டுவெல்லால் உண்டாக்கப்பட்டதன்று. அது ஓர் ஆதிச் சொல்.

'தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்' என்று மனோன்மணிய ஆசிரியரும், 'திராவிட உத்கல வங்கா' என்று மகாகவி தாகூரும், 'திராவிடத்திலே' என்று தாயுமானவரும்

சுட்டுவதற்கு முன்பே 14—ம் நூற்றாண்டில் மலையாள இலக்கியமான லீலா திலகம் 'திராவிடம்' என்பதைப் பிரித்துச் சொல்லியிருக்கிறது. 8—ம் நூற்றாண்டில் குமாரில பட்டர் என்ற வடமொழி ஆசானும் 'ஆந்திர திராவிட பாஷா' என்று குறிக்கிறார். பாகவத புராணத்தில் சத்திய விரதன் என்ற இந்திய மூதாதை 'திராவிட மன்னன்' என்றே அழைக்கப்படுகிறான். விஷாலர் என்று மனுதர்ம சாஸ்திரம் இழியினத்தாராக அழைக்கும் பட்டியலில் ஒட்டரர் — காம்போஜர் — யவனர் — சாகர் — பாரதர் — சீனர் — கிராதர் இவர்களோடு திராவிடர் என்ற பெயரையும்



எழுதிப்போகிறது. இப்படி இலக்கிய இலக்கண புராண முற்சுட்டுகளெல்லாம் திராவிடம் என்பதைத் தங்கள் வசதிக்கேற்பப் பொருள்சுட்ட, கால்டுவெல் மட்டும்தான் திராவிடம் என்பது ஓர் இனக்குழு நாகரிகத்தின் மூத்த மொழிச் சுட்டு என்பதை அறிவியல் அடிப்படையில் மெய்ப்பித்தார்.

இந்தி — வங்காளம் போன்ற கௌரிய மொழிக் குடும்பத்தில் சதையும் நரம்புமாய் ஒட்டிக்கிடக்கும் சம்ஸ்கிருதச் சொற்களின் ஆதிக்கத்தை ஆய்ந்து அந்த மொழிகள் வடமொழிச் சிதைவில் பிறந்தவை என்று மொழி வல்லார் முடிவு கட்டினர். மெழுகுவத்தியை ஊதி அணைத்தவர்கள் விண்மீனையும் அப்படியே அணைத்துவிடலாம் என்று கருதி, உச்சி வானம் பார்த்து உதடு குவித்ததுபோல, இந்திக்கும் வங்காளத்துக்கும் வைத்த அளவுகோலையே திராவிட மொழிகளுக்கும் நீட்டித்தனர். அவையும் வடமொழி வழிவந்தவையே என்று நம்பினர்; ஐரோப்பிய அறிவுலகத்தையும் நம்ப வைத்தனர்.

வடமொழியைக் கழித்துவிட்டால் இந்தியும் வங்காளமும் இயங்கவே இயங்கா. அதேபோல், தெலுங்கும் மலையாளமும் கன்னடமும்கூட இயங்குவது அரிது; அல்லது கடிது. ஆனால், வடமொழிச் சொற்களை முற்றிலும் களைந்த பிறகும் வாழ வல்லதும் வளர வல்லதும் திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாக விளங்கும் தமிழ் மொழி ஒன்றே என்று கால்டுவெல் நிறுவினார். ஒரு மொழி தன் வேர்ச்சொற்களை எப்படி வினைப்படுத்துகிறது என்ற அளவுகோல் கொண்டுதான் அதன் பிறப்பும் இருப்பும் பெருமையும் பெறப்படும் என்று கணக்கிட்ட கால்டுவெல்லின் ஆராய்ச்சிகள் அரிதானவை. அறிவுலகத்தால் மறுக்க இயலாதவை.

அவர் எழுதுகிறார்: "திராவிட மொழிக் குடும்பங்களின் வேர்ச்சொற்கள் ஓரசைத் தன்மை உடையவை; உயிர் நெடில் உடையவை; குறிலோடு உயிர்கூடிய மெய்யீறு கொண்டவை." இதை மெய்ப்பிக்க அணுவைப் பிளப்பதுபோல் சொல்லைப் பிளக்கிறார். 'பெருகுகிறது' என்ற சொல் ஆறசை உடையதாயினும் உண்மையில் அதன் வேர் ஓரசையே என்று உணர்த்துகிறார்.

பெருகுகிறது என்ற சொல்லில் ஈற்றசையாகிய 'அது' அஃறிணை ஒருமை விகுதி; 'கிறு' என்பது நிகழ்கால இடைநிலை. இரண்டையும் கழித்தால் 'பெருகு' என்பதே வினையின் பகுதி. 'கு' என்பது தன்வினை உணர்த்தும் அஃறிணைச் சொல்லாக்கம். எனவே 'பெரு' என்பதே வினைமூலம் என்று பெறப்படும். இதிலும் ஒலிநயம் கூட்ட வரும் உகரம் களைந்தால் 'பெர்' என்பதே வேர்ச்சொல்லாய்ப் பெறப்படும். திராவிட மொழிகள் அனைத்துக்கும் இந்த வேர்ச் சொல் விதி பொருந்தும்; வேர்ச் சொல் அடிப்படையில் ஆராய்ந்து திராவிடமும் சமஸ்கிருதமும் வெவ்வேறு குருதிக்குடும்பம் என்று விளக்கமுறச் செய்தார் கால்டுவெல்.

"திராவிட மொழிகளில் சமஸ்கிருதச் சார்புத் தன்மைகளைவிட எதிர்த்தன்மைகளே மிகுதி. திராவிட மொழிகளின் இடப்பெயர்களும் எண்ணுப் பெயர்களும் பெயர்வினை என்ற சொல்லாக்கங்களும் சம்ஸ்கிருதத்தோடு முற்றிலும் வேறுபட்டவை. தமிழ் மொழியில் சமஸ்கிருதத்தின் அளவு, ஆங்கிலம் கடன் வாங்கிக்கொண்ட இலத்தீனைவிடக் குறைவுதான்" என்று நீண்ட

ஆய்வுகளில் நிறுவினார் கால்டுவெல். இந்த ஆய்வுகளால் தமிழைக் கட்டிப்போட்ட சம்ஸ்கிருதத்தின் நூற்றாண்டு முடிச்சுகளை நுட்பமாக அவிழ்த்தார் கால்டுவெல்.

### திருந்திய மொழிகளும், திருந்தா மொழிகளும்

திராவிடக் குடும்ப மொழிகள் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் என்பதை எண்ணுப் பெயர்கள் கொண்டு எடுத்துக்காட்டுகிறார் கால்டுவெல். தமிழின் 'ஏழு' என்னும் எண்ணுப்பெயர் மலையாளத்திலும் ஏழு, கன்னடத்தில் ஏளு, துளுவில் ஏளு, தெலுங்கில் ஏடு என்று வழங்கப்படுகிறது. தமிழ் 'ழ'கரம் தெலுங்கில் 'ட'கரமாகும், கன்னடத்தில் 'ள'கரமாகும். ஆகவே அவையாவும் ஒரே குடும்பம் என்று உறுதிசெய்தார்.

மலையாளம் என்ற மொழிப்பெயரை 'மலய' என்ற வடமொழியின் திரிபு என்று கருதுவாருண்டு. அது அவ்வாறன்று. தமிழில் வழங்கும் 'மல்' என்ற வேர்ச் சொல்லுக்கு வளம், வலிமை என்று பொருள். அதனால்தான் பெருங்குன்றுக்கு 'மலை' என்று பெயர் வந்தது. எனவே மலையாளம் என்ற மொழிப்பெயரே அது தமிழ்க் குடும்பம் என்று சுட்டுகிறது.

தெலுங்கு மொழியை ஆதிப் புலவர்கள் அழைத்த பெயர் தெனுகு அல்லது தெனுங்கு என்பதே. அது அவ்வாறாயின் 'தேன்' என்ற வேரடியிலிருந்தே பிறந்திருக்க வேண்டும் என்பது ஒரு கூற்று. இது ஏற்புடைத்தாயின் தமிழ் வேரிலிருந்தே நமது சகோதரத் தெலுங்கு மொழியும் பெயர்பூண்டிருக்க வேண்டும் என்று பெறப்படும்.

வடமொழியில் இருந்து பிறந்ததே 'கர்நாடகம்' என்று சிலர் கருதுவர். ஆனால், மொழி அறிஞர் குண்டர்ட் கூற்றுப்படி 'கரு+நாடு+அகம்' என்ற தமிழடியாகப் பிறந்தது என்பதே சால்புடைத்து.

துளு மொழிக்கு எழுத்துருவும் இல்லை; இலக்கியமும் இல்லை. ஆனால் அது அச்சு வடிவம் கண்டதென்னவோ கன்னட எழுத்துருவைக் கடன்வாங்கித்தான். எனவே, அதுவும் திராவிட மொழிக் குடும்பத்தின் அங்கம் என்பது ஆதாரபூர்வமாக அறியப்படுகிறது.

பிறப்புமுறை — ஒலிப்புமுறை — அமைப்புமுறை ஆகியவற்றால் திராவிட மொழிக் குடும்பம் ஒன்றென்பதும் அது சம்ஸ்கிருதத்துக்கு மாறுபட்டுத் தனித்துத் தோன்றியதென்பதையும் தரணிக்கு மட்டுமன்று தமிழர்க்கும் அவரே உணர்த்தினார்.




திராவிட மொழிக் குடும்பத்தைத் திருந்திய மொழிகளென்றும் திருந்தா மொழிகளென்றும் இரண்டாகப் பிரிக்கிறார் ஆய்வாளர் கால்டுவெல்.

தமிழ் — மலையாளம் — தெலுங்கு — கன்னடம் — துளு — குடகு ஆகிய ஆறும் திருந்திய மொழிகளென்றும், துதம் — கோதம் — கோண்ட் — கூ — ஓரியன் — ராஜ்மகால் ஆகிய ஆறும் திருந்தா மொழிகளென்றும் ஆய்ந்து அறிவிக்கிறார். சம்ஸ்கிருதத்திலிருந்தே திராவிட மொழிகள் பிறந்தன எனும் கூற்று உண்மைக்குப் புறம்பானதென்பதைத் திருந்தா மொழிகளைக்கொண்டே தீர்ப்பளிக்கிறார்.

“திராவிட மொழிகளைச் சம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தனவாகவே கொள்ளுதல் வேண்டும் என்று கூறும்கீழைநாட்டுமொழிநூலறிஞர்கள்,சம்ஸ்கிருதச் சொற்கள் அறவே இடம்பெறாதனவாய் திருந்தாத் திராவிட மொழிகள் இருப்பதை அறிந்தவரல்லர். சம்ஸ்கிருதச் சொற்களை மேற்கொள்ளும் திராவிட மொழிகளும் அச்சொற்களை

ஆடம்பரப் பொருளாகவும், அழகுதரும் பொருளாகவும் மதிப்பதல்லது மொழிவளர்ச்சிக்கு இன்றியமையாதனவென்று மதிப்பதில்லை.” திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண முதல் பாகத்தில் கால்டுவெல் கூறும் கட்டியம் இது. இந்தக் கருத்தை வெறுப்பாருண்டு; மறுப்பாரில்லை.



மறதியின் புழுதி மறைத்த அருந்தொண்டுகள்

கால்டுவெல் ஊர் திருத்தியும் சீர்திருத்தியும் பேர்திருத்தியும் ஆற்றிய பெருந்தொண்டுகள் பலவற்றை மறைத்துவிட்டது மறதியின் புழுதி.

ஒன்பது பள்ளிகள் உண்டாக்கி, பிள்ளைகளுக்கு அவர் மதிய உணவு தந்த மாண்பு மறந்து போயிற்று. வேட்டி கட்டிய விலங்குகளாய்த் திரிந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர் பெற்றுத்தந்த சமூக மரியாதை பேசப்படவில்லை பெரிதாய். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற பேரொளியின் முன்னே அவர் எழுதிய ‘தாமரைத்தடாகம்’, ‘ஞான ஸ்நானம்’, ‘நற்கருணை’, ‘திருநெல்வேலிச் சரித்திரம்’ போன்ற தீபங்கள் மங்கிப்போயின. குங்குமத்தின் குழந்தை போன்ற தேரியின் செம்மண்ணை வியன்னா ஆராய்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி, உலகில் எங்குமே அறியக் கிடைக்காத அரிய மண் அதுவென்று நெல்லைச் சீமைக்கு அவர் பெற்றுத்தந்த பெரிய பெருமை பெரிதும் அறியப்படவில்லை. படைப்போவியமாய் எழுதிப்பார்த்துப் புடைப்போவியமாய் அவர் எழுப்பிய கிறித்துவத் திருக்கோயில் போதிய கீர்த்தி பெறவில்லை. அந்த இடையன்குடி ஆலயத்திலேயே அவர் திருமேனி அடக்கம் செய்யப்பட்டிருப்பதை அறிவுலகம் தவிரப் பிற உலகம் அறியவில்லை.

சமயப் பணி ஆற்ற வந்த கால்டுவெல் சமுதாயப் பணியும் ஆற்றி, திராவிடம் என்ற கருத்தியலை இமயத்தில் ஏற்றி வைத்து இங்கேயே — இந்த மண்ணிலேயே தன் பூத உடலைப் புதைத்துக்கொண்டார். இந்த நூற்றாண்டில் அதிகமாகப் பேசப்பட்ட வார்த்தைகளான திராவிடம் — இன உணர்வு — விடுதலை — சுயமரியாதை — தனித்தமிழ் இயக்கம் — தமிழ் — தமிழர் என்ற அனைத்து நெருப்புக்குமான மூலப்பொறி கால்டுவெல்லின் மூளையிலிருந்தே மூண்டது.

இதை எனது கூற்றாக முன்வழிவதைவிடக் கலாநிதி க.கைலாசபதியின் கூற்றை வழிமொழிவதே வழிகாட்டுதலாகும். “தமிழர் சமயம், தனித் தமிழ், இந்தி எதிர்ப்பு, சுயமரியாதை இயக்கம், தமிழ்ப் பாதுகாப்பு, தமிழ் அரசு, முதலிய கருத்தோட்டங்களுக்கும், இயக்கங்களுக்கும், எழுச்சிகளுக்கும், கோரிக்கைகளுக்கும் கால்டுவெல் பாதிரியாரது ‘மொழியியல்’ கருத்துரைகள் தோற்றுவாயாக இருந்தன என்பது உண்மைக்குப் புறம்பாகாது. பிற்கால அரசியல், சமூக, சமய இயக்கங்கள் பலவற்றின் ஆன்மீகத் தந்தையாகப் பாதிரியார் விளங்குகிறார். அவ்வாறாயின் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பாதிரியாரது ஞானபுத்திரன் ஆவார்: மறைமலையடிகளும் அவர் போன்றாரும் ஞானப் பௌத்திரர் ஆவர்” என்பது அவரது திறனாய்வுத் தீர்ப்பு.

நன்றி அய்யனே! ஒரு தலைமுறைக்கே தலையறிவு தந்தவனே! எங்கள் மூல முகவரி அறிந்து சொன்ன மூதறிஞனே! தாய்க்கு முகமெழுதிய தனயனே! அயர்லாந்தில் கருவுற்று இடையன்குடியில் திருவுற்றவனே! பைன் மரங்களுக்கிடையே கண் விழித்துப் பனை மரங்களுக்கிடையே கண்மூடியவனே! உனக்கும் கிறித்துவச் சமுதாயத்தின் பெருந்தொண்டுக்கும் தமிழ்ச் சமுதாயம் கடமைப்பட்டிருக்கிறது. வாழ்க உன் புகழ் என்று வானம் பாடுகிறது. தெற்கத்திக் காற்று ‘ஆமென்’ சொல்கிறது. திராவிடச் சமுதாயம் ஆமென்று சொல்கிறது!

மகத்தான தமிழ் ஆளுமைகளை இளைய சமூகத்திடம் கொண்டுசேர்க்கும் விதமாக கவிஞர் வைரமுத்து அரங்கேற்றிவரும் ‘தமிழாற்றுப்படை’ கட்டுரைத் தொடரில் ஆகஸ்ட் 25 அன்று அவர் வாசித்த கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம்.

# வென்றாரும் வெல்வாரும் இல்லா வகையில் ஒளிவீசும் தலைவர்!



குன்றனைய புகழ் கொண்ட குணக்குன்றே!
முடியரசர்க் கில்லாத செல்வாக்கு எல்லாம்
முழுமையுடன் பெற்று விளங்கும் முழுமதியே!

படிமிசை நீ பெற்ற கீர்த்தியெல்லாம்
பார்க்கின்றாள் —சத்யா அன்னை!


மடிமிசை உன்னைச் சுமந்தநாள் நினைத்து
மகிழ்ச்சியில் வடிக்கின்றாள் கண்ணீர் தன்னை!
கொன்றாலும் நிலைத்திருக்கும் தருமமென்று

குருடர்களுக்கு எடுத்துரைத்த மறுபிறப்பே!
வென்றாரும் வெல்வாரும் இல்லா வகையில்
எந்நாளும் ஒளிவீசும் தன்மதியே!
தென்னாடும் தென்னவரும் உள்ளவரை
மன்னா உன் திருநாமம் துலங்க வேண்டும்!
உன்னாலே உயர்வடைந்த என் போன்றோர்
உள்ளங்கள் அதைகண்டு மகிழவேண்டும்!

**(மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு எழுதிய வாழ்த்துக் கவிதை!)**

## கலைஞர் மு.கருணாநிதி

# ஆருயிர் அண்ணன் அருகில் ஆறுதல் கொள்க !



என்னருமை கலைஞரே! — உன்
எதிர் முகாமைச் சேர்ந்தவன்தான்
என்றாலும் கூட
எனக்குள்ளிருக்கும் உனக்கான அன்பு
என் விழிகளில் கண்ணீராய்
எட்டிப்பார்த்து பின் உடைப்பெடுத்ததை
எப்படி மறைக்க? — இனி
என்றுன் தமிழ் கேட்பேன் என்று
எம் தமிழன்னைத் துடிப்பதை
எவ்விதம் நான் உரைக்க?

மடிப்பால் அருந்துகையில்
கடித்துவிடும் குழந்தையென
பொடிப்பயல் இவன் இரங்கலிலுமா
இடித்துரைத்திட வேண்டுமென
அடிப்பொடிகள் சீறினாலும் —நீயோ
வெடிச்சிரிப்புடன் ஏற்றிடுவாயென
அடித்துச் சொல்வேன்! —உன்னைப்
படித்திட்டவன் என்ற உரிமையோடு
வடித்திட்ட இந்த இரங்கற்பாவினை
துடிப்புடன் கேண்மின்! கேண்மின்!

பரிதியின் பிழம்பே! —உயிர்களின்
பரிணாம வளர்ச்சி போன்ற
அரிதான காட்சி — உன்
பரிமாண வளர்ச்சி!
செரிமானிக்க முடியாததையும்
செரிமானித்து விடும் உன் முதிர்ச்சி!
புரியாத மனித அறிவியலின்
அரிதான புதிர் முடிச்சு!

உதய சூரியன்
உதிக்கும் முன்பே விழித்தெழும்
இதய சூரியனே!
இருபத்து நான்கு மணிநேரத்தை
அறுபத்து நான்கு மணிநேரமாய்
உருமாற்றத் தெரிந்த
உன்னத உழைப்பாளனே!

வாழ்வதே சாதனையென
வாழும் மனிதர்க்கிடையே
வாழ்வு முழுதும் சாதனையென —நம்
வரலாற்றுக்கு உழைத்திட்டாய்!
வரலாற்றைத் திருத்திட்டாய்!
வரலாறாய் நிலைத்திட்டாய்!

மொழியா பழியா எனும்போது
மொழியே உயிரென்று முழங்கி
‘வீழ்வது நாமாக இருந்தாலும்
வாழ்வது மொழியாக வேண்டும்!’
மொழிந்திட்டாய்! —தமிழ்
மொழியை மழையாய்
பொழிந்திட்டாய்!
மொழியால் வளர்ந்து
மொழியாலே உயர்ந்திட்டாய்!
மொழியை உயர்த்திட்டாய்!

போராட்டக் காலத்து
தரையோ...
பாளையங் கோட்டைச்
சிறையோ..
தலைமைக் கோட்டை
அறையோ...
எந்த இடத்தில் நீயிருப்பினும்
அந்த இடம் தமிழ் மணக்கும்
பள்ளியறை!..

ஐம்பதாண்டுகள்
கட்சித் தலைமை!
அறுபதாண்டுகள்
சட்டமன்ற இருக்கை!
என்பதாண்டுகள்
பொதுவாழ்க்கை!

தொண்ணூற்று நான்காண்டுகள்
தொண்டு தொண்டென்றே
தொடர்வண்டி போல
தொய்விலாது ஓடிய
தொல்காப்பியனே!

பராசக்தி வசனங்களை
பராசக்தியே கேட்டாலும்
பாராட்டுவாள்! —முத்தமழை
நீராட்டுவாள்! —உன் தமிழைச்
சீராட்டுவாள்!

முத்தமிழிலும்
முத்திரை பதித்திட்ட
முதுபெரும் ரத்தினமே!
முத்துவேலரின் நித்திலமே! —நீ
முழங்கினால் —அது
முரசொலி!
முனைந்து எழுதினால் —அங்கே
முழங்கும் சங்கொலி!

அரசாண்ட அடையாளங்களாய்
அடிக்கல் பல நாட்டினாய்!
வான்புகழ் வள்ளுவனுக்கு
வான்முட்டும் சிலை!
புகார் தந்த கண்ணகிக்குச் சிலை!
புகார் நகரப் பெருமைக்கு கலை!
சாதிக்கு கல்லறை கட்டிடவே —நீ
சாற்றிய சமத்துவபுரங்களால்
சாதித்தாய்! —சாதிக்குத் தீயிட்டாய்!

நாட்டு நலம் கருதி
நீ தீட்டிய கட்டங்கள்!
நீ தந்த திட்டங்கள்!
நீ இட்ட சட்டங்கள்! —யாவும்
நாட்டின் உயர்மட்டங்கள்!

வார்த்தைகள் உன்னிடத்தில்
வாளும் வேலுமாய் விளையாடும்!
வாலைக் குமரியாய் சதிராடும்!
வாலி எனும் பெருங்கவிஞன்
வாளிப்பாய் முதல்வரி எழுதிவிட்டு
வார்த்தை அடுத்து வராமல்
வாயடைத்து அமர்ந்திருக்கையில்
வார்த்தை அடுத்ததை
வாசித்து நீ கொடுத்ததை
வாலியை மிஞ்சி நீ நின்றதை
வார்த்தையில் எவ்விதம் சொல்ல?

'அரசியல் பிழைத்தோர்க்கு
அறம் கூற்றாகும்!' —எனும்
அறத்தை நன்றாய்
அறிந்திருந்தும் —உனக்கு
அரியணை தந்து
அழகு பார்த்த நண்பனையே
அதெப்படி தூக்கி எறிந்தாய்?

அன்பின் மேன்மை
அறிந்தவனென்று
அன்னார் பலரும் புகழ்ந்திடும்
அரசியல் சாணக்கியனே!
'அரசியலில்
அன்பனுமில்லை பகைவனுமில்லை!'
அரிச்சுவடியை மெய்ப்பிப்பதற்கா?
அன்றேல் —இதுவே
அரசியலென்று மெய்ப்பிப்பதற்கா?

அரசியல் நகர்வுக்கேற்ப
அது இதுவென எது எதுவோ
அரங்கேற்றியபடி
அறிக்கை விட்டபடி
அன்றாடப் பொழுதும்
அச்சில் உன்பெயர் வரும்படி
அசராமல் பார்த்துக் கொண்ட —உன்
அசாத்தியம் —தனி
அதிசயம்! —கேள்விகள் நிறையவே
அதுபற்றியெல்லாம் கிடக்கின்றன

கரைய விட்ட காவிரி!
கருக விட்ட ஈழம்!
கணக்கு வழக்குகளென
கணக்கில்லாமல் —கேள்விக்
கணைகள் என்னுள்
கனன்றபடிதான் இருக்கின்றன
கலைஞரே!

கண்டவர் அதிசயிக்கும் நிறைகள்
கணக்கற்றளவில் உண்டென்றாலும்
கறைகளும் குறைகளும் —மணம்
கமழும் சந்தனப் பூச்சென
கனமாய் பூசிக்கொண்டவர்தான்
கலைஞர் என்பதை மறக்கவில்லை!
கண்மூடிப் புகழ உடன்பாடில்லை!
கண்ணியமாய்ப் பார்த்தால் —இங்கே
கறைகள் எவரிடத்தில் இல்லை?

கன்னித் தமிழின் காதலன்
கண்ணதாசனையும் விடவா
கசையடியாய் உன்னை வேறாரும்
கண்டித்திருக்க முடியும்? —அந்தக்
கண்ணதாசனுக்கும் இரங்கல்
கவிதை வடித்திட்ட
கனியமுதம் உன்னிதயம்!

விழவிழ எழுந்திடும்
விடாமுயற்சியின்
விலாசமே! —எவர்
விரும்பினாலும்
விரும்பாவிட்டாலும் — காலமகள்
விந்தையென யுகத்துக்கொருமுறை
விதந்திடும் அற்புதமானதொரு
விருட்சம் நீ! —மேவிய
விழுமியங்கள் பலவும் சேர்ந்த
வித்தகப் பெட்டகம் நீ!

வாழ்த்துக் கவிதைகள் நான்
வாசித்தளித்தபோது
வாங்கிக் கொண்டு
வாய்மணக்க புகழ்ந்தவுன்
வாஞ்சையில் —நான்
வார்த்தைகளற்று திளைத்ததனை
வாசமலரென நினைவு கூர்கிறேன்!

கார் அளவு புகழ் கொண்ட நீ
கால் அளவும் பேரில்லாதவனை
காணும்போதே அரவணைத்து 'நீயும்
காவிரி கரையில் பிறந்தவனா?
காவியம் நாம் படைத்திடவே
காவிரி நீர்தான் காரணம்!' —என நீ
காட்டிய நேர்க்கோட்டுச் சமத்துவத்தில்
கார்முகிலும் கரிப்புகையும் ஒன்றெனும்
காட்சியை அதெப்படி சட்டென
காட்டி விட்டாய்? —உன் நா அசைவும்
காவிரி போன்றே —நெடும்
காவியப் பெருமையுடைத்ததன்றோ!

'ஓய்வின்றி உழைத்தவன்! —இதோ
ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறான்!'
உயர் வாழ்வினைச் சொல்லும்
உனது வரிகளுடன்
உள்வாங்கிக் கொண்ட
உன் சந்தனப் பேழையின் வாசகம்
உலைவின்றி ஓயாது
உழைக்கும் ஒவ்வொருவருக்குமான
உன்னதக் கல்லறை வாசகமாய்
உன் சமத்துவம் அதிலும் தீட்டுகின்றாய்!

இருந்தபோதும்
இடஒதுக்கீட்டுக்காய் போராடினாய்!
இறந்தபோதும் —உன்
இறுதி இடத்தை உறுதி செய்ய
இடஒதுக்கீட்டுக்காய் போராடி
இறுதியாய் வென்றதில் —நீ
இட்ட வாக்கைக் காத்திட்டாய்! —ஆம்!

இரவலாக —உன்
இதயத்தைத் தந்திடண்ணா! —உன்
இடம்தேடி வரும்போது —உன்
இதயத்தைக் கால்மலரில்
இட்டிடுவேன் அண்ணா!' —என
இரங்கற்பா பாடிப்பெற்ற
இதயத்தை —சொன்னாற்போலவே
இறக்கி வைத்த தீர்க்கதரிசி நீ!

ஆயிரமாயிரம் எழுதிட்ட
ஆரூரானே! — உன் மேல்
ஆயிரம்தான் எனக்கு
ஆதங்கம் இருந்தாலும் —உன்னை
ஆரத்தழுவும் சொற்கள் என்னுள் உண்டு!
ஆல்போன்ற உன் பன்முகத்திறனை
ஆயிரம் வரிகளில் வடித்திட
ஆவல்!... ஆயினும்
ஆதங்கத்துடன் நிறைவு செய்கிறேன்

ஆற்றல்மிகு கலைஞரே!...
ஆழி தாலாட்டும் கரையோரம்
ஆருயிர் அண்ணன் அருகில்
ஆறுதல் கொள்க! —வானோர்க்கும்
ஆசுகவி தீந்தமிழில் சொல்க! —நீ
ஆங்கினும் நீடு புகழ் கொள்க!

**கொற்றவன்**



# இதுதான் இந்துஜா!

# சேதுபதியின் சேவை!

## வரவேண்டும்! புகழ் பெறவேண்டும்!

## புதுவரவு நல்வரவு!

கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் ரஜினியுடன் இணைந்து நடிக்கிறார் விஜய் சேதுபதி. இந்த நேரத்தில் விஜய் சேதுபதி தயாரிப்பில் லெனின் பாரதி இயக்கத்தில் வெளிவந்துள்ள மேற்கு தொடர்ச்சி மலை திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. பல விருதுகளை வாங்கியுள்ள இப்படத்தை பத்திரிகையாளர்கள் மற்றும் திரையுலகினர் எனப் பலரும் பாராட்டி வருகின்றனர். பல நிலைகளில் விஜய் சேதுபதி தன்னுடைய வளர்ச்சியினை நிரூபித்து வரும் சூழலில், சத்தமில்லாமல் பல சமூகச் சேவைகளையும் செய்து வரும் அரிய மனிதராகவும் அறியப்படுகிறார்!

இயக்குனர் அருண் கார்த்திக் இயக்கத்தில் காமெடி கலந்த பொழுதுபோக்கு மற்றும் திரில்லர் பின்னணியுடன் 'சூப்பர் டூப்பர்' என்ற படம் உருவாகி வருகிறது. இந்தப் படத்தின் நாயகனாக துருவா நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக 'மேயாதமான்' பட நடிகை இந்துஜா நடித்து வருகிறார். தனது பிரமாதமான நடிப்பால் ஏற்கேனவே இயக்குனர் சங்கர், ரஜினி போன்ற பிரம்மாண்டமனவர்களால் பாராட்டு மழையில் நனைந்தவரான இந்துஜா தமிழுக்குக் கிடைத்த இன்னொரு சாவித்திரி என்று புகழப்படுகிறார்.

## ஹாட்ரிக்சமந்தா!

## சமர்த்தா சமந்தா!

சமந்தா நடித்த மூன்று படங்கள் ஒரே நாளில் ரிலீசாக உள்ளது. நாகார்ஜுனாவின் மகனும், தெலுங்கு நடிகருமான நாக சைதன்யாவை திருமணம் செய்துகொண்ட சமந்தா, திருமணத்துக்கு பின்னும் முன்னணி நடிகையாகவே திகழ்கிறார். அவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான `இரும்புத்திரை', `நடிகையர் திலகம்' ஆகிய 2 படங்களும் ஒரே நாளில் வெளியானது. அதுபோல சமந்தா சிவகார்த்திகேயனுடன் நடித்த `சீமராஜா' படம் விநாயகர் சதுர்த்திக்கு ரிலீசாக இருக்கிறது. அதே நாளில் சமந்தா முதன்மை வேடத்தில் நடித்த `யு டர்ன்' படமும் 'நெஞ்சமெல்லாம் பல வண்ணம்' படங்களும் வெளியாகிறது. தென் இந்திய நடிகைகளில் முதன்முறையாக ஒரு நடிகையின் 3 படங்கள் ஒரே நாளில் வெளியாகும் அரிய சாதனைக்கு சொந்தக்காரர் ஆகி இருக்கிறார் சமந்தா.



## 'தல' புராணம்!

## விஸ்வரூபமாகட்டும் விசுவாசம்!

'விஸ்வாசம்' படத்தில் இரண்டு வேடங்களில் நடித்துள்ளார் அஜித். ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். அஜித் — சிவா கூட்டணியில் நான்காவது முறையாகத் தயாராகும் இப்படத்தை சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. தீபாவளிக்குப் ரிலீசாக வேண்டியது, தயாரிப்பாளர்கள் சங்கத்தின் வேலை நிறுத்தத்தால் தாமதமாகிய நிலையில், 'விஸ்வாசம்' படத்தின் பர்ஸ்ட் லுக் சமீபத்தில் வெளியாகி இணையத்தைக் கலக்கி வருகிறது. அதில், நரைத்த தலைமுடியுடனும், இளமைத் தோற்றத்துடனும் இரண்டு வேடங்களில் நடிக்கிறார். அஜித் இரட்டை வேடங்களில் நடித்து வெளியான 'அசல்' படத்துக்குப் பின் எட்டு ஆண்டுகள் கடந்து இரட்டை வேடத்தில் இந்தப் படம் வருவது குறிப்பிடத்தக்கது.


# மங்காத தமிழென்று

*1967 திராவிடக் கட்சிகளின் ஆட்சி தமிழகத்துக்குத் தந்தது என்ன?*

**1967** பொதுத் தேர்தலுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முதன்முறையாக மாநிலக் கட்சியொன்று ஆட்சியைப் பிடித்தது. முதலில் மாணவராகவும், பிறகு மாநில நிர்வாகத்தில் அதிகாரியாக இடம்பெற்றும் அப்போதைய மாற்றங்களை நேரிலேயே பார்த்தவர் எஸ்.நாராயண். “தமிழகத்தில் அரசியல் சித்தாந்தம் அரசின் கொள்கையாகவும், திட்டங்களாகவும் மாற்றப்பட்டதால் மக்கள் பயன்பெற்றார்கள். அப்படிப்பட்ட மாற்றம் இந்தியாவில் வேறு எங்கும் நிகழவில்லை” என்று தன்னுடைய புதிய நூலில் எழுதியிருக்கிறார். ‘தி திரவிடியன் இயர்ஸ்: பாலிடிக்ஸ் அண்ட் வெல்ஃபேர் இன் தமிழ்நாடு’ என்ற அவருடைய நூலிலிருந்து சில பகுதிகள்:

## அண்ணாவுக்குப் பிறகு

தமிழக முதலமைச்சராக இருந்த சி.என்.அண்ணாதுரை 1969—ல் மறைந்தார்.



மு.கருணாநிதி முதலமைச்சராக அடுத்து பதவிக்கு வந்தார். இந்தியை எதிர்த்தவர்கள், டெல்லிக்கு எதிராக இயக்கங்கள் நடத்தியவர்கள், இளைஞர்கள், மெத்தப் படித்தவர்கள், ஆற்றொழுக்காக அடுக்கு மொழியில் பேசுகிறவர்கள் தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றனர். முந்தைய அரசுகளுக்கு இணையாக மட்டுமல்ல, அதைவிடச் சிறப்பாக மாநிலத்தின் வளர்ச்சிக்காகத் தங்களால் செயலாற்ற முடியும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் அவர்கள். 1969 தொடங்கி 1976 வரையிலான அரசின்

## சங்கே

# முழங்கு!

**எஸ்.நாராயண்**

கொள்கைகள் அனைத்தும் இத்தகையோரின் கருத்துக் கலவைகளால் விளைந்தவை.

ஆள்பவர்களின் அரவணைப்பு, கட்சித் தொண்டர்களின் பங்களிப்பு ஆகியவை வளர்ச்சிக்கு உதவின. மக்களுடைய கோரிக்கைகளை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளிடம் வலியுறுத்தியதை இளம் அதிகாரியாகப் பலமுறை பார்த்திருக்கிறேன். இது முக்கியமான மாற்றம். அதற்கு முன்னால், ஊராட்சி ஒன்றியத் தலைவர் அதிகாரிகள் சூழ இருக்கும்போது வளர்ச்சித் திட்டங்களை அவர்களுடன் விவாதித்திருக்கிறேன். இப்போதோ பாசனத்துக்கான தண்ணீர், ரேஷன் அரிசி, பள்ளிக்கூடச் செயல்பாடுகள் ஆகியவை தொடர்பாக மாவட்ட, வட்ட கட்சி நிர்வாகிகள் அதிகாரிகளைச் சந்தித்து மக்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து நடவடிக்கைகளை எடுக்கவைத்தனர். மேல் அதிகாரிகள் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கும் வழக்கம் மாறி, ஆளும் கட்சி நிர்வாகிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றத் தொடங்கினோம்.

சமுதாயப் படிநிலையில் முன்னேற நினைத்த குழுக்கள் உருவாகி ஆளும் கட்சியின் ஆதரவை நாடின. தொடக்ககாலத்தில் அவர்கள் மக்களுடைய குறைகளை மட்டுமே அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். ஏற்கெனவே இருந்த நிர்வாகச் சங்கிலித் தொடர்கள் மீறப்பட்டன. ஆண்டுகள்



செல்லச்செல்ல இந்தக் குழுக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகிகளிடம் வலியுறுத்தத் தொடங்கின. அரசு நிர்வாகத்துக்குக் கட்சித் தொண்டர்களிடமிருந்து கோரிக்கைகள் வருவது எப்போதாவது நிகழும் நிகழ்ச்சி என்பது மாறி, அன்றாட வழக்கமாகிவிட்டது. இதனால், மக்களுடைய கோரிக்கைகளும் குறைகளும் அரசு நிர்வாகத்தின் கவனத்தை உடனுக்குடன் ஈர்த்தன. அது ஒருவகையில் பின்னடைவாகவும் மாறியது.

## மேலே வந்த கீழ்நிலைச் சமூகங்கள்

அரசு வேலைகளிலும் கட்சியிலும் கீழ்நிலைச் சமூகங்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கிடைக்கத் தொடங்கியது. தமிழ்நாடு பொதுத் தேர்வாணையத்தின் தரவுகளின்படி 1960 தொடங்கி 1980 வரையிலான காலத்தில் அரசு வேலைக்கு வந்தவர்களின் சாதிப் பின்னணி அடியோடு மாறியிருந்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் அரசு வேலைகளைப் பெற்றனர். பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் இனச் சாதிகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வேலைக்குச் சேர்ந்ததால் அதிகாரவர்க்கக் கட்டமைப்பே அடியோடு மாற்றம் கண்டது.

மக்கள்தொகையில் குறைவாக இருந்தாலும், அதற்குப் பொருத்தமில்லாத வகையில் அபரிமிதமாக அரசு வேலைகளைப் பிராமணர்கள் ஆக்கிரமித்திருந்த நிலை சீராக்கப்பட்டது. புதிய வேலைவாய்ப்புகளில், முற்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவம் கணிசமாகக் குறைந்தது. அத்துடன் அரசு வேலையில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக, அதுவரை அரசு வேலைக்கே வந்திராத பல சாதியினர் வேலைகளைப் பெற்றனர். இது அரசின் நிர்வாகத்தில் பன்மைத்துவத்தை வலுப்படுத்தியது. இது மிகமிக முக்கியமான மாற்றம்.

1925—ல் நடந்த காஞ்சிபுரம் மாநாடு முதல் பெரியார் வலியுறுத்திவந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம், 1967—ல் தொடங்கி வலுவாக அமலானது. திராவிடக் கட்சிகளின் எண்ணங்கள், லட்சியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏராளமான சாதிகளை, பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அரசு வேலையில் சேர்ந்தனர். இதனால், அரசு நிர்வாகத்தில் பிரதிநிதித்துவ சமநிலை ஏற்பட்டது. அதனால், சமூகநலத் திட்டங்களையும் சமூகங்களுக்குப் பலன் தரக்கூடிய சேவைகளையும் அடுத்தடுத்த அரசுகளால் வழங்க முடிந்தது. அரசு ஊழியர்களின் சமூகப் பிரதிநிதித்துவம், 1965—ல் நான் பணியில் சேர்ந்தபோது இருந்ததைப் போல அல்லாமல், தமிழ்நாட்டு மக்களின் அனைத்துத் தரப்பையும் நன்கு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலேயே இருக்கிறது.

நான் அரசுப் பணியில் சேர்ந்தபோது மாவட்ட ஆட்சியரையும் மாவட்ட அரசு நிர்வாகங்களையும் சார்ந்துதான் எல்லாமே இருந்தன. அரசின் கொள்கைகளை அமல்படுத்தும் கரங்களாக ஆட்சியர்கள் இருந்தனர். காலனியாதிக்கக் காலத்திலிருந்து தொடர்ந்த அந்தப் பாரம்பரியம் அரசு நிர்வாகம் என்பதை அதிகார வர்க்கத்துக்குக் கட்டுப்பட்டதாக வைத்திருந்தது.

## மாற்றிக்காட்டிய தமிழகம்!

1967—க்குப் பிறகு தமிழ்நாட்டில் நிலைமை மாறியது. மக்களோடு இணைந்து பல இயக்கங்களை நடத்திய, மக்களின் பேராதரவைப் பெற்ற கட்சியாக திமுக இருந்தது. எனவே, பதவியில் இருக்கும்போது மக்களுடைய கோரிக்கைகளைச் செவிமடுப்பதும் அவற்றை உடனுக்குடன் நிறைவேற்றுவதும் அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. திமுக கட்டுக்கோப்பான தொண்டர்களைக் கொண்ட ஜனநாயகக் கட்சியாக இருந்ததால் மாவட்டச் செயலாளர்களால் கட்சியின் உயர் தலைவர்களுடன் நேரடியாக எளிதில் தொடர்புகொள்ள முடிந்தது.

அன்றாட அரசு நிர்வாகம் தொடர்பாகக்கூட மாவட்ட ஆட்சியர்களுடன் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனை கலப்பது வழக்கமாகிவிட்டது. மாவட்ட ஆட்சியர் பதவி அதிகாரம் மிக்கதாகவும், அனைவராலும் அடையப்பட வேண்டிய லட்சியப் பதவியாகவும் திகழ்ந்தது.

1971—க்குப் பிறகு திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இதுவும் மாறத் தொடங்கியது. கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்ததால், கட்சிக்குள்ளும் அரசு நிர்வாகத்திலும் தொண்டர்களின் கை ஓங்கியது. மாநில அரசின் வலுவான இரு கரங்களாக மாவட்ட ஆட்சியரும் ஆளும் கட்சியின் மாவட்டச் செயலாளரும் செயல்பட்டனர். அதிகாரிகளின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றில் மாநில அரசின் பங்களிப்போடு அரசியலுக்கும் முக்கிய செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது. இதனால்,

நிர்வாகம் அரசியல்மயமானது. இந்தக் காலத்தில்தான் அரசின் உயர் அதிகாரிகளில் பலர் ஓய்வுபெற்றனர், பலர் மத்திய அரசுப் பணிக்கு அயல்பணி அடிப்படையில் அனுப்பிவைக்கப்பட்டனர். மாநில அரசு நிர்வாகத்தின் அடித்தளத்தில் நிகழ்ந்த மாற்றங்கள் எளிதில் உணரக்கூடியதாக இருந்தது. அடுத்து அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தபோதும் இதுவே நடந்தது.

அலமாரி

# புத்தக விமர்சனம்

## *தொல்காப்பியப் பூங்கா*

**ஆசிரியர் : கலைஞர் மு.கருணாநிதி**

**இலக்கியம், வரலாறு**

**விலை : ரூ. 450**




**வெளியீடு:**

**பூம்புகார் பதிப்பகம்**

No 127, old no.63, Prakasam Salai,
Broadway Rd, Chennai -600108

*தொல்காப்பியம் தொல்காப்பியரால் இயற்றப்பட்டது. தொல்காப்பியப்பூங்கா மு.கருணாநிதி அவர்களால் அதன் விளக்க உரையாக மலர்ந்தது. காலத்திற்கேற்ற புதுமைக் கருத்துக்களைக் கையாண்டு வரலாற்றுக் குறிப்புகளை ஆங்காங்குத் தந்து விளக்கம் எழுதிய தனிச்சிறப்பு கலைஞருக்கே உரியது. தமிழில் கிடைத்துள்ள நூல்களில் மிகத் தொன்மையானது தொல்காப்பியம்.*

*இதை ஒரு, 'மரம் அடர்ந்த காடு' எனக் கருதி உள்நுழைய அஞ்சி நின்றனர் தமிழ் மக்கள். அது காடன்று, ”கவின் மலர்கள் மலர்ந்து மணம் கமழும் பூங்கா” என நிறுவித் தம் கருத்துக்களை வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துக்காட்டி அரிய உரை விளக்கம் தந்த கலைஞரின் தமிழ், கொஞ்சு தமிழாய் அன்னைத் தமிழைத் தாலாட்டும் விதம் வாசிப்போரை வளைத்துக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை!*

# அண்ணாவுக்கு கவிதாஞ்சலி

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம்— — அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்! — அவர்
மலர் இதழ்கள் தமிழ் பேசும்
மா, பலா, வாழையெனும் முக்கனியும்
தோற்றுவிடும்—!
விழிமலர்கள் வேலாகும் — வாளாகும்
தீங்கொன்று தமிழ்த் தாய்க்கு வருகுதென்றால்!
கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும்
பயணம் நிற்காது;

கைமலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை,
கழகத்தை
அம் மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர் போல் தலை நாணச் செய்துவிடும்
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப்பூ மணக்க
தாய்மொழித் தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்
நாடிவரும் பூமுடியே! புகழ் முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே — தினம்,
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனைக் காக்க எனைத் துறப்பேன்—என், —
ஒரு கோடி தமிழ் இளைஞர்
பாடிநின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்.

முடுகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல் மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினோ!
தங்கு கண் வேல் செய்த புண்களை
அன்பெனும் வேது கொண்டொற்றியுஞ்
செங்கனி வாய் மருந்தூட்டுவார்
சீர்மையைப் பாடக் கேண்மினோ!
பொரு தடக்கை வாளெங்கே; மணிமார்
பெங்கே;
போர் முகத்தின் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே யெங்கேயென்று
தம்பியரைக் கேட்டானைக் கேண்மின்!
கேண்மின்!

காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற் சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ என்று

மையல் கொண்ட மாதர் தமைத் துயில்
எழுப்பச்
செயங்கொண்டார் பாடினார்,
களப்பரணி.. கலிங்கத்துப் பரணி —
அளப்பரிய வீரத்தின் புகழ்ப்பரணி ——
யான்
கவிப் பரணியேறி, காஞ்சிபுரப் பரணி பாடி
நின்றேன்
அவலப் பரணி பாடுகின்றேன் இன்று…!

கவியினில் பொருளெனக் கரும்பினில்
சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமென
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையென
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ!
வெள்ளம்! வெள்ளம்! மாபெரும் வெள்ளம்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து
எட்டாம்
தாயகத்தில் மொழிப்புரட்சி தோன்றுதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றால், ஈரோட்டு
நாயகத்தின் இணையில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணன் களம் புகுந்தார் காஞ்
சிபூண்டு!
இருமூன்று திங்கள் வரை சிறையில் வாடி,
தரும் ஊன்று கோலாகத் தமிழைத் தந்து
அருமூன்று எழுத்தாலே அண்ணா வானார்!
அன்றொரு நாள் அய்ம்பத்திரண்டுதனில்
சென்னையிலே சொன்னேனே நினைவுண்டா
உங்களுக்கு?
மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு, முத்தமிழ்
மணமுண்டு!

மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முர சார்த்தவர் தமிழர் —— அவர்
வாழ்ந்த
தமிழ் வாழ்வுக்கு மூன்றெழுத்து —— அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் அன்புக்கு
மூன்றெழுத்து..
அன்புக்குத் துணை நிற்கும் அறிவுக்கு
மூன்றெழுத்து
அறிவார்ந்தோர் இடையிலெழும், காதலுக்கு
மூன்றெழுத்து..
காதலர்கள் போற்றி நின்ற கடும் வீரமோ
மூன்றெழுத்து..
வீரம் விளைக்கின்ற களம் மூன்றெழுத்து...
களம் சென்று காணுகின்ற வெற்றி
மூன்றெழுத்து
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்
அமைதி மிகு அண்ணா மூன்றெழுத்து
அறிந்திடுவீர் எனச் சொன்னேன்!

திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசையெங்கும் சொன் மாரி
வக்கற்றோர் வகையற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி!
எழுதுகின்றார் அண்ணா ஏடெல்லாம்
வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம்... புதுமை மணக்குதங்கே...
ஏடா தம்பி! எடுடா பேனா
எத்தனை உணர்ச்சி! எத்தனை எழுச்சி!
'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'
கருத்துப் பேழை——கற்பூரப் பெட்டகம்!
மரக்கிளையிலே பிணம் ——
வெந்த புண்ணிலே வேல்!
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்?
சாலை யோரத்திலே வேலையற்றதுகள் —
வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத
எண்ணங்கள் —
வேந்தே! அதுதான் காலக்குறி!
அண்ணனுக்கன்றி யாருக்கு வரும் இந்த
அழகு நடை?
அறிவு நடை?
கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது
தமிழகம் மறவாத் தலையங்கமன்றோ?
இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?

தம்பியுடையான் படைக்கஞ்சான்
ஒப்பில்லா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணீயம் எனினும் —— ——நம்
மனதில் பதித்தவர் அண்ணா வன்றோ!

மாற்றான் தோட்டத்து மல்லிகையும்
மணக்கும்
அரசியல் பண்பினை போதிக்கும் அழகே!
மறப்போம் —— மன்னிப்போம்
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல்போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார் அண்ணா —அதை மறுத்து
நாலைந்து பேர் குதித்திட்டார் என்றால்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணா —
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித் தாய் ஈன்றெடுத்த தம்பிகளே!
என அழைத்து கனிச் சுவையாய்க்
கற்கண்டாய்த்
தேன் பாகாய் அன்பு காட்டி
பனிமலர் வீழ் தும்பியதாய்த்
தழுவிக்கொண்டார்;

... அன்னைக் குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடி பாரதிதாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை கம்பர்க்கும்
சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும்
சிலை
பத்துச் சிலை வைத்ததினால் —
அண்ணன் தமிழின் பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது..
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்.
ஆணையிடுகிறார் எம் அண்ணா
என்றிருந்தோம்

அய்யகோ; இன்னும்
ஓராண்டே வாழப்போகின்றேன் என்று
அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம் அண்ணா... இதயமன்னா...
படைக் கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன்
தொடர்ந்தாய்
உன் கண்ணொளியின் கதகதப்பிலே
வளர்ந்தோமே;
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன்
மாற்றிவிட்டாய்?


நிழல் நீதான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப்போய் விட்டாய்
நியாயந்தானா?
நான்தானடா நன்முத்து எனச் சொல்லி
கடற் கரையில் உறங்குதியோ?...
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்.. இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை,
கொடுமைக்கு முடிவுகண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?

எதையும் தாங்கும் இதயம்
வேண்டுமென்றாய்:
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று வாங்கியது
போதுமண்ணா
எழுந்து வா எம் அண்ணா...
வரமாட்டாய்; வரமாட்டாய்,
இயற்கையின் சதி எமக்குத் தெரியும்
அண்ணா நீ
இருக்குமிடந்தேடி யான்வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா..
நான்வரும் போது கையோடு கொணர்ந்து
அதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...



**கலைஞர் மு.கருணாநிதி**

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"கருணாநிதி நினைவிட பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம்!"

**ஓ.பன்னீர்செல்வம்**

(அரசியல்தான் தெரியவில்லையே, இதிலாவது அரசியல் கிளப்பலாம் என நினைத்தவர்களின் வாயை இப்படிச் சொல்லியா அடக்குவது?)



"அழகிரியின் பின்னால் பா.ஜ.க இருப்பதாகக் கூறுவது இந்த ஆண்டின் மிகப்பெரிய ஜோக்!"

**தமிழிசை சௌந்தரராஜன்**

(உங்கள் கட்சி ஆட்சியில் இருப்பதை விடவா பெரிய ஜோக் இருக்கிறது)



"ரஜினிக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை!"

**அமைச்சர் ஜெயக்குமார்**

(நல்லவேளையாக ஒரு வார்த்தை தவறியிருந்தால் உண்மையைச் சொல்லிவிட்டிருப்பார் அமைச்சர்)



"ராஜபக்சேவுக்கு பாரதரத்னா விருது வழங்க வேண்டும்!"

**சுப்பிரமணிய சுவாமி**

(பைத்தியக்காரன் பத்தும் சொல்வான்! போகட்டும் விட்டுவிடுங்கள்!)

சிறப்புச் சிறுகதை



# புகழேந்தி

## கலைஞர் மு. கருணாநிதி

விஞ்ஞான ஆராய்ச்சியிலே அவனுக்கு நிகர் யாருமில்லை. இந்தியாவின் ஐன்ஸ்டின் என்று உபகண்டம் பாராட்டு படித்தது. சரித்திர ஆராய்ச்சியின் கரையைக் கண்டவன் அவன். சார்லஸ் ஆண்டபோது நடந்ததைக் கூற வேண்டுமா? ஷாஜகானின் குணாதிசயங்களை ஒன்று விடாமல் சொல்ல வேண்டுமா? நாசர் காலமா? சீசர் வீரமா? எல்லாமே அவனுக்கு மனப்பாடம். சுருங்கச் சொன்னால் அவனே ஒரு சரித்திரப் புத்தகம்.

இலக்கியத்திலே எது பற்றி அவனிடம் விவாதிக்க வேண்டும்? எதற்கும் தயார். கவிதைத் துறையிலே கம்பனா? ஷெல்லியா? காளிதாசனா? டென்னிசனா? பைரனா? பாரதியா ? யாரைப் பற்றியும் கருத்துரைகள் வழங்குவதிலே அவனுக்கு நிகர் யாருமில்லை என்பது மட்டுமல்ல, அந்தக் கவிதா மண்டலத்தோடு போட்டியிடவும் திறமை பெற்றவன். பொருளாதாரம் பற்றி விளக்கம் தேவையா? காரல் மார்க்ஸ் அனுப்பி வைத்த தூது போலத் தொடங்கி விடுவான், பொருளாதாரப் பிரசங்கத்தை. அமெரிக்காவின் ஆஸ்தி என்ன? ரஷ்யாவின் ரகசியமென்ன? இது போன்ற விவரங்களை மிக எளிதில் கற்றுத் தர வல்லோன்! கணிதத்திலோ மேதை! பூகோளத்துப் புலி! அரசியலிலே அவனொரு பிளேட்டோ. சமுதாயத்திலே சாக்ரடீஸ்! எழுத்திலே பெர்னாட்ஷா, ஷேக்ஸ்பியர் இருவரின் கூட்டு! பேச்சிலே டெமாஸ்தனிஸ் இங்கர்சால் இருவரின் கலப்பு — இத்தகைய மேதை. புதியபாதை வகுத்தவன். அவனது பெயர் கூறவே மக்கள் தயங்குவர் பெயரைக் கூறுவது அவன் பெருமையை இழிவுபடுத்துமோ என்ற சந்தேகத்தால். ஆகவே அவனை மேதை என்றே அழைத்தது இந்த மேதினி.

சில புலவர்கள் கூட அழகாகச் சொல்வார்கள் அவனது பெயரைப் பற்றி, “மே’ என்பது உலகத் தொழிலாளரின் உற்சவதினம். “தை’ என்பது தமிழரின் உழைப்பு வெற்றி தினம். ஆகவே இரண்டு பெருந் திருநாட்களும் சேர்ந்தமைந்த பொருத்தமான பட்டம் “மேதை’ என்று நமது சிந்தை கவர்ந்தவனுக்குச் சிறப்பான பெயர் அமைந்து விட்டது என்று கூறி மகிழ்வர் பல்லோர். வயதோ முப்பது நிறையவில்லை. வாலிபத்தென்றல்; அதற்குள்ளாக அவனுக்கு வந்து குவிந்த புகழோ பெருங்குன்றம்.

அவனைச் சுற்றி வாழ்த்துப் பாடியபடி எந்நேரமும் இருப்பார் மாணவரும், தொழிலாளரும், பண்டிதரும், பாமரரும். தனக்கு எத்துணைப் பெருமை வளர்ந்திருக்கிறது என எண்ணும்போது, மணக்கும் அவன் நெஞ்சம் புகழ் கண்டு பூரிப்படைவான். ஆனாலும் அவன் உள்ளம் புகையும் எரிமலை போல இருந்ததை அவனால் மறைக்க முடியவில்லை. மறைப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டான்.

புகழ்! புகழ்! புகழ்!

யாருக்கு வேண்டும் இந்தப் புகழ்? சரித்திர விற்பன்னன், ஜகம் புகழும் பூகோள மேதை, கணித நிபுணன், கவிஞருக்கு மன்னன், எழுத்து வேந்தன் என்றெல்லாம் உலகம் உளறுகிறது அவனைப் பற்றி! ஆனால் அவனோ துடித்துக் கிடக்கிறான். “தொலையாதோ இந்தப் புகழ்’ என்று மனம் வெடித்துச் சாகிறான். காரணம் அவனால் தனியே எங்கும் போக முடியாது. மாலை நேரத்தில் கடற்கரையில் உலவி வரலாமா? முடியாது. கூடாது என்று தடையல்ல, அவன் போக முடியாதபடி புகழ் அவனைத் தடுத்தது. நூறு, ஆயிரம் என்று மக்கள் சூழ்ந்து கொள்வர். “மேதை’ வந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் பரவும். தனிமையை நாடி வந்த அவன் புகழ்தரும் தலைவலி தாங்காமல் ஓட்டமாக ஓடி வீட்டுக்குப் போய்விடுவான். ரயிலில் போக முடியாது. கடைத்தெருப் பக்கம் தலைகாட்ட இயலாது. கண்காட்சி சாலைகளில் காலடி வைக்க முடியாது. புகழ், புகழ், புகழ் எங்கும் புகழ் அந்த மேதையின் நற்பண்புகள் பற்றிப் பேசாதார் இல்லை.



காதலனும் காதலியும் கொஞ்சிடும் அந்த அழகான நந்தவனத்தைப் பற்றி உணர்ச்சி பொங்கிட வர்ணித்திருக்கிறானே, அந்த ஒய்யார வனத்திலே உல்லாச கீதம் பாடும் ஜீவஜோடிகளை யாரும் சித்திரிக்காத வண்ணம் சித்திரித்து எழுதி இருக்கிறானே, படிக்கும்போதே நமக்கு ஒரு போதை தோன்றுகிறதே, அதை எழுதும்போது அவன் நிலை எப்படி இருந்திருக்கும். இப்படியெல்லாம் எழுதுவது போன்ற கற்பனையை வாழ்நாளில் தத்ரூபமாகச் சிந்திக்க வேண்டுமென்று அவன் விரும்பமாட்டானா? அந்த இன்ப விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தவித்திருக்க மாட்டானா? அந்த தவிப்பின்போது ரோஜா கிடைக்காவிட்டால் ஒரு கனகாம்பரம் என்ற அளவுக்குத் தன் ஆசையை விரித்திருக்க மாட்டானா? என்றெல்லாம் அவனைப் பற்றிப் பேசினார்.

“ஆச்சரியம்தான், நீ நினைக்கிறபடியோ, சந்தேங்கொள்ளுகிறபடியோ, அந்த மேதை வழுக்கி வி ழு ந் து விடுகிறவனல்லன். நிச்சயம் அத்தகைய வழியில் அவன் இறங்க மாட்டான்” என்று உறுதியோடும் பலர் பதிலுரைத்தனர்.

“நல்லொழுக்க சீலன் என எப்படி நவில முடியும். நாடு பல சுற்றியிருக்கிறான். ஏடு பல கற்றிருக்கிறான். ஏன் அவன் சற்குணனாய் இருக்க முடியாது?” இப்படிக் கேள்வியும் பதிலும் மாறி மாறி!

“”தான் எதிர்பார்த்து நடைபோடும், அந்த லட்சியம் கைகூடும் வரையில் — உலகத்திற்கு அந்த ஒப்பற்ற பரிசை வழங்கும் வரையில் அவன் திருமணமே செய்து கொள்ள மாட்டானாம்.”

இந்தப் பிரசாரமும் பரவியது, அவன் அப்படிச் சொன்னானோ இல்லையோ எல்லோரும் அப்படித்தான் நம்பிக் கொண்டிருந்தனர். அவன் சொல்லாததையெல்லாம் மக்கள் சொல்வர். அதைப் பற்றிப் புகழ்வர், அவனும் வேறு வழியின்றி,


"ஆமாம், சொன்னேன்" என்று ஒத்துக் கொள்வான்.

"லட்சியம் கைகூடும் வரையில் உறங்கவும் மாட்டாராம்". இப்படிப் பிரச்சாரம் நடைபெறும், அன்பின் மிகுதியில் கிளம்பும் வதந்தி. அவனைப் போய்க் கேட்பர். " உங்கள் லட்சியம் கைகூடும் வரையில் உறங்கமாட்டீர்களாமே! ஆகா, என்ன உறுதி" எனப் புகழ் பாடியபடியே.

"இல்லை, இல்லை எனக்கு அப்படியெல்லாம் லட்சியத்தில் மோகமில்லை" என்றா அவனால் சொல்ல முடியும்? முடியாது. ஆகவே, "ஆமாம் உறங்கமாட்டேன்" என்பான். அதற்காகத் தன்னைச் தாங்கிக் கொண்டு அழுக்கு ஆடைகளை உடுத்துவான்.

"பெரிய மகானுக்கும் நமது மேதைக்கும் என்ன வேறுபாடு? ஒன்றுமில்லை, பெண் என்றால் திரும்பியும் பார்ப்பதில்லையே இவர்" என்று அதிசயமாகப் பேசுவர் பலர்.

" உம் — பெண்ணாவது மண்ணாவது" என்று மேதையும் அவர்களோடு சேர்ந்து பேசுவான். பேசத் தானே வேண்டும், அவனுடைய பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள!



சுற்றியிருப்போர் தூங்கிய பிறகு நாற்காலியில் உட்கார்ந்தபடியே எதையோ சிந்திப்பது போலத் தூங்கிக் கொண்டிருப்பான், பாவம், அதுவும் அமைதியற்ற அரைத் தூக்கம்.

"நமது மேதை, நல்ல வேட்டி, சட்டை கூட உடுத்துவதில்லை. அவருடைய எண்ணமெல்லாம் உலகத்திற்கு ஒரு புதிய வழி காண வேண்டுமென்பதிலேயே லயித்துக் கிடக்கிறது" என்பர் சிலர்.

"இல்லை, இல்லை நான் ஆடம்பரமாக உடை உடுத்துவேன்" என்றா அவன் கூற முடியும்? முடியாதே, பாவம் அதற்காக நாற்றத்தையும்

மேதை ஒரு நாள் வெளியூருக்கு அழைக்கப்பட்டிருந்தான், கல்லூரி ஒன்றிலே "விஞ்ஞான அறிவு' என்ற தலைப்பிலே சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக. கல்லூரித் தலைவரின் வீட்டிலேயே தங்கியிருந்தான். யாரும் தொந்தரவு கொடுக்காமலிருப்பதற்காகத் தனியாக மேல் மாடியில் மேதைக்கு இடவசதி செய்து கொடுத்திருந்தார், கல்லூரித் தலைவர். கல்லூரியில் மேதையின் சொற்பொழிவு நடைபெற்றது. விஞ்ஞானத்தின் பெருமைகளை அவனுக்கே உரிய அழகு நடையில் அவனால் மட்டுமே விளக்கமுடியும் என்ற அத்தனை பெரிய கருத்துகளை மாணவரிடையே வாரியிறைத்தான் மேதை.

கூட்டத்திலே மாணவிகளும் அதிகமிருந்தனர். அந்த முல்லைக் கொல்லையின் நடுவே அழகு ரோஜா ஒன்றும் இருந்தது. மேதையின் பேச்சையும், அவனது கட்டுக்குலையா மேனியின் அழகையும் அந்த ரோஜாப்பூ தன்னிரு செவிகளாலும், விழிகளாலும் முறையே விழுங்கிக் கொண்டிருந்தது. மேதையின் பார்வையும் இரண்டொரு முறை அந்த அழகியின் மீது பாய்ந்தது. ஆனால் பாய்ந்த வேகத்தில் மீண்டது. அவன் அவளை லட்சியம் செய்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. சொற்பொழிவு முடிவுற்றது. மேதையை மாணவர் சூழ்ந்து கொண்டனர். அனைவரிடமும் பேசிவிட்டு மேதை கல்லூரித் தலைவரின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

உணவு முடிந்த பின்னர் அமைதியை விரும்பி, மேதை மாடிக்குப் போனான். மாடியிலே உலவிக் கொண்டிருந்தான். நல்ல நிலவு. உலவிக் கொண்டிருந்தவனுக்குக் கால் வலி எடுக்கவே நாற்காலியில் அமர்ந்தான். மேதையைக் கவனிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்த பையன் ஓடிவந்து, மேதையின் கால்களை அமுக்கி விட்டான். மேதையின் வலிகண்ட கால்கள் பையனின் பணிவிடையால் சுகம் பெற்றன.

மேதையின் கண்கள் கட்டவிழ்த்துக் கொண்டு இங்குமங்கும் திரிந்தன. எதிர்த்த வீட்டு மாடியிலே, கல்லூரியிலே கண்ட ரோஜா நின்று கொண்டிருந்தாள், அவள் கண்களிலேயிருந்து புறப்படும் அந்தக் காதற் கணைகள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை. ஆனால் அவை மேதையை அசைக்கவும் முடியாதவை என எண்ணித் தவித்தாள், அந்த ரோஜா. மேதைக்குக் கால் அமுக்கிவிட்ட பையன் வேலை முடிந்து வெளியே போனான். போனவன் எதிர்த்த வீட்டு மாடிக்கு எப்படிப் போனானோ தெரியவில்லை. அந்த மாடியைப் பார்த்துக் கொண்டிருந்த மேதையின் கண்களிலே ஒரு காட்சி தெரிந்தது. தனக்குக் கால் பிடித்த பையன் எதிர்த்த வீட்டிலே அந்தக் கல்லூரி ரோஜாவுடன் ஏதோ பேசுகிறான். அவளும் மெதுவாக ஏதோ கூறுகிறாள். பிறகு அந்தப் பையனுடைய கைகளை எடுத்துக் கண்களிலே ஒத்திக் கொள்கிறாள். அந்தக் காட்சியை மேதை கண்டான்.

"லட்சியம் ஈடேறும் வரையில் பெண்களைத் திரும்பியும் பாரார். திருமணமும் வேண்டார்" என்று ஊரார், உலகத்தார் பேசிய புகழ் உரைகள் அவன் காதில் ஒலித்தபடி இருந்தன.

மறுநாள் காலையில் பையன் வந்தான், அவனுக்குக் காலைப் பணிவிடைகள் புரிவதற்காக, அப்போது மேதை அவனிடம் கேட்டான்.

"நேற்றிரவு அந்தப் பெண் உன் கைகளைக் கண்களின் ஒத்திக் கொண்டாளே, ஏன்?" என்று.

"நான் உங்கள் கால்களைப் பிடித்தேனல்லவா? அதனால் என் கைகள் மிகவும் பாக்கியம் செய்த கைகளாம். அதனால் என் கரங்களை அவள் கண்களில் ஒத்திக் கொண்டாள்" என்று பையன் நிலைமையை விளக்கினான்.

மேதை ஒன்றும் பதில் சொல்லவில்லை,



நினைத்துக் கொண்டான். " நான் அவள் கால்களையே கண்களில் ஒத்திக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். அவளோ என் காலில் பட்ட உன் கரங்களை முத்தமிடுகிறாள். நல்ல புகழப்பா இது, பொல்லாத புகழ். என்னைக் கொல்லாமல் கொல்லுகிறது" என்று ஆயிரம் முறை தனக்குள்ளாகவே முணுமுணுத்துக் கொண்டான்.

அதற்குள்ளாக அந்தப் பெண்ணும் எதிர்வீட்டு மாடியில் உதயமானாள். மேதையை வழியனுப்புவதற்காக ஐம்பது மாணவரும், ஆசிரியர் பத்துப் பேரும் மாடிக்கு வந்துவிட்டார்கள். மேதை எதிர்வீட்டு மாடியை ஏறெடுத்தும் பாராமல் காரியங்களை முடித்துக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டான்.


"மேதை வாழ்க" என்ற முழக்கத்துடன் மாணவர்களும் ஆசிரியர்களும் கலைந்தார்கள்.

# அறிவோம் தமிழர்

## நாடு நலம் பெற வந்த நூலகர்!

'சொர்க்கம் என்பதை ஒரு பெரிய நூலகமாகத்தான் நான் கற்பனை செய்து வைத்திருக்கிறேன்' என்றார் தத்துவஞானி சாக்ரடீஸ். மேலை நாடுகளில் பொது நூலகங்கள் வழிபாட்டுத் தலங்களுக்கு நிகரான மரியாதையைப் பெற்றிருக்கின்றன.

ஆனால், தமிழகத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்த பொது நூலகமாக இருந்தாலும், அங்கே நீங்கள் ஒரு காட்சியைக் காண முடியும். கூரைகளில் ஒட்டடை, புத்தகங்களில் தூசி, ஓடாத மின் விசிறி, அமர்வதற்குப் போதுமான இருக்கைகள் இல்லாதது, இன்முகம் காட்டாத நூலகர் ஆகியவை அடங்கிய காட்சியே அது. பெரும்பாலான பொது நூலகங்களின் நிலை இதுதான்.



இந்த நூலகர்கள் எல்லாம், 'இந்திய நூலக அறிவியலின் தந்தை' எனப் போற்றப்படும் எஸ்.ஆர். ரங்கநாதனைப் பற்றியும், அவர் அளித்துச் சென்ற 'நூலக அறிவியலின் ஐந்து விதிகள்' பற்றியும் தெரிந்துகொண்டால், குறைந்தபட்சம், 'நூலகம் என்பது புத்தகங்களைக் கடன் கொடுக்கும் இடம்' எனும் புரிதலைத் தங்கள் அளவிலாவது மாற்றிக்கொள்வார்கள் என நம்பலாம்!

## கணிதமே முதல் காதல்!

1892 ஆகஸ்ட் 9 அன்று, சீயாழியில் (இன்றைய சீர்காழி) ராமாமிர்தம் — சீதாலட்சுமி தம்பதிக்குப் பிறந்தார், சீயாழி ராமாமிர்த ரங்கநாதன். சுருக்கமாக எஸ்.ஆர்.ரங்கநாதன். ஆகஸ்ட் 9 அன்று பிறந்திருந்தாலும், பள்ளிச் சான்றிதழ்களில் அவரது பிறந்த தேதி ஆகஸ்ட் 12 என்று பதிவானது. எனவே, அதுதான் பலராலும் அதிகாரப்பூர்வமான ரங்கநாதனின் பிறந்த தேதியாகவும் கொள்ளப்படுகிறது.

ஆறு வயதில் தந்தையை இழந்த ரங்கநாதன், தாயின் அரவணைப்பில் வளர்ந்தார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் கணிதத் துறையில் இளநிலைப் பட்டமும் மாநிலக் கல்லூரியில் முதுநிலைப் பட்டமும் பெற்றார். மங்களூர், கோவை உள்ளிட்ட அரசுக் கல்லூரிகளிலும் மாநிலக் கல்லூரியிலும் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றினார். இன்றைக்கு அவர் சிறந்த நூலகராக அறியப்பட்டாலும், அவருடைய முதல் காதல், கணிதம் கற்பித்தலே!

1924—ல், சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் நூலகர் ஆனார். அடுத்த 20 ஆண்டுகளுக்கு, ஒரு நாள்கூட விடுப்பு எடுக்காமல், பணியாற்றினார். தனக்குத் திருமணமான நாளில் கூட, திருமண நிகழ்ச்சிகள் முடிந்தவுடன், மதியம் பணிக்கு வந்துவிட்டாராம்!

நூலக அறிவியலில் மேலும் சில விஷயங்களை அறிந்துகொள்வதற்காக, லண்டனுக்குச் சென்றார் ரங்கநாதன். அங்கு நூலகங்கள் துறை வாரியாக, அறிவியல்பூர்வமாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்தன. அதன் விளைவே 'கோலன் கிளாஸிஃபிகேஷன்' எனும் அவருடைய நூல் பகுப்பாக்க முறை உருவானது. புத்தகங்களைத் துறை வாரியாகப் பிரித்து, அவற்றில் உட்பிரிவுகளை ஏற்படுத்தி, அவற்றுக்குத் தனித்தனி எண்கள் ஒதுக்கி, அவற்றை அலமாரிகளில் முறையாக அடுக்கிவைத்து, அவற்றை வகைமைப்படுத்தி, பட்டியலிடுவதுதான் இந்த முறை.


உதாரணத்துக்கு, '19—ம் நூற்றாண்டில் இதய அறுவை சிகிச்சையின் வரலாறு' எனும்

# பெருமை

ந.வினோத்குமார்

தலைப்பில் ஒரு புத்தகம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தப் புத்தகத்தை வெறுமனே ‘மருத்துவம்’ எனும் தலைப்பின் கீழ் அதுவரை வகைமைப்படுத்தி வந்தார்கள். ரங்கநாதனின் ‘கோலன் நூல் பகுப்பு முறை’ அறிமுகமாவதற்கு முன்பு அதுதான் நிலை.

ஆனால், ரங்கநாதன் அதே புத்தகத்தை





‘மருத்துவம்’, ‘அறுவை சிகிச்சை’, ‘இதயம்’, ‘19—ம் நூற்றாண்டு’ என்று பல்வேறு உட்பிரிவுகளை உருவாக்கி, புத்தகத்தை அடுக்கிவைப்பார். இதனால், குறிப்பிட்ட இந்தப் புத்தகத்தைத் தேடி வரும் ஒருவர், மிகக் குறைந்த நேரத்தில், மிகக் குறைந்த தேடலில் இந்தப் புத்தகத்தை எடுத்துக்கொள்ளலாம்.

நூலக வரலாற்றில் ‘முதல்’கள்ஞ்

ரங்கநாதன், தனது ‘கோலன் நூல் பகுப்பு முறை’யை 1933—ல்தான் அறிமுகப்படுத்தினார். ஆனால், நூலகங்களைச் சாதாரண மக்களிடம் கொண்டுசேர்க்கும் பணியை, 1929—லேயே ஆரம்பித்துவிட்டார். லண்டனில் நூலக அறிவியல் பயிற்சி முடித்துத் திரும்பியவுடன், ‘சென்னை நூலகச் சங்கம்’ ஒன்றை ஏற்படுத்தி மாட்டு வண்டிகளில் புத்தகங்களை எடுத்துக்கொண்டு, கிராமங்களை நோக்கிச் சென்றார். நாட்டின் முதல் நடமாடும் நூலகம் அப்படித்தான் மன்னார்குடியில் தோன்றியது.

அதுவே, ‘விரிவாக்கக் கல்வி’யின் முதல் படியாகவும் அமைந்தது. அதே காலத்தில்தான் நூலக அறிவியலில் மக்களுக்குப் பயிற்சியளிக்க,




தனிப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். அது பின்னாளில், சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, இந்தியாவில் நூலகச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் ரங்கநாதன். இவரது முயற்சியால் 1948—ல், தமிழகத்தில்தான் முதன்முதலில் நூலகச் சட்டம் இயற்றப்பட்டது.

அதே ஆண்டில் டெல்லி பல்கலைக்கழகத்தில் நூலக அறிவியலில் பட்ட மேற்படிப்பையும் 1950—ல் முனைவர் படிப்பையும் அறிமுகம் செய்தார் ரங்கநாதன். காமன்வெல்த் நாடுகளிலேயே முதன்முதலாக நூலக அறிவியலில் இத்தகைய பட்டங்கள் வழங்கப்பட்டது அதுவே முதல் முறை!

இவை மட்டுமல்லாது, இலங்கையில் இருந்த யாழ் நூலகத்தை வடிவமைத்தது, நூலகங்களில் 'ரெஃப்ரென்ஸ்' பிரிவு தொடங்கியது, நூலகத்தில் புத்தகங்களை வாசகர்களே தேடி எடுத்துக்கொள்ளும் 'ஓபன் ஆக்சஸ் முறை', வீட்டுக்கே சென்று நூல்கள் தருவது, நீண்ட நேரத்துக்கு நூலகங்களைத் திறந்துவைப்பது எனப் பல புதுமைகளைச் செய்தவர் ரங்கநாதன்.

ஐந்து விதிகள்!

1931—ல் 'நூலக அறிவியலின் ஐந்து விதிகள்' எனும் படைப்பை வெளியிட்டார் ரங்கநாதன். அந்த ஐந்து விதிகள்: புத்தகங்கள் பயன்படுத்தப்படுவதற்கானவை என்பது முதல் விதி. அதாவது, புத்தகங்கள், மக்களால் எளிதில் அணுகப்பட வேண்டும் என்பதே இதன் சாராம்சம்.

இரண்டாம் விதி, ஒவ்வொரு வாசகருக்குமான புத்தகம். வாசகர், தான் விரும்புகிற புத்தகத்தைத் தானே தேடிச் சென்று எடுத்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு புத்தகத்துக்கும் யாராவது ஒரு வாசகர் இருப்பார், என்பது மூன்றாம் விதி. அதாவது, இந்த உலகத்தில் 'இது யாருக்கும் பயன்படாத புத்தகம்' என்று எதுவுமில்லை என்பது இதன் உட்பொருள்.

நான்காம் விதி, வாசகரின் நேரத்தைச் சேமிக்க வேண்டும். நூல் பகுப்பு முறை ஏற்படுத்தப்பட்டதே இதற்காகத்தான்.

ஐந்தாம் விதி, நூலகம் என்பது எப்போதும் வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு அமைப்பு. நூலகம் என்பது புத்தகம் தேடுவதற்கான இடம் என்பதைத் தாண்டி, மருத்துவ உதவிகள் செய்வது, வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துவது, ஐ.ஏ.எஸ். போன்ற குடிமைப் பணித் தேர்வுகளுக்குப் பயிற்சியளிப்பது என இன்றைக்கு, பொது நூலகங்கள் வளர்ந்திருப்பதே இதற்குச் சான்று.

தன் வாழ்நாள் முழுவதும் காந்திய வழியில் எளிமையாக வாழ்ந்த ரங்கநாதன், தன் கணிதப் பேராசிரியர் எட்வர்ட் ராஸ் நினைவாக 1925—ல், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் 'கணிதத் துறை நல்கை' உருவாக்கவும், 1956—ல், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தன் மனைவி சாரதா ரங்கநாதனின் பெயரில் 'நூலக அறிவியலுக்கான இருக்கை'யை உருவாக்கவும் தன் சேமிப்புகளை வாரி வழங்கினார்.

1972 செப்டம்பர் 27—ல் மறைந்த இவரைப் பற்றி, பிரபல எழுத்தாளர் ராண்டார் கை, அருமையான ஆவணப்படம் ஒன்றை இயக்கியுள்ளார். நூலக அறிவியலுக்காக உழைத்த இவரது பிறந்த நாளை 'தேசிய நூலகர் நாளாக' கொண்டாடுவதைத் தவிர வேறு என்ன பெரிய பெருமையை நாம் இவருக்குத் தந்துவிட முடியும்?

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

editor@ithamil.com






## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# தோற்றது யார்? 23

சிவகாமிக்கு அன்றிரவு வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை. அன்று குண்டோ தரன் கூறிய விஷயங்களையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தாள். குமார சக்கரவர்த்தியைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறுகளைத் தான் முழுதும் நம்பிவிட்டதை நினைந்து வெட்கினாள். நாகநந்தியின் பேரில் அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அவருடைய பொய் மொழிகளைக் குறித்துக் கேட்டு, அவரை ஏளனம் செய்ய வேண்டுமென்ற ஆவல் மனதில் பொங்கிக் கொண்டிருந்தது.




இத்தகைய எண்ணங்களுக்கிடையில் மாமல்லரின் விருப்பத்தின்படி தான் அரண்ய வீட்டில் இல்லாமற் போனது பற்றி அவருடைய கோபம் எத்தகையதாயிருக்குமோ என்ற கவலையும் தோன்றிக் கொண்டிருந்தது. அதை அவ்வளவு மன்னிக்க முடியாத பெருங்குற்றமாக மாமல்லர் கொள்ள மாட்டார் என்று அவள் தன்னைத்தானே ஆறுதல் செய்து கொண்டாள். இவ்விதம் பலவாறாகச் சிந்தித்துக் கொண்டிருந்து கடைசியில் தன்னையறியாது மேலிட்டு வந்த களைப்பினால் கண்ணயர்ந்தாள்.

அவள் அரைத் தூக்கமாயிருந்தபோது சமீபத்தில் எங்கேயோ பெருங் கூக்குரலைக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்திருந்தாள். கவனித்துக் கேட்ட போது, 'குய்யோ முறையோ' என்று குண்டோ தரன் ஓலமிடும் சத்தமும், அத்துடன், டக் டக் டக் டக் என்று குதிரை பாய்ந்து செல்லும் சத்தமும் கலந்து கேட்டன.

அயர்ந்து தூங்கிய ஆயனரைச் சிவகாமி எழுப்பினாள். இருவரும் வாசலில் வந்து பார்த்தபோது அங்கே ஓலமிட்டுக் கொண்டிருந்த குண்டோ தரன், "ஐயோ! குருவே, என்னுடைய குதிரையைப் பிக்ஷு திருடிக் கொண்டுபோய் விட்டார்!" என்று கூச்சலிட்டான்.

ஆயனர் அவனுக்கு, "அப்பனே! அந்தக் குதிரை உன்னுடையதல்லவே!" என்று சமாதானம் சொல்லிப் பார்த்தார்.

குண்டோ தரன், "அப்படித்தான் நாகநந்தி குதிரையைத் திருடிக்கொண்டு போனாரே? என் மேல் என்னத்திற்காகப் பாம்பைப் போடவேண்டும்!" என்று அலறினான்.

"அது என்ன சமாசாரம்?" என்று ஆயனர் கேட்டதற்கு குண்டோ தரன் கூறிய விவரமாவது. புத்த பிக்ஷு இரகசியமாய் எழுந்து வந்து வாசலில் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதன் மேல் ஏறிக்கொண்டார். அதே சமயத்தில் தற்செயலாகக் கண் விழித்த குண்டோ தரன் ஓடிப்போய்க் குதிரையைப் பிடித்தான். பிக்ஷு தம் கையிலிருந்த ஒரு பையை அவிழ்த்து அதற்குள்ளிருந்து எதையோ எடுத்து அவன் மேல் வீசினார். அது ஒரு நாகப்பாம்பு என்று கண்டதும், குண்டோ தரன் அலறிக் கொண்டு அப்பால் ஓட, குதிரையை விட்டுக்கொண்டு பிக்ஷு போய்விட்டார்.

குண்டோ தரனுடைய வார்த்தையில் ஆயனருக்கும் சிவகாமிக்கும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஏதோ உளறிக் கொட்டுகிறான். ஒருவேளை கனவு கண்டானோ என்னவோ என்று நினைத்தார்கள்.

குண்டோ தரன், "குருவே! என்னுடைய




அருமைக் குதிரையை விட்டுவிட்டு என்னால் இருக்க முடியாது. எப்படியாவது திரும்பப் பிடித்துக் கொண்டு வந்து சேர்வேன்!” என்று சொல்லிவிட்டு, குதிரை போன திசையில் அவனும் ஓடி மறைந்தான்.

ஆயனரும் சிவகாமியும் அசோகபுரத்துக்கு வந்து புத்த விஹாரத்தில் வசிக்கத் தொடங்கி ஐந்து தினங்கள் ஆயின. முதல் மூன்று நாள் விசேஷம் ஒன்றும் நடைபெறவில்லை. சிவகாமிக்குப்பொழுதுபோவது கஷ்டமாயிருந்தது. ஆயனருக்கோ அதைவிடக் கஷ்டமாயிருந்தது. ஆனால், புத்த பிக்ஷுவின் துணையை நம்பி வந்தவர்களாகையால், அவருடைய யோசனை இல்லாமல் மேலே எங்கே போவது என்பதை ஆயனரால் நிச்சயிக்கக் கூட முடியவில்லை. குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்ட பிறகு சிவகாமிக்கு ‘மேலே போகும் ஆவலே இல்லாமல் போய் விட்டது. “திரும்பிக் காஞ்சிக்குப் போனால் என்ன?” என்ற எண்ணம் அடிக்கடி தோன்றியது.



இந்த நிலைமையில், அவர்கள் அசோகபுரத்துக்கு வந்த நாலாம் நாள் இரவு சில அபூர்வ சம்பவங்கள் நடைபெற்றன. அன்று அஸ்தமன நேரத்தில் எங்கேயோ வெகு தூரத்தில் வான முகட்டின் அருகில், இடைவிடாமல் இடி இடிப்பது போன்ற சத்தம் முதலிலே வெகு இலேசாகக் கேட்டது. உற்றுக் கேட்கக் கேட்க, சத்தம் அதிகமாகி வந்ததாகத் தோன்றியது. சற்றுநேரத்துக்கெல்லாம் அதுவே சமுத்திர கோஷம்போல் தொனிக்கத் தொடங்கியது. முதலில் தூரத்திலிருந்த சமுத்திரம் வரவர நெருங்கி வருவது போலவும் இருந்தது. திடீரென்று சத்தம் பெரிதாகி அருகிலே நெருங்கி, பல்லாயிரம் பேர் தடதடவென்று ஓடி வருவது போன்ற சத்தமாக மாறிற்று.

ஆயனரும் சிவகாமியும் உள்ளேயிருந்து வாசற் பக்கம் ஓடி வந்து பார்த்தார்கள். சற்றுத் தூரத்தில் மரங்களின் இடுக்கு வழியாகச் சிதம்பரம் சாலை தெரிந்தது. அதிலே அநேகம் பேர் தலைகால் தெரியாமல் ஓடிக்கொண்டிருந்த காட்சி புலப்பட்டது. அந்தக் கூட்டத்தின் நடுவே அம்பாரி வைத்த பெரிய யானை ஒன்று அதிவிரைவாக நடந்து சென்றது. அதைச் சூழ்ந்து ஏழெட்டுக் குதிரைகளும் சென்றன. குதிரைகள் மேல் ஆயுதபாணிகளான ஆட்கள் இருந்தார்கள். அதே கூட்டத்தில் ஒரு புறத்தில் உயரமான கொடிமரம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடிய சிலர் காணப்பட்டார்கள். அந்தக் கொடி தாறுமாறாய்க் கிழிந்திருந்தது. அதற்குப் பிறகு அன்றிரவெல்லாம் பத்துப் பத்துப்

பேராகவும், ஐம்பது நூறு பேராகவும், அதற்கு மேற்பட்ட கூட்டமாகவும் அடிக்கடி சாலையில் மனிதர்கள் தடதடவென்று ஓடிய சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

சில சமயம் அசோக ஸ்தம்பத்தைச் சுற்றிக்கொண்டு புத்த விஹாரம் இருந்த பாழும் வீதி வழியாகவும் சிற்சில கூட்டத்தார் ஓட்டமும், நடையுமாகச் சென்றதைச் சிவகாமி கவனித்தாள்.

இதையெல்லாம் பற்றிச் சிவகாமி ஆயனரைக் கேட்க, அவர், "எங்கேயோ யுத்தம் நடந்திருக்கிறது, அம்மா! யுத்தத்தில் ஒரு கட்சி தோற்றுவிட்டதாகத் தெரிகிறது. தோற்றவர்கள்தான் இப்படி நிலை குலைந்து ஓடுவார்கள்" என்றார்.

"அப்பா! தோற்றவர்கள் பகைவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஓடுகிறவர்களைப் பார்த்தால், பல்லவ வீரர்களாகத் தோன்றவில்லையல்லவா?" என்றாள் சிவகாமி.

"நாம் என்னத்தை அம்மா கண்டோ ம்? இருட்டிலே என்ன தெரிகிறது! மாமல்லர் படைத் தலைமை வகித்த கட்சி ஜயித்திருக்க வேண்டுமென்றுதான் நானும் கருதுகிறேன்" என்றார் ஆயனர்.

இவ்வளவு தடபுடலும் இரவு முடிந்து பொழுது விடிவதற்குள்ளாக நின்றுவிட்டது. சூரியோதயத்துக்குப் பிறகு சத்தம், சந்தடி, ஓட்டம் ஒன்றுமேயில்லை. சிவகாமி புத்த விஹாரத்தின் வாசலில் நின்று சாலையை நோக்கிய வண்ணம் இருந்தாள். யாராவது அந்தப் பக்கம் வரமாட்டார்களா? வந்தால் நேற்று இரவு நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்களிடம் விசாரிக்கலாமே என்று காத்திருந்தாள். சூரியன் உதயமாகி ஒரு ஜாமம் இருக்கும். காலையிலிருந்து குடிகொண்டிருந்த நிசப்தம் சட்டென்று கலைந்தது. சாலையோடு குதிரைகள் பாய்ந்து வரும் சத்தம் கேட்டது.

அடுத்தாற்போல் குதிரைகளும் காணப்பட்டன. அப்பா! எவ்வளவு குதிரைகள்? பத்து, ஐம்பது, நூறு, ஆயிரம்கூட இருக்கும் போலிருக்கிறதே? அவ்வளவு குதிரைகள் மீதும் வேலும் வாளும் பிடித்த வீரர்கள் எவ்வளவு உற்சாகமாக அமர்ந்திருக்கிறார்கள்? அந்தக் குதிரைப் படையின் மத்தியில் ஒரு கம்பீரமான கருநிறக் குதிரையின் மேல் ஒரு வீரன் ரிஷபக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், சிவகாமியின் உள்ளமும் தோள்களும் பூரித்தன. அவள் நினைத்தபடியே பகைவர்கள் தான் தோற்று ஓடுகிறார்கள் என்றும் பல்லவ சைனியந்தான் ஓடும் பகைவர்களைத் தொடர்ந்து செல்கிறதென்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

அந்தப் பெரிய குதிரைப்படை சாலையோடு போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் இரண்டு தனிக் குதிரைகளும், அவற்றின் பின்னால் ஒரு ரதமும் விரைந்து வருவது காணப்பட்டது. இதென்ன விந்தை? அந்த இரு குதிரைகளும் ரதமும் சாலையிலிருந்து குறுக்கே திரும்பி அசோக ஸ்தம்பத்தையும் சிவகாமி இருந்த புத்த விஹாரத்தையும் நோக்கி வருகின்றனவே? குறுக்கு வழியாக அந்தத் தெருவில் புகுந்து சென்று சாலை ஏறி முன்னால் போன குதிரைப் படையைப் பிடிப்பதற்காக இவர்கள் இப்படி வருகிறார்கள் போலிருக்கிறது!

ஆஹா! அந்த முதல் குதிரைமேல் வருகிறது யார்? தன் கண்கள் காண்பது உண்மையா? சிவகாமியின் இருதயம் அப்படியே நின்றுவிடும் போலிருந்தது! ஆம்; அதன்மேல் வந்தவர் மாமல்ல நரசிம்மர்தான்! விஹாரத்தின் வாசலில் நின்ற சிவகாமி திடீரென்று மாமல்லரைக் குதிரை மீது பார்த்ததும், எங்கிருந்தோ, எதனாலோ அவளுடைய கண்களில் கண்ணீர் வந்து நிறைந்து விட்டது. உணர்ச்சி மிகுதியினாலும், காரணந்தெரியாத நாணத்தினாலும், சிவகாமி சட்டென்று திரும்பி, உள்ளே போவதற்குக் காலை எடுத்து வைத்தாள்.

அதே சமயத்தில் 'ஆ!' என்ற குரல் ஒலியும், வேகமாக வந்த குதிரையைத் திடீரென்று இழுத்துப் பிடித்து அது தட் தட் என்று கால்களைத் தட்டிக் கொண்டு நிற்கும் சத்தமும் கேட்டன. சிவகாமி வீதிப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

மாமல்லருடைய கண்கள் தீவிரமான நோக்குடன் அவளுடைய நெஞ்சையே ஊடுருவது போல் பார்த்தன. அந்தப் பார்வையில் சொல்ல முடியாத வியப்பும் மகிழ்ச்சியும் அளவிடக் கூடாத அன்பும் ஆத்திரமும் கலந்திருந்தன.

இதெல்லாம் ஒரே ஒரு கணந்தான்; மறுகணத்தில் குதிரை மீண்டும் காற்றாய்ப் பறந்து சென்றது. மாமல்லருக்குப் பின்னால் வந்த தளபதி பரஞ் சோதியும் சிவகாமியைப் பார்த்த போதிலும் அவருடைய குதிரை ஒரு கணமும் நிற்காமல் மேலே சென்றது.

அவர்களுக்குப் பின்னால் வந்த ரதத்தைக் கண்ணபிரான் தான் ஓட்டி வருகிறான் என்று தெரிந்ததும் சிவகாமி மீண்டும் வாசற்புறத்துத் தூணண்டை வந்து நின்று, ரதத்தை நிறுத்தும்படி கையினால் சமிக்ஞையும் செய்தாள்!

கண்ணபிரான் குதிரைகளை இழுத்துப் பிடித்து ரதத்தை நிறுத்தினான். குதிரைகள் திடீரென்று நின்றபடியால், அச்சு முறிவது போன்ற சடசட சத்தத்துடன் ரதம் 'தடக்' என்று நின்றது.

(சபதம் தொடரும்)

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

# நீரில்லா உலகு

## நீரின் அருமை உணர்வோம்!

‘தண்ணீர் தண்ணீர் எங்கும் தண்ணீர் — ஆனால் குடிக்க ஒரு சொட்டு தண்ணீர் இல்லை’ ஆங்கிலக் கவி கோலரிட்ஜின் புகழ்பெற்ற வரிகள். அருகிவரும் நீர்நிலைகள், இருக்கும் நீர்நிலைகளும் குடிப்பதற்குப் பயன்படா வண்ணம் மாசடைந்து கிடக்கும் நிலை — இவற்றைப் பார்க்கும்போது மேற்கண்ட வரிகள் உண்மையாகிவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது.

“கங்கை’, “யமுனை’, “காவேரி’, “சரஸ்வதி’ என்று நீர்நிலைகளுக்கெல்லாம் பெரும்பாலும் பெண்களின் பெயரைத்தான் வைத்திருக்கிறார்கள். இவற்றில் பல நதிகளின் நிலை சீரழிந்து உள்ளது. சில நதிகள் சுருங்கிப் போய்விட்டன. சில மறைந்தே போய்விட்டன. ஏரிகளும், குளங்களும், குட்டைகளும் தூர்க்கப்பட்டு அரசு அலுவலகங்களும், அடுக்குமாடிக் கட்டிடங்களும் கட்டப்பட்டு விட்டன. நீரோடும் பாதைகளிலெல்லாம் ஆக்கிரமிப்புகள். கிணறுகள் காணாமல் போய் வெகுகாலமாகிவிட்டது.

நிலத்தடி நீரோ மிகவும் கீழே இறங்கிப் போய்விட்டதோடு, ரசாயனப் பொருள்களால் மாசடைந்துவிட்டது. காடுகள் பத்திரமாக இருந்தவரையில் மோயார், பில்லூர் போன்ற நீர்நிலைகளும், காட்டருவிகளும், காட்டாறுகளும் ததும்பி வழிந்து ஓடிக்கொண்டிருந்தன. இப்போது “சூழல் சுற்றுலா’ என்ற பெயரில் காடுகளைத் திறந்து விட்டதால் இவற்றுக்கும் வந்து விட்டது ஆபத்து. எப்போதுமே வற்றாத காட்டாறுகள்கூட தற்போது கொஞ்சங்கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கின்றன.

மீதமிருக்கும் நீர்நிலைகளின் நிலையும் நம்பிக்கை தருவதாக இல்லை. நகரத்தின் குப்பைகளும், கட்டட இடிபாடுகளும் குளங்களிலேதான் கொட்டப்படுகின்றன. கிராமங்களிலும் மக்கள் வீடுகளின் கழிவுநீரையெல்லாம் குளங்களில்தான் விடுகிறார்கள். மரங்கள் வெட்டப்படும்போதும், வீடுகளின் கூரைகள் மாற்றப்படும்போதும், ஓடுகளும், கீற்றுகளும் குளங்களுக்குள்





# பாழ்!

முனைவர்
இரா.கற்பகம்

வீசப்படுகின்றன. ஊர் கூடி குளங்களைத் தூர்வாரி பராமரித்த காலமெல்லாம் போய்விட்டது.

நம் நாட்டில் வழக்கிலிருக்கும் மதச்சடங்குகள் பலவும் நீர்நிலைகளுக்கு உலை வைப்பதாகவே இருக்கின்றன. பக்தி என்ற பெயரிலும் சடங்குகள் சம்பிரதாயங்கள் இவற்றைச் சாக்கிட்டும் ரசாயனப் பூச்சுக்கள் பூசப்பட்ட பெரிய பெரிய சிலைகளை நீர்நிலைகளில் கரைக்கின்றனர். இருக்கின்ற கொஞ்ச நஞ்ச தண்ணீரையும் பாழ்படுத்துகின்றனர்.

கிணறுகளும், குளங்களும், ஏரிகளும், ஆறுகளும்தான் நீர் ஆதாரங்கள் என்றிருந்தபோது மக்கள் அவற்றைப் போற்றிப் பாதுகாத்தனர். தங்கள் வீட்டுக் கிணறு என்றிருந்தபோது அவ்வப்போது தூரெடுத்து ஊற்றுக்கண் உயிரிழக்காமல் பார்த்துக் கொண்டனர். ஊருக்குப் பொதுவான கிணறு, குளம் என்றிருந்தபோது கூட ஊர் மக்கள் ஒன்றுசேர்ந்து வருடத்துக்கு ஒருமுறை கோடையில் நீரை வெளியே இறைத்து, தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி, மண்ணரிப்பு ஏற்படாதவாறு மரங்களை நட்டு வைத்துப் பாதுகாத்தனர்.

எப்போது வீட்டுக்கு வீடு குழாயில் தண்ணீர் வந்ததோ, அப்போதே அலட்சிய மனப்போக்கும் வந்துவிட்டது. கிடைப்பதற்குக் கஷ்டமாக இருந்தவரை தண்ணீரின் அருமையை நாம் அறிந்திருந்தோம். எளிதில் கிடைக்கும்போது நீரின் அருமையை நாம் மறந்துவிட்டோம்.

கடலைக் கூட நாம் விட்டுவைக்கவில்லை. கப்பல்களிலிருந்து கடலுக்குள் வீசப்படும் குப்பைகளும், எண்ணெய்க் கழிவுகளும், டன் கணக்கில் கடலில் வீசப்படும் மின்னணுப்






பொருட்களும், பிளாஸ்டிக் கழிவுகளும் கடல்நீரைப் பெரிதும் மாசுபடுத்துகின்றன. கடல்வாழ் உயிரினங்களின் உயிருக்கு ஊறு விளைவிக்கின்றன.

நிலைமை சரிசெய்ய முடியாத அளவுக்குச் செல்வதற்கு முன் அரசு விழித்துக் கொண்டு இந்தச் சீர்கேட்டைத் தடுத்து நிறுத்த முயல வேண்டும். நீர் மேலாண்மைக்கென்று தனியாக ஒரு துறையை அமைக்க வேண்டும். நீர் மேலாண்மை வல்லுநர்கள், விஞ்ஞானிகள், சூழல் ஆர்வலர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கி நீர்ப்பாதுகாப்புக் குழு ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் நீர்நிலைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவற்றை இக்குழுவின் மேற்பார்வையில் விடவேண்டும். நீர்நிலைகளை மாசுபடுத்துவோரைத் தண்டிக்க இவர்களுக்கு முழு அதிகாரம் கொடுக்கவேண்டும்.

எல்லா நீர்நிலைகள் குறித்தும் — நல்ல நிலையில் இருப்பவை, சுருங்கிப்போனவை, ஆக்கிரமிப்புக்குள்ளானவை, மாசடைந்தவை, மறைந்துபோனவை — எல்லாவற்றையும் பற்றிய தகவல்களைத் திரட்டி ஒரு"டேட்டா பேஸ்' ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியே இதனைச் செய்யலாம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு பெரிய நீர்நிலைகள், இரண்டு சிறிய நீர்நிலைகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் தூர்வாரித் தூய்மைப்படுத்தி, குப்பைகளையும் கழிவுகளையும் அப்புறப்படுத்தி, நீர் வரும் பாதைகளிலும், கால்வாய்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மண்ணரிப்பிலிருந்து காக்க, மரங்களை நட்டு பலமான கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். அவை மீண்டும் மாசுபடாமல் இருக்க, கண்காணிப்புப் பணியையும், பாதுகாப்புக் குழுவிடம் ஒப்படைக்கலாம்.

இது நீண்டகாலத் திட்டம். இதற்குத் திட்டமிடுதலும், வழிகாட்டுதலும் அவசியம். ஆனாலும் இது மிக அவசியம். உறுதியுடன் செயல்படக்கூடிய அரசும், அரசுக்குச் ஆலோசனை கூற நீர் மேலாண்மை விஞ் ஞானிகளும், நிபுணர்களும், உதவி செய்ய தன்னார்வலர்களும் ஒன்றுசேர்ந்தால் இதைச் செய்யலாம், செய்யவேண்டும். இத்திட்டத்தை விரிவுபடுத்தி நாட்டிலுள்ள எல்லா நீர்நிலைகளையும் சரி செய்யலாம்.


நகருக்குள் இருக்கும் நீர்நிலைகளை சுத்தம் செய்து மக்களின் குடிநீர்ப் பயன்பாட்டுக்கு அந்நீரை விநியோகித்தால், மக்கள் நீர்நிலைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும். முதலில் செயல்படுத்துவது கடினமாக இருந்தாலும், இத்திட்டம் செயல்பாட்டுக்கு வந்துவிட்டால் மக்களும் ஒத்துழைப்பார்கள். கடவுள் உருவங்களை நீர்நிலைகளில் கரைப்பதை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.

பயன்பாட்டில் இல்லாத பெரிய திறந்தவெளிக் கிணறுகளையும்,பொதுக் கிணறுகளையும் மழைநீர் சேகரிப்புக்குப் பயன்படுத்தஅரசு முனைய வேண்டும். அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்தும், சாலைகளிலிருந்தும் வழிகின்ற மழைநீரைக் குழாய்களின் மூலம் இவற்றில் கொண்டு சேர்த்தால் அவை மழைநீர் சேமிப்புத் தொட்டிகளாகமாறிவிடும்.

மழைநீர் சேமிப்பு கட்டாயமாக்கப்பட்டபோது எல்லோரும் தத்தம் வீடுகளில் அவசர அவசரமாக அரைகுறையாக மழைநீர்ச் சேமிப்புத் தொட்டிகளை அமைத்தார்கள். அரசு, அவை முறையாக

அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்று கண்காணிக்கவில்லை. இப்போதாவது மக்கள் தண்ணீரின் அருமையை உணர்ந்து உடனடியாக மழைநீர் சேமிப்பை உறுதி செய்ய வேண்டும்.

அதிக செலவில்லாத, சுலமாகச் செய்யக்கூடிய மழைநீர் சேகரிப்பு முறை இதோ: கனமான, உறுதியான பிளாஸ்டிக் கீழ்நிலைத் தொட்டிகள் 1,000 லிட்டர், 2,000 லிட்டர் என பல கொள்ளளவுகளில் கிடைக்கின்றன. வீட்டின் வெளிப்புறம் வசதியான ஒரு மூலையில் ஆழ்துளைக் கிணற்றின் அருகில் தொட்டியின் அளவுக்கேற்ப,மண்ணில் ஆழக் குழிதோண்டி,தொட்டியைப் புதைத்துவிட வேண்டும். வீட்டின் மேற்கூரை, மொட்டைமாடி, மேல்நிலைத் தொட்டியிலிருந்து வெளியேறும் நீரை, குழாய்களின் மூலம் இத்தொட்டியில் விழச்செய்ய வேண்டும்.



மழைக்காலங்களில்இத்தொட்டி நிறைந்து வெளியேவரும் உபரிநீர் ஆழ்துளைக் கிணற்றுக்குள் சென்று விழுவதற்குத் தொட்டியின் மேல் பகுதியிலிருந்து ஒரு குழாய் பொருத்தவேண்டும். ஒரு குதிரைத் திறன் மோட்டாரைப் பொருத்தி இத்தொட்டியிலிருந்து தண்ணீரை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனைச் செயல்படுத்த சில ஆயிரம் ரூபாய்கள் போதும். தண்ணீர்ப் பஞ்சம் வராது.

வீட்டைச் சுற்றிலும் சிமெண்ட் தளம் அல்லது டைல்ஸ் ஒட்டிவிடாமல் ஒரு அடி அல்லது இரண்டு அடி மண் தரையாக விடவேண்டும். மழைநீர் மண்ணுக்குள் இறங்கிச் சென்று நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும். தண்ணீர் குறைவாக விழும்படியான குழாய்கள் தற்போது விற்பனைக்கு வந்து விட்டன. வீடுகளிலும் அலுவலகங்களிலும் இக்குழாய்களைப் பயன்படுத்தலாம்.

ஊர் மக்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் பகுதியில் இருக்கும் நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். இளையதலைமுறையினர் கணினியிலும், வலைதளத்திலும் நேரத்தைப் போக்காமல், சிறுசிறு குழுக்களாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடலாம். இரவு நேரங்களில் பாதுகாப்புக்கென்று ஒருவரை நியமித்து, எல்லோருமாகச் சேர்ந்து அவருக்கு ஊதியமாக சிறு தொகை தரலாம்.

விவசாயிகள் அதிக லாபம் வேண்டும் என்ற ஆசையில் அளவுக்கதிகமான ரசாயனஉரங்களைப் பயன்படுத்தினால், நிலத்தடிநீர் கடுமையாக மாசடைந்து குடிப்பதற்கு உதவாமல் போய்விடும். மெல்ல மெல்ல அவர்கள் இயற்கை வேளாண் முறைக்கு மாற வேண்டும். அரசும் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை தண்ணீரை சிக்கனமாக செலவு செய்ய வேண்டும்.

அதிக மக்கள்தொகையும், குறைந்த கல்வியறிவு விகிதாச்சாரமும், பலதரப்பட்ட மதங்களும், நம்பிக்கைகளும், கலாசாரமும் நிறைந்த நம் நாட்டில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது கடினம்தான். அரசாங்கம் முனைப்போடு நீர்நிலைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்றி, அவற்றை மீறுபவர்களுக்கு மிகக் கடுமையானதண்டனை விதித்தால் மட்டுமே நீர்நிலைகளைக் காப்பாற்ற முடியும்.

இவையெல்லாம் இருக்கும் நீரைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளே. நமக்கு நீர் வருவதற்கு ஒரே வழி வான்மழைதான். அம்மழை வருவதற்கு ஒரே வழி மரங்கள் நடுவதே. மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்; நீர்வளம் பெருக்குவோம்!




## மூலிகையே மருந்து: நாடி வரும் நலம்ஞ் நன்னாரி !

பச்சை நிற இலைகளில், வெண்ணிறத்தில் வரிகள் கொண்டிருக்கும் பேரழகான மூலிகை நன்னாரி. ‘அட்ட வகை’ எனும் மூலிகைத் தொகுப்பில் நன்னாரியும் ஒன்று.

அந்தக் காலத்தில் திருவிழாக்கள் தொடங்கி திருமண நிகழ்வுகள் வரை மக்களின் விருப்ப பானமாக இருந்த நன்னாரி சர்பத், பாரபட்சமின்றி ஆரோக்கியத்தை அள்ளிக் கொடுத்தது. பன்னாட்டுக் குளிர்பானங்களின் வருகையால் சரிந்த நன்னாரி பானத்தின் மகத்துவத்தை மீட்டெடுப்பது இனி நோயில்லாமல் வாழ்வதற்குக் கட்டாயம். சில்லென்ற குளிர்ச்சியை உடல் உறுப்புகளுக்கு வழங்க, குளிரூட்டும் இயந்திரங்கள் தேவையில்லை, ஐஸ்கட்டிகள் அவசியமில்லைஞ் நன்னாரி பானம் போதும்.



பெயர்க்காரணம்: அங்காரிமூலி, நறுநெட்டி, பாதாளமூலி, பாற்கொடி, வாசனைக் கொடி, சாரிபம், கோபாகு, சுகந்தி, கிருஷ்ணவல்லி, நீருண்டி போன்றவை நன்னாரியின் வேறு பெயர்கள். இந்தத் தாவரத்தில் பால் இருக்கும் என்பதால் ‘பாற்கொடி’ என்றும், வாசனையைக் கொடுப்பதால் ‘சுகந்தி’ என்றும் பூமிக்குள் வளரும் இதன் வேர்த்தொகுப்பைக் கருத்தில்கொண்டு ‘பாதாளமூலி’ என்ற பெயரும் இதற்கு அமைந்தது. நாட்டு நன்னாரி மற்றும் சீமை நன்னாரி போன்ற வகைகளும் உள்ளன.

உணவாக: குளிர்காலத்துக்கு தூதுவளைத் துவையல் போல, வெயில் காலத்துக்கு நன்னாரித் துவையல், காலத்துக்கேற்ற நோய் நீக்கும் உணவு. நன்னாரித் தாவரம் முழுவதையும் எடுத்து, நெய்யிட்டு வதக்கி, மிளகு, இந்துப்பு, சிறிது புளி சேர்த்து, துவையலாகச் செய்து கொள்ளலாம். அதிகரித்திருக்கும் பித்தத்தைக் குறைக்க, நன்னாரித் துவையல் உதவும். பெண்களுக்கு உண்டாகும் வெள்ளைப்படுதலைக் குணப்படுத்துவதோடு, அதன் காரணமாக உடலில் தோன்றும்




டாக்டர்

வி.விக்ரம் குமார்

நாற்றத்தையும் நீக்கும்.

அவ்வப்போது நன்னாரியைச் சமையலில் சேர்த்துவர, உடலின் வெப்பச் சமநிலை முறைப்படுத்தப்படும். நன்னாரி, பனைவெல்லம், எலுமிச்சைச் சாறு, தண்ணீர் ஆகியவற்றைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் 'நன்னாரி சர்பத்' அனைவரது வீட்டிலும் புழங்க வேண்டிய மூலிகை பானம். நன்னாரி சர்பத் என்ற பெயரில் சாலையோரக் கடைகளில் கிடைக்கும் கலர் கலரான சாயங்கள் தரமானவை அல்ல.



இயற்கையாகத் தயாரிக்கப்படும் நன்னாரி சர்பத்தின் நிறம் இளஞ்சிவப்பு.

மருந்தாக: புற்றுநோய் செல்களுக்கு எதிராகச் செயல்படும் தன்மையும், பாக்டீரியா வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றலும் நன்னாரிக்கு இருப்பதாக உறுதிப்படுத்துகின்றன ஆய்வுகள். 'ஹெலிகோபாக்டர் பைலோரி' பாக்டீரியாவை அழித்து, வயிற்றுப் புண்கள் ஏற்படாதவாறு நன்னாரி சேர்ந்த மருந்துகள் பாதுகாக்கும்.

பல்வேறு காரணங்களால் கல்லீரலுக்கு உண்டாகும் பாதிப்புகளைத் தடுக்கும் வன்மையும் நன்னாரிக்கு இருக்கிறது. காயம் ஏற்பட்ட இடத்தில், புது செல்களின் உருவாக்கத்தை நன்னாரி தூண்டுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வீட்டு மருந்தாக: நன்னாரி வேரை ஒன்றிரண்டாக இடித்து, தண்ணீரில் ஊறவிட்டு, சிறிது கருப்பட்டி சேர்த்துப் பருக, செரிமானம் சீராகும். சுவைமிக்க இந்தப் பானத்தை, வளரும் குழந்தைகளுக்கு வழங்க, பசி அதிகரித்து உணவின் சாரம் முழுமையாக உட்கிரகிக்கப்படும். சிறுநீரகப் பாதை தொற்று காரணமாக ஏற்படும் சிறுநீர் எரிச்சல், சிறுநீர் அடைப்பு போன்ற அறிகுறிகளுக்கு, நன்னாரி

வேரை உலர்த்திப் பொடித்து, பாலில் கலந்து அருந்த உடனடிக் குணம் கிடைக்கும்.



இதன் வேர்ப்பொடியைத் தேனில் குழைத்துச் சாப்பிட ரத்த அணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நன்னாரி வேரை நன்றாக இடித்து, பாக்கு அளவு பாலில் கலந்து தொடர்ந்து சாப்பிட்டுவர, தேகத்தில் சுருக்கங்கள் அவ்வளவு சீக்கிரத்தில் உண்டாகாது என்கிறது 'மூலிகை கற்பமுறை'. தண்ணீரைச் சுத்திகரிக்கப் பயன்படுவதோடு, ரத்தத்தையும் தூய்மையாக்க உதவும் சுத்திகரிப்பான், இந்த நன்னாரி.

ஒவ்வொரு முறை உணவருந்திய பிறகும், நன்னாரி வேர் ஊறிய நீரைக்கொண்டு வாய்க் கொப்பளிக்க, பற்களும் ஈறுகளும் பலமடையும்.

பூமிக்கு மேல் அழகிய கொடிஞ் பூமிக்கு அடியில் மணம் வீசும் வேர் என நன்னாரிஞ் நம் நலம் நாடி நிற்கிறது!


'வெட்டிவேரு வாசம்ஞ் வெடலப்புள்ள நேசம்ஞ்' பாடல் மட்டுமல்ல, அந்தப் பாடல் உருவாக அடிப்படையாக இருந்த 'வெட்டிவேர்' எனும் வாசனைமிக்க மூலிகையும் மனதுக்கு இதமளிக்கக்கூடியதுதான். தாவர உறுப்புகளில் மலர்கள், இலைகள் ஆகியவை நறுமணம் பரப்புவதைப் போல, வெட்டிவேர் தாவரத்தில் அதனுடைய வேர்களும் மணம் பரப்பும் சிறப்புடையவை. 'சப்தவர்க்கம்' என்ற தாவரக் குழுவில் வெட்டிவேர் இடம்பிடித்திருக்கிறது.

தண்ணீரை இயற்கையாகக் குளிரூட்ட மற்றும் சுத்திகரிக்கப் பயன்படும் மூலிகைகளுள் வெட்டிவேர் முக்கியமானது. முற்காலத்தில் வாசனைக்காகக் கூந்தலில் வெட்டிவேரைச் சூடிக்கொள்ளும் வழக்கம் பெண்களுக்கு இருந்திருக்கிறது. வெப்ப நோய்களைக் குணமாக்க, நெடுங்காலமாகப் பயன்பட்டு வரும் மூலிகை வெட்டிவேர். நீர் மேலாண்மை, அழகியல், மருத்துவம் என அன்றாட வாழ்க்கையோடு கலந்து, நமது இல்லங்களில் மணம் பரப்பும் மூலிகை, வெட்டிவேர். ஆனால் இப்போது அதன் பயன்பாடு வெகுவாகக் குறைந்துவிட்டது. புதைந்திருக்கும் வெட்டிவேரின் பெருமைகளை மீண்டும் வெட்டி எடுப்போமா?

பெயர்க்காரணம்: விழல்வேர், விரணம், இருவேலி, குருவேர் போன்ற வேறு பெயர்களை உடையது வெட்டிவேர். புல்லுக்கும் வேருக்கும் இடைப்பட்ட பகுதியை வெட்டி எடுத்து பயிரிடப் பயன்படுவதால் 'வெட்டிவேர்' எனப் பெயர். ஆற்றங்கரைகளின் இருபுறங்களிலும் வேலியாக அமைந்து மண் அரிப்பைத் தடுப்பதற்காகப் பயன்பட்டதால் 'இருவேலி' எனும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

அடையாளம்: புல் இனத்தைச் சார்ந்த வெட்டிவேர், நீர்ப் படுகைகளில் செழிப்பாக வளரும் தன்மை கொண்டது. நீளமான இதன்

இலைகள், ஐந்தடி வரை தாராளமாக வளரும். வெட்டிவினின் வெட்டிவோன் , குஷிமோன் ஆகிய தாவர வேதிப்பொருட்களை உள்ளடக்கியது. இதன் இலைகளிலிருக்கும் சைசனால் மற்றும் எபிசைசனால்போன்ற ஆல்டிஹைட்கள், இயற்கை பூச்சிவிரட்டியாகச் செயல்படக்கூடியவை. வெட்டிவேரின் தாவரவியல் பெயர் ‘வெட்டிவேரியா சைசானியோய்ட்ஸ்’. இதன் குடும்பம் ‘பொவாசியே’




உணவாக: பனைவெல்லம் மற்றும் தண்ணீர் கலந்து தயாரிக்கப்படும் வெட்டிவேர் பானத்தை, மண்பானையில் வைத்துப் பருக, இரைக்குழலில் இறங்கும்போதே குளிர்ச்சியை உணர வைக்கும். வெட்டிவேரை நீரில் நன்றாக ஊறவைத்துத் தயாரிக்கப்படும் சர்பத், சுவையிலும் மருத்துவக் குணத்திலும் சளைத்ததல்ல. செரிமானத்தை எளிமையாக்க, வெட்டிவேர் மற்றும் சீரகம் சேர்த்துக் கொதிக்க வைத்த நீரை அருந்தலாம். இதன் வேரைக் கொண்டு தயாரிக்கப்படும் கஷாயத்தை உடலுக்குப் பலம் கொடுக்கும் டானிக்காக உபயோகிக்கலாம்.

மருந்தாக: இதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் நறுமண எண்ணெய்க்கு, தோலில் ஏற்படும் கருந்திட்டுக்களைக் குறைக்கும் தன்மை இருப்பதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன.எனும் பொருள் இதற்குக் காரணமாகிறது. வாகனப் புகை, தொழிற்சாலைப் புகை என பல்வேறு மாசுகளிருந்து வெளியேறி அழியாமல் நமது சூழலோடு கலந்திருக்கும் ‘பென்சோ—பைரீன்’ எனப்படும் புற்று விளைவிக்கும் பொருளின் வேதி—இணைப்பை உடைக்கும் தன்மை வெட்டிவேருக்கு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் சுற்றுச் சூழலுக்கும் உடலுக்கும் மிகுந்த நன்மை செய்கிறது. நிலவேம்புக் குடிநீரில், பித்தத்தைத் தணிக்கும் தத்துவார்த்த அடிப்படையில் வெட்டிவேர் சேர்க்கப்படுகிறது.

வீட்டு மருத்துவம்: மண்பானை தண்ணீரில் சிறிது வெட்டிவேரைச் சேர்த்து ஊறவைக்க, நீருக்குச் சுவையும் பலன்களும் பலமடங்கு கூடும். செக்கில் ஆட்டிய தேங்காய் எண்ணெயில், வெட்டிவேர், ஆவாரம் பூ, சடாமஞ்சி போன்ற மூலிகைகளைச் சேர்த்து ஊறவைத்து, முடித் தைலமாக உபயோகிக்க, தலைமுடிக்குக் கூடுதல் ஆரோக்கியம் கிடைக்கும். வெட்டிவேர், ஆவாரம் பூ, ரோஜா இதழ்கள், செம்பருத்தி இதழ்கள் ஆகியவற்றை நன்றாக உலர்த்திப் பொடித்து வைத்துக் கொண்டு தண்ணீரில் குழைத்து ‘ஃபேஸ்—பேக்’ போல முகத்துக்குப் பயன்படுத்த, முகம் பொலிவடையும். வியர்வை நாற்றத்தைத் தடுக்க, குளிக்கும் நீரில் வெட்டிவேரை ஊறவைத்துக் குளிக்கலாம். வெட்டிவேர் நாரினை ஸ்கரப்பராகவும் குளிக்கும்போது பயன்படுத்தலாம்.

‘வாச வெட்டிவேர் விசிறி வன்பித்த கோபமோடுஞ்’ எனத் தொடங்கும் பாடல், வெட்டிவேரால் செய்யப்பட்ட விசிறியால், உடலில் உண்டாகும் எரிச்சல், அதிதாகம் மற்றும் வெப்பம் காரணமாக உண்டாகும் நோய்கள் குறையும் என்பதைப் பதிவிடுகிறது. சாளரங்களில் வெட்டிவேரால் செய்யப்பட்ட தட்டிகளைத் தொங்கவிட்டு, லேசாக நீர்த் தெளிக்க, நறுமணம் கமழும் இயற்கைக் காற்று இலவசமாகக் கிடைக்கும். வெட்டிவேரால் செய்யப்பட்ட பாய்களும் இப்போது பிரபலமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆக, வெட்டிவேர் வெட்டியான வேர் அல்ல!




# முதிர்ந்தும் அறியா

## முதுமையில் உதவும் உரிமைகள் !

முதியோர் எதிர்கொள்ளும் பிரச்னைகள் என்பது ஒரு காலத்தில் வளர்ந்த நாடுகளில் மட்டும் நிலவும் விவகாரமாகப் பார்க்கப்பட்டது. இப்போது இந்தியாவும் அந்தப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது என்று தெரியவரத் தொடங்கியுள்ளது.

நாட்டின் மக்கள்தொகையில் முதியோரின், அதாவது 60 வயதைக் கடந்தவர்களின் விகிதம் கடந்த 1971—ஆம் ஆண்டில் 5.6 சதவீதமாக இருந்தது. அது 2007—இல் 7.5 சதவீதத்தைத் தொட்டது. வரும் 2025—ஆம் ஆண்டில் இந்தியாவில் எட்டு பேரில் ஒருவர் முதியவராக இருப்பார் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மற்றொரு குறிப்பிடத்தக்க புள்ளிவிவரம், பிறரைச் சார்ந்திருப்போர் விகிதாசாரம் பற்றியது. அதாவது, பணிக்குச் செல்வோருக்கும் — முதுமையால் பணிக்குச் செல்ல இயலாமல் பிறரைச் சார்ந்திருப்போருக்கும் இடையேயான விகிதாசாரம் என்பது இதன் பொருள்.

இந்தியாவில், சென்ற 2001—ஆம் ஆண்டில் பிறரைச் சார்ந்திருப்போர் விகிதம் 11.9 சதவீதமாக இருந்தது. வரும் 2050—ஆம் ஆண்டில் இந்த விகிதாசாரம் 28.2 சதவீதமாக உயரும். அதாவது, நாட்டின் மக்கள்தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையினர் வருமானம் — சுய வாழ்வாதாரம் இன்றி பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருப்பார்கள் என்று அந்தப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்த வகையினர் கிராமப்புறப் பகுதிகளில் அதிகமாக இருப்பார்கள். மற்றொரு குறிப்பிடத்தக்க விவரம் — பிறரைச் சார்ந்திருக்கும் முதியோரிடையே ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்குமாம். அதே சமயத்தில், மொத்த மக்கள்தொகையில் இளைய வயதினரில் பெண்களின் எண்ணிக்கையைவிட ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்.






# முதுமை

ஒரு பெரும் நெருக்கடியான நிலையை உருவாக்கப் போகிறது.

**பி.கே. குருவிளா**

சென்ற 1956—ஆம் ஆண்டிலேயே ஹிந்து சட்டத் திருத்தத்தின்போது, ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டது. அதன்படி,முதுமைப் பருவம் அடைந்த பெற்றோரைப் பேணிப் பராமரிப்பது, மகன்கள் மற்றும் மகள்களின் கடமையாகும். அதன் பிறகு 1973—இல் குற்றவியல் சட்ட நடைமுறையில்





ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. அதன்கீழ், வாரிசுகளால் புறக்கணிக்கப்பட்ட முதியோர் நீதிமன்றத்தை அணுகிமுறையிடலாம். ஆனால், தங்கள் வாரிசுகளுக்கு வசதி இருந்தும் தங்களின் பராமரிப்புக்கு நிதி உதவி மறுக்கப்படுகிறது என்பதை நீதிமன்றத்தில் முதியோர் நிரூபிக்க வேண்டும். இதன் பிறகு 2007—இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் சட்டம்' ஒரு முக்கியத் திருப்பமாக அமைந்தது.

இந்த சட்டத்தின் கீழ், மூத்த குடிமக்களைப் பேணுவதும் பராமரிப்பதும் அவர்களுடைய பிள்ளைகளின் கடமை மட்டுமல்ல, அவர்களின் பேரன், பேத்திகள் மற்றும் வாரிசுதாரர்களின் கடமையும் என்பது கட்டாயமானது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் உள்பட அனைத்து இந்திய பிரஜைகளுக்கும் இந்த சட்டம் பொருந்தும் என்பது இதில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அனைத்து மாநில அரசுகளும், கோட்ட அளவில் முதியோர் பரமாரிப்பு குறித்த புகார்களுக்கான தீர்ப்பாயங்களை அமைத்துள்ளன. மாவட்ட அளவில் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்றங்களை அணுகுவதைக்காட்டிலும், இந்தத் தீர்ப்பாயங்களை அணுகி புகார் அளிக்கும் நடைமுறையும் மனு தாக்கல் செய்யும்

நடைமுறையும் எளிமையாக்கப்பட்டுள்ளன. மேலும், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக, தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் கோரிக்கை மனுக்களையோ புகார் மனுக்களையோ தாக்கல் செய்யலாம்.




மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன்' சட்டத்தைத் தவிர, ரிவர்ஸ் மார்ட்கேஜ்' என்கிற, வீட்டின் மீதான மறு அடைமானம் மூலம் கடன் தொகை திரட்டும் திட்டமும் தேசிய ஓய்வூதியத் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டன.

மறு அடைமானம் திட்டத்தின் கீழ், ஒரு மூத்த குடிமகன் தனது வீட்டை வங்கியில் அடைமானம் வைத்து, தனது ஆயுள் காலம் வரை, மாதந்தோறும் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒரு தொகையைப் பெறலாம். ஒருவர் புதிதாக வாங்கும் வீட்டுக்கு கடன் பெறுவது என்பதற்கு நேர் எதிரான முறையில், அடைமானம் வைத்த வீட்டுக்கு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஈடுத் தொகை பெறும் முறை இது.


இதன் கீழ் ஒரு கோடி ரூபாய் வரை வீட்டு அடைமானத் தொகை பெற இயலும். மிக அவசரத் தேவைக்கு ரூ. 15 லட்சத்தை ஒரே தவணையாகப் பெற முடியும். வீட்டின் உரிமையாளரான முதியவர் தனது வாழ்நாளில் இந்தக் கடனை திருப்பி அடைக்க வேண்டியதில்லை. இதனிடையே அவர் அந்த வீட்டை விற்கவும் முடிவு செய்யலாம். அவ்வாறு விற்பனை செய்ய முடிவு செய்தால், கடன் தொகை போக மீதித் தொகையை அவர் பெற்றுக் கொள்ள முடியும். ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் பெயரில் சொத்து இருக்கும் பட்சத்தில், வீட்டின் கடைசி உரிமையாளர் காலமாகும் வரை, கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலை எழாது. இறுதி உரிமையாளர் காலமான பின்னர், வாரிசுகள் அந்தக் கடனை திருப்பிச் செலுத்தி வீட்டை தங்கள் பெயரில் வாங்கிக் கொள்ளலாம்.

முதுமைக் காலத்தில் உதவுவதற்காக உருவான மற்றொரு திட்டமான தேசிய ஓய்வூதிய திட்ட'த்தில் (என்.பி.எஸ்.) இணைவதற்கு முதுமை வரை காத்திருக்க வேண்டியதில்லை. இளமையில் பணி காலத்தில் ஒரு நபர் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கணக்கைத் தொடங்கினால், அவர் வேறு எந்த நிறுவனத்துக்கு மாறினாலும், தொடர்ச்சியாக ஒரே என்.பி.எஸ். கணக்கை வைத்திருந்து, அதில் ஓய்வு காலத்துக்கான தொகையைச் செலுத்தி வரலாம். ஓய்வூதியத் திட்டம் இல்லாத தனியார் துறை ஊழியர்கள், தங்கள் முதுமை கால வருவாயைத் திட்டமிட்டுக் கொள்ள இது மிகவும் உதவும். அமைப்பு சாரா தொழில்களில் உள்ளவர்களும் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து, கணக்குத் தொடங்கி, தங்கள் பணி காலம் முழுவதும் அதைப் பராமரித்து, பலன் பெற முடியும்.

அந்தக் கணக்கைத் தொடங்கிய நபருக்கு 60 வயது நிறைவடையும்போது, அவரது கணக்கில் செய்துள்ள முதலீட்டின் அடிப்படையில் அவர் ஆயுள் காலம் வரை ஓய்வூதியம் பெறலாம். பணி— ஊதிய பாதுகாப்பற்றோரில் சிலருக்கு தற்போது இந்தத் திட்டம் சிறு ஓய்வூதியத் தொகையை அளித்து வருகிறது என்றாலும், இந்தத் திட்டம் இன்னும் பரவலான முறையில் மக்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை.

இந்தத் திட்டங்களைத் தவிர, வங்கி சேமிப்புக் கணக்கு, வைப்புத் தொகை போன்றவற்றில் முதியோருக்கு என அதிக வட்டி விகிதம், பல விதமானக் கட்டணங்களில் அவர்களுக்கு சலுகை நடைமுறையில் உள்ளன. மேலும், ரயிலில் படுக்கை வசதியில் சலுகை — முன்னுரிமை, பேருந்துகளிலும் பிற போக்குவரத்து வசதிகளிலும் முதியோருக்கு இருக்கை — முன்னுரிமை உள்ளிட்ட சில சலுகைகள் அளித்து, முதியோர் நல்வாழ்வுக்கு வழிகோலப்பட்டுள்ளது.

நமது வாழ்நாளின் துடிப்பான காலகட்டத்திலேயே, சமூகத்தின் ஏணிப்படிகளில் துள்ளியேறும் பருவத்திலேயே, மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நட்புகளை வளர்த்துக் கொள்வதும் பிறர்க்கு உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதும் அவசியம். உதவி—ஆதரவு தேடி வளர்த்துக் கொள்வது என்பது அவர்களின் வாழ்வின் அந்திப் பொழுதில் நடக்கிற காரியமல்ல.




இவையெல்லாம் ஒருபுறமிருக்க, முதியோரின் இலையுதிர்' காலத்தில் அவர்களுடைய மன நலன் குறித்து சிந்திக்க வேண்டியதும் முக்கியமல்லவா?

கடந்த இருபது ஆண்டுகளாக இந்தக் கருத்தைப் பற்றி ஏராளமான கட்டுரைகளும் ஆய்வுகளும் குவிந்துள்ளன. இவை எல்லாவற்றிலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் விஷயம், பிணைப்பு' என்பதாகும். அதாவது, முதியோர் பிறருடன் தொடர்பு கொண்டிருப்பது, பிணைந்திருப்பதுதான் மிகவும் முக்கியம் என்கிறது. முதியோர் நலனில் அரசும் சமூகமும் சில நல்ல முயற்சிகளை எடுத்தாலும்கூட, தற்போதைக்கு அவை பலவீனமாகவே இருக்கின்றன. நமது நாடு மிகவும் பரந்து, விரிந்திருக்கிறது; பொருளாதார வளம் போதாது; இங்கு மாற்றங்கள் மெதுவாகத்தான் ஏற்பட முடியும்.

முதியோர் சுயமாக தங்களுக்கு என்று எதுவும் செய்து கொள்ள முடியாதா? தங்கள் வயதையொத்த அந்நியர்களுடன் — புதியவர்களுடன் நட்பைத் தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்ய நாம் நேரம் ஒதுக்குவோமானால், பின்னாளில் அது நமக்குப் பெரும் வெகுமதிகளை அள்ளித் தரும்.

அனைத்து முதியோரும் தங்களுடைய உரிமைகளைப் பற்றி அறிந்திருக்கிறார்களா என்பது கேள்விக்குறியே. பெண்கள், படிப்படியாகத் தங்களுக்கு உள்ள உரிமைகளைப் பற்றி அறிந்து கொண்டு வருகின்றனர். அதே போல, ஓய்வு காலத்துக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்பவர்கள், தங்களது உரிமைகள் குறித்து அறிந்திருப்பதும், அவசியம் ஏற்படும்போது அவற்றால் பயன் பெறுவது முக்கியமாகும்.

முதுமைக் காலத்தில் புனித இடங்களுக்குச் சுற்றுலா செல்வோர், தம் வாழ்வின் இறுதி ஆண்டுகளில் சந்நியாசம் வாங்கிக் கொள்வோர் — இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகச் சிறியதுதான். எல்லா முதியோருக்கும் அந்த வழிமுறை சரியான தீர்வாக அமைந்துவிடாது.


# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018


### JANUARY





### FEBRUARY




### MARCH




### APRIL




### MAY





### JUNE




### JULY




### AUGUST




### SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा